தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1980 ஜூலை 11

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்".

செய்யத் தகாத செயல்களைச் செய்வதினாலும் காரியம் கெட்டு விடும், செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் விடுவதினாலும் தீங்கு உண்டாகும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குமரி அணைத் திட்டம்

* கு. கா. வி. எண் 12—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி அணை கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

(ஆ) இத்திட்டப்பணி எந்நிலையில் உள்ளது ?

(இ) எப்பொழுது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) குமரி அணையை விரிவு படுத்தும் வேலைக்கும் மற்ற சிறப்பு சிறிய பாசனத் திட்டங்களுக்கும் சேர்த்து, 1980-81 ஆண்டிற்கு ரூபாய் 21.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) குமரி அணையை விரிவுபடுத்தும் வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

[1980 ஜூலை 11

(இ) தொடங்கப்படும் நாளிலிருந்து இரண்டு அல்லது மூன்று வருடங் களுக்குள் இவ்வேலையை முடித்து விடலாம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் வருண பகவான் கருணை காட்டிக் கொண்டேயிருக் கிறார். அதனால் வருமுன் காக்கும் வகையில் அரசு தமிழ் நாட்டிலுள்ள அணைக்கட்டுகள் அனைத்தையும் செப்பனிட்டு செம்மைபடுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் பருவ மழை பொய்க்காமல் நல்ல மழை தொடர்ந்து பெய்து வருகிறது. எவ்வளவுதான் நீர்ப் பாசனம் வேண்டுமென்று விரும்பினாலும் கூட பல்வேறு இடங்களில் அணைக்கட்டுகளில் உடைப்பு ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகிற நிலைமையினால் வருத்தம் ஏற்படு கிறது. அதை கவனத்தில் கொண்டு வருமுன் காக்கிற அடிப்படையில் அணைக்கட்டுகள் செப்பனிடப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், பெரிய அணைகளில் சூப்பர் ஸ்டாண்டர்ட் என்று சொல்லப்படுகிற வகையில் எவ்வளவு வெள்ளம் வந்தாலும் தாங்குகிற வகையில் பலப்படுத்தப்படுகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வருண பகவானுக் கும், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்ன உறவு? அது சம்பந்தப்பட்ட தகவல் ஏதாவது அவருக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே. நல்ல வேளை வருண பகவானைச் சென்று பார்த்து தகவலைக் கொண்டு வரச் சொல்லவில்லை நம் உறுப்பினர். எனக்குத் தெரிந்த வரையில், "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்னும் வாக்கிற்கேற்ப "நல்லவர் எம். ஜி. ஆர். அவர்கள் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" இந்த உறவுதான் எனக்குத் தெரியும். அந்த தகவல்தான் என்னிடம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குமரி அணை கட்டுவதன் மூலமாக எத்தனை எக்கர் நிலங்கள் ஆயக்கட்டின் கீழே வருகிறது. ஏற்கெனவே இருக்கிற நிலங்களுக்கு அதிகமாக பாசன வசதி பெறப்படுமா? அல்லது பாசன வசதி இல்லாத புதிய நிலங்கள் இந்த ஆயக் கட்டின் கீழே கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

1980 ஜூலை 11]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாறு தேக்கத்திலே கட்டப்படுகிற 8-வது அணையாகும் இது. சுசீந்திரம் பகுதிகளுக்கு இந்த அணையிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படும். 1970 ஆம் ஆண்டிலேயே இந்த அணை உடைந்து விட்டது. அதற்குப் பிறகு தற்காலிகமாக வளைவு அணைகள் கட்டி நீர்ப் பாசனம் கொடுக்கப்பட்டது. நம்முடைய ஆட்சிக் காலத்தில் புதிதாக எஸ்டிமேட் தயார் செய்து இந்த அணையை பலப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சொல்லி 1980-81 ஆம் ஆண்டிலே 21 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போடப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அவை வந்த பிறகு, இந்த அணையைக் கட்டி முடிக்கும் வேலைகள் தொடங்கப்படும். இதைக் கட்டிய பிறகு முன்பு கிடைத்து வந்த நீர்ப்பாசன அளவிற்குக் குறையாமல் தொடர்ந்து கொடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் வின்சென்ட் அவர்கள், வருண பகவானுக்கும், முதல்வர் அவர்களுக்கும் இருக்கிற நெருக்கத்தைப் பற்றிக் கேட்டார்கள். தமிழகத்திலே சில இடங்களில் திடீரென்று தீ பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அக்கினி பகவானுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் என்ன தொடர்பு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நீங்களே சொல்லியது போல் இது நீர்ப்பாசனத் துறை சம்பந்தப்பட்டது. வருண பகவானுக்கும் எனக்கும்தான் உறவே தவிர அக்கினி பகவானுக்கும் எனக்கும் எந்தவித உறவும் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு வரட்சி ஏற்பட்டதன் காரணம் புரட்சித் தலைவர் அவர்களின் கண் பார்வை அங்கே இல்லையோ. அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், வருண பகவானுக்கும் அவருக்கும் உறவு என்று சொன்னார்கள்—அவருடைய கடாட்சம் இல்லையோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எதற்கும் சில விதி விலக்குகள் இருக்கும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் காரணம் என்று சொல்ல மாட்டேன். இருந்தாலும்கூட அந்தப் பகுதி

களில் இப்போது நல்ல மழை பெய்திருக்கிறது. நிலத்தடி நீர் நிரம்பயிருக்கிறது. கிரவுண்ட் வாட்டர் அந்தப் பகுதிகளில் நிறைந்திருக்கிறது. ஆகவே வரட்சியின் கடுமை சுமாராகவே பாதித்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி இருந்தவரை நம் நாட்டில் பவர் இருந்தது. அவர்களது ஆட்சி போனவுடன் பவர்கட் வந்தது. இடையில் பவர்கட் இருந்தது. மீண்டும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்தவுடன் பவர்கட் போய் நல்ல பிரகாசம் வந்தது. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்தவுடன் நல்ல மழை பெய்தது. ஆகவே, இதற்கிடையில் உள்ள நிலைபற்றி, அதற்கான காரணங்கள் குறித்து ஆராய்ச்சி செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் கேள்வியைப் பார்த்தால் ஏதோ மேல் உலகத்தில் பெரிய சர்ச்சை நடந்து கொண்டிருப்பதைப் போல் தெரிகிறது. அதுபற்றிய தகவல் இல்லை. கிடைத்தால் சொல்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மழை பெய்து அணைக்கட்டுகள் நிரம்பியிருக்கின்றன என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கல்லணை வடவாறு விரிவாக்க கால்வாய் பகுதிகளில் தண்ணீர் செல்லவில்லை. இதில் அலுவலர்கள் சதி ஏதாவது இருக்குமா? கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்லவில்லை. இதுவரையில் தண்ணீர் அங்கு செல்லவில்லை. காரணம், என்ன என்பதை அரசு அறிவிக்க முடியுமா? பட்டுக்கோட்டை, மன்னார்குடி தொகுதிகளில் கல்லணை, வடவாறு விரிவாக்க கால்வாய்ப் பகுதிகளில் தண்ணீர் செல்லவில்லை. அலுவலர்கள் சதி ஏதாவது இருக்குமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி எல்லா அணைக்கட்டுகளும் நிரம்பி தண்ணீர் எல்லாக் கால்வாய்களுக்கும் திறந்து விடப்பட்டிருக்கிறது. ஆனால் சில பகுதிகளில் முறை வைத்து இன்னின்ன தேதிகளில் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற முறையில் தண்ணீர் விடலாம். அந்த அடிப்படையில் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் நீர் போயிருக்கிறதா என்பது தெரியாமல் இருக்கலாம். ஆகவே தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்லப்படும்.

1980 ஜூலை 11]

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் வருண பகவானுக்கும் முதல் அமைச்சர் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய செய்தித் தாள்களில் மீண்டும் வெள்ளம் வந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதுபற்றி அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வெள்ளம் அதிகமாக வந்திருப்ப தாகத்தான் திரு. வின்சென்ட் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சர்ப்ளஸ் வாட்டர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நதி நீர், மேல்நோக்கியோடும் நீர் குறைவாக இருக்கிறது. சமீப காலத்தில் பருவ மழை உரிய காலத்தில் பெய்ததன் விளைவாக எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இன்று நீர்ப்பாசனம் அனைத்து நிலங்களுக்கும் கிடைத்து வருகிறது. எனவே, அதிகமாக வெள்ளம் வந்திருக்கிறது என்பதே வருண பகவானுக்கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் உள்ள நெருக்கத்தைத் தான் காட்டுகிறது என்பதைத்தான் உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : இன்று வாய்க்கால்களில் ஆக்கிரமிப்பு நடந் திருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, குளங்களுக்குத் தண்ணீர் வந்து சேர அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை களைத் துரிதமாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தைத்தான் பல சந்தர்ப்பங்களில் பல உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய்களைச் சீர்படுத்தி அதன் மூலம் நீர்ப்பாசனம் முழுமையாகக் கிடைக்கக்கூடிய அளவிற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : அண்ணா அவர்கள் மழை பெய்து வெள்ளம் வருவது, வரட்சி போன்றவற்றைக் குறிப்பிடும்போது. மகான் வந்தான் மழை பொழிந்தது, பாவி வந்தான் மழை பொழியவில்லை என்று சொல்லக்கூடிய ஐதிக கருத்துக்களுக்கும் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தமில்லை என்று பல்லாண்டுகளாக வலியுறுத்தி வந்தார்கள். அண்ணாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் இம்மாதிரி இயற்கையாக நடக்கின்ற காரியங் களுக்கும் மனிதர்களுக்கும் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது முறைதானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதற்காகத்தான் நான் திரு. வின்சென்ட் அவர்கள் கேட்டதற்கு, வருண பகவானுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்புபற்றி எனக்குத் தெரியாது என்று கூறி தகவல் இல்லை, கிடைத்தால் சொல்கிறேன் என்று சொன்னேன். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்ற அந்தப் பாடலை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அது ஒரு பழம்பெரும் தமிழ் பாடல், நல்லவர் ஒருவர் புரட்சித் தலைவர் உள்ளதால் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்ற அந்த அடிப்படையில் இப்போது மழை பெய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்று சொன்னார்கள். வாஸ்தவம், கடந்த மூன்று ஆண்டுகளாக நல்ல மழை பெய்து இருக்கிறது. ஒருசில இடங்களில் அதிகமான அளவிற்கு வருண பகவான் கவனித்ததன் காரணமாக மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் நல்ல மழை பெய்து வைகையின் இரண்டு கரைகளும் உடைந்து சல்லிசல்லியாகப் போயிருக்கிறது. ஆகவே அப்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக கால்வாய்க்களைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல், வருமுன் காக்க வேண்டுமென்ற அடிப்படையில் பாழடைந்த, பாதிக்கப்பட்டுள்ளவைகளை சரி செய்வதற்கு இந்த அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இனிமேல் இப்படிப்பட்ட வெள்ளம் வந்தால், அந்தப் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருக்க அணைகளின் கரைகளைப் பலப்படுத்தவும், கால்வாய்களை ஆழப்படுத்தி, பலப்படுத்தி விரிவாக்கவும் பணிகளை முறையாக இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

திரு. மு. ப. முனுசாமி பேரவைத் தலைவர் அவர்களே, நல்லார் ஒருவர் உளரேல் என்று மாண்புமிகு அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைக் குறிப்பிட்டார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் யார் என்பதைக் குறிப்பிடத் தயாராக இருக்கிறார்களா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நல்லார் ஒருவர் என்று புரட்சித் தலைவர் அவர்களைச் சொன்னேன். அவர் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ள நல்ல தொண்டன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

அலுமினியத்துக்கு மின்சாரம் என்ற தமிழக-கேரள பண்டமாற்று ஒப்பந்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. ரா. உமாநாத் அவர்கள் கொண்டு வருவார்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "அலுமினியத்தை விநியோகத்தை மாநில அரசிடமிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்டதால் அலுமினியத்துக்கு மின்சாரம் என்ற தமிழக-கேரள அரசுகளின் ஒப்பந்தம் பாதிக்கப்பட்டு மால்கோ நிறுவனம் மூடப்படும் அபாயம் குறித்து" மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980, பிப்ரவரி திங்களில் கேரளாவுடன் இந்த அரசு மின்சாரம் தொடர்ந்து பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. அப்போது கேரள மாநில மின் வாரியத்தால் குறிப்பிடப்படுகின்ற மின் கடத்தி உற்பத்தியாளர்களுக்கு மால்கோ நிறுவனம் திங்கள் ஒன்றுக்கு 300 டன் அலுமினியம் வழங்கப்பட வேண்டுமென்றும் இதற்குத் தேவையான மின்சாரம் கேரளாவிலிருந்து பெறப்படும் மின்சாரத்திலிருந்து மால்கோ நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்றும் கேரள அரசு கேட்டுக் கொண்டது. இரு மாநிலங்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இதற்கு வகை செய்யப்பட்டது.

ஆனால் 1—4—1980 முதல் மத்திய அரசு அலுமினியம் பங்கிடுவதை இன்றியமையா பொருள்களுக்கான சட்டத்தின்படி கட்டுப்பாடு செய்தது. இதன்படி மால்கோ நிறுவனம் அலுமினிய கட்டுப்பாடு அதிகாரியால் குறிப்பிடப்படுகின்ற மின் கடத்தி உற்பத்தியாளர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் மட்டுமே அலுமினியம் வழங்கலாம். இதன் காரணமாக கேரளாவுடன் செய்து கொண்ட பண்டமாற்று ஒப்பந்தம் 1—4—1980 முதல் நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.

குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் இந்த அரசு மேற்குறிப்பிட்ட மத்திய அரசின் ஆணையால் அலுமினிய உற்பத்தி பாதிக்கப்படுமென்றும், இது நாட்டின் நலனுக்கு ஏற்றதல்லவென்றும் விளக்கி, மத்திய அரசுக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளது. மேலும், கேரளாவிலிருந்து பெற்று மால்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்தினால் உற்பத்தி செய்யப்படும் அதிக அளவு அலுமினியத்தை இந்த அலுமினிய கட்டுப்பாட்டு ஆணையிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். 21—6—1980 அன்று புதுடெல்லியில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில், இதை நானும் வற்புறுத்தியுள்ளேன்.

இது குறித்து மாநில அரசு மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய நாட்டினுடைய எகனாமிக் லிவர்ஸ், பொருளாதாரக் கருவிகள் மத்திய சர்க்காரின் கையிலே இருக்கின்ற காரணத்தினால், மாநிலத்தின்மீது மத்திய அரசு ஓர வஞ்சனை ஆட்டிடியூட் இருக்கிறது. ஏற்கனவே பல விஷயங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இப்போது மின்சார விநியோகத்தை மத்திய அரசு எடுக்கப் போவதாக மத்திய அமைச்சர் 'திரட்டன்' பண்ணுகிறார், இன்னொரு அமைச்சர் ஆளுங்கட்சியினர் மத்தியில் லா அண்டு ஆர்டரை அவர்கள் எடுத்துக் கொள்ளப்போவதாக 'திரட்டன்' பண்ணுகிறார். இப்படி அலுமினியம் டிஸ்டிரிபியுஷன் சிஸ்டத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எடுத்தால், மிச்சம் நம் கையில் என்ன இருக்கும்? பே அண்டு யூஸ் கழிப்பிடங்கள் கட்டுவதற்குத்தான் மாநில அரசுக்கு மிச்சம் இருக்குமா? ஆகவே, தலைவர் அவர்களே, இது ஆபத்தான விஷயமல்ல என்று நாம் இருந்து விடக் கூடாது. அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசிகள் ஏறியிருக்கின்ற இந்த நேரத்திலே அவற்றைக் குறைப்பதற்கு மத்திய அரசு எவ்வித

1980 ஜூலை 11] [திரு. ரா. உமாநாத்]

நடவடிக்கையும் எடுக்காமல், அலுமினியம் விநியோகம் போன்றவற்றில் கைவைப்பது என்றால் என்ன அர்த்தம்? நான் கருதுகிறேன், இது ஒரு நல்ல ஒப்பந்தம் என்று . . . (குறுக்கீடு)

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர்; கேள்வி கேட்கும் போது இப்படிப் பேசுவது சரியா?

திரு. ரா. உமாநாத் : குவெஸ்டியனுக்கும் கால் அட்டன்ஷன், நோட்டீசுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை மாண்புமிகு சித்தன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கேள்வி நேரத்தில் நேரடியாகக் கேள்வி கேட்கவேண்டும். இதிலே அப்படி அல்ல.

நமக்கு மின்சாரம் கிடைக்காமல் செய்யவும் அவர்கள் விரும்புகிற நேரத்தில் இந்த பாக்டரியை நிறுத்தி வைக்கவும் இந்த ஏற்பாடு என்று சொல்ல விரும்புகிறேன். அலுமினியம் மின்சார ஒப்பந்தத்தை மத்திய அரசாங்கம் நிறுத்தி வைத்திருப்பதை அவர்கள் மறு பரிசிலனை செய்யவேண்டுமென்று சொல்வதற்கும், அவர்கள் என்னதான் கான்க்ரீட் ரீசன்—'அபார்ட் ஃப்ரம் பப்ளிக் இன்டரஸ்ட்' வைத்திருக்கிறார்கள் என்று, அமைச்சர் அவர்கள் டில்லியில் பேச்சு வார்த்தை நடத்தியபோது சொன்னார்களா? அதிலே நம்முடைய அரசாங்கத்தின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டில்லியில் நடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டில், இத்தகைய உத்தரவு, கேரளத்திலிருந்து மின்சாரம் பெறப்பட்டு அதன்மூலம் உற்பத்தி செய்யப்படுகிற அலுமினியத்திற்குப் பொருந்தாது என்று நம்முடைய அரசு சார்பிலும் அதற்கான நியாயங்கள் எடுத்து வைக்கப்பட்டன. கேரள அரசும் அதற்கான நியாயங்களை எடுத்து வைத்தது. ஆனால் எத்தகைய பதிலும் மத்திய மின்சாரத்துறை அமைச்சகத்திலிருந்து தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் பத்திரிகைகளில் வருகிற செய்தி அலுமினியம் என்பது மிக முக்கியமான மூலப்பொருள், அது தேசம் முழுவதற்கும் வேண்டும், அதை இரு மாநிலங்கள் பகிர்ந்து கொள்வது தேசிய நலனுக்கு முரணாக ஆகிவிடும் என்பது போன்ற ஒரு கருத்து பத்திரிகையில் வருகிறது. அதுவும் சரியான கருத்து அல்ல. ஏனென்றால் உற்பத்தி ஆகிற அலுமினியம் எல்லோருக்கும் கிடைக்கிறது. ஆனால் மால்கோவைப் பொருத்த வரை ஒரு விசேஷ தன்மை இருக்கிறது. மூன்று காரணங்கள் இருக்கின்றன.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஜூலை 11

ஒன்று, கேரளா மின்சாரம் கொடுக்கிறபோது அதன் மூலம் அதிகமாக அலுமினியம் உற்பத்தியாகிறது. இரண்டாவது கேரளா மின்சாரம் தரவில்லை என்றால் அந்த அலுமினியம் இல்லை. மூன்றாவது அந்த அலுமினியத்தை எப்படிப் பெறமுடியும் என்றால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தால் தான் பெற முடியும். ஆகவே, இருக்கும் அலுமினிய விநியோகத்தை இது பாதிக்காது. கேரளத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்று கூடுதலாக உற்பத்தி செய்கிற அலுமினியத்தை நாங்களே பங்கு போட்டுக் கொள்வது என்பதுதான். ஆகவே, கேரளா புல்லைப் போடும், பாலை இவர்கள் கறந்து கொள்வார்கள் என்று சொல்வது சரியான வாதம் அல்ல.

மேலும் ஏதோ இரண்டு மாநிலங்கள் மட்டுமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன என்றும் கருதுவதற்கில்லை. கேரள அரசு அந்த அலுமினியத்தை வாங்கி அலுமினியப் பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கொடுக்கிறது. அப்படி உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் கேரளத்தில் மட்டும் விற்பனையாவதில்லை. தேசம் முழுவதும் விற்பனையாகிறது.

இது தேசிய நலனுக்கு முரணானது என்று சொல்ல முடியாது. 'ஹிண்டால்' போன்ற பெரிய நிறுவனங்கள் நிறைய உற்பத்தித்திறன் கொண்டவை. தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மால்கோ போன்ற நிறுவனங்கள், உற்பத்தித்திறன் குறைவாகக் கொண்டவை. டோட்டல் கெபாசிடி குறைவு. 30 சதவிகிதம் மின் வெட்டு போடுகிறபோது லாப நஷ்டக் கணக்குப் பார்த்தால் தொழில் நஷ்டத்தில் போய்விடும். கூடுதலாக உற்பத்தி செய்யும் வாய்ப்பு கிடைக்கிறபோது தொழிலும் ஆரோக்கியமான நிலையில் இருக்க வாய்ப்பு ஏற்படும். இந்தக் காரணங்களை எல்லாம் எடுத்துச் சொன்னோம். ஆனால் அங்கிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

திரு. ரா. உமாநாத் : கனம் அமைச்சர் அவர்கள் மத்திய அரசு எடுத்திருக்கும் முடிவின் காரணமாக உற்பத்தி எப்படி மால்கோவில் பாதிக்கிறது என்று தெளிவாகக் கூறிவிட்டார்கள். அங்கிருந்து பதிலும் இல்லை. இதே நிலைமை மத்திய சர்க்காரில் தொடருமானால் மால்கோ நிறுவனத்தின் ப்ரொடக்ஷன் பாதிக்கப்பட்டு பாக்டரியும் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் ஸ்டேட்மெண்டில் க்ளோஷர் பொசிஷனுக்குப் போகலாம் என்றும் கூறியிருக்கிறார். அதிலிருந்து பாதுகாக்க இப்படிப்பட்ட நிலைமை தொடராமல் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி யோசிக்கப்பட்டதா? அந்த பாக்டரி தொடர்ந்து நடக்க நடவடிக்கை எடுப்பார்களா?

1980 ஜூலை 11]

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த நிலை பற்றி மீண்டும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

* திரு. க. அன்பழகன் : மிக முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தாலே தங்களுடைய அனுமதியோடு நான் கேட்க விரும்புகிறேன்—எதிர்க்கட்சி என்ற உரிமை காரணமாக. இந்த மின்சார வெட்டு தீர்ந்துவிட்ட ஒரு சூழ்நிலையிலே இப்பிரச்சினையிலிருந்து, இக்கட்டிலிருந்து மால்கோவை விடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உயர் அழுத்த மின் தொழில்களுக்கு, 20 சதவீதம் உச்சவெட்டு தேவை என்ற நிலைமை இருக்கிறது. அது பொதுவாக பாதிக்கக்கூடிய உத்திரவு. இது தேவைதானா? இத்தகைய உத்திரவைப் போடுவதற்கு முன்னர் எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா என்று சொல்வது நம்முடைய கடமை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர்கள் விடுதி சம்பந்தமாக தங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். எனக்கு ஹாஸ்டல் பாக்கி கிடையாது. எனக்கு ரெவின்யூ ரெக்கவரி போட்டு, கலெக்டர் ஆபீஸ் போய், அங்கிருந்து தாலுக்கா ஆபீஸுக்குப் போய் என்னுடைய கவுரவத்தை பாதிக்கக்கூடிய நிலையில் அவர்கள் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ராஜமாணிக்கத்தினுடைய தனிப் பிரச்சினை : இப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்தப் பிரச்சினையை பேரவையில் எழுப்பினால் பேரவையின் அலுவலை நடத்திச் செல்ல முடியாது. இதுபற்றியெல்லாம் பேரவைத் தலைவரை அவரது அறையில் சந்தித்துச் சொல்லவேண்டும்.

3 அறிவிப்பு.

நன்செய்த் தீர்வை, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆ. வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1980 ஜூலை 11]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிக்கை அளித்தல்

அமைச்சர் மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அளித்த பதிலில் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 107-இன் கீழ் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 10—7—1980-ல் வனம் மற்றும் சின்கோனா துறை சம்பந்தப்பட்ட கோரிக்கை மீது நடந்த விவாதத்தின்போது நான் பதிலளிக்கையில், திருப்பத்தூர் அருகில் சந்தன எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்பாடாகி வருகிறது என்றும், அதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதென்றும் குறிப்பிட்டுள்ளேன். இந்தக் குறிப்பின் மீது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. ப. சுந்தரம் அவர்கள் சந்தன எண்ணெய் தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தால், இது தனியார் நிலமா, அல்லது வேறு நிலமா, தனியார் நிலமானால் அந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்று குறிப்பிட முடியுமா என்று வினா எழுப்பினார். இவ்வினாவிற்கு பதில் அளிக்கும் முறையில், என்னிடம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதென்ற தகவல் மட்டும் உள்ளது. ஆனால், வேறு விவரங்கள் இல்லையென்று பதில் அளித்தேன். இதில் ஒரு சிறு மாற்றத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பத்தூரில் 5.54 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அது சந்தன கட்டைகளை சேமிக்க ஒரு கிடங்கு கட்டவே அன்றி, சந்தனத் தைல தொழிற்சாலைக்கு அல்ல என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1980—81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித்துறை.

(ஆ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வை.

(இ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

(ஈ) கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்.

(உ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

(ஊ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

கோரிக்கை எண் 1.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,63,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் வீடுகளுக்கு நிலவரி வசூல் செய்வதை நிறுத்தப்படாததைக் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,63,05,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, நிலவரி மூலம் அதிகம் அரசுக்குக் கிடைக்காமல் அதேசமயம் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு தொல்லையும், இம்சையும் கொடுக்கின்ற நிலவரி வசூல் பண்ணுவதை நிறுத்தக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,63,05,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

1980 ஜூலை 11]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகளின் நிலத்திற்கு தீர்வை ரத்து செய்யப்படாமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,63,05,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவகாமி : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் இணைப்புச் சாலைகளுக்கு விட்டுக்கொடுத்த நிலத்தின் மீது உள்ள நிலவரியைத் தள்ளுபடி செய்து கொடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,63,05,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண் 2.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 89,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாக செல்லும் போலீஸ்காரருக்கு சரியான பாதுகாப்பு அளிக்க விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

Thiru N.S.V. CHITTAN : Sir, to discuss about the failure of the Government to check the molasses being used for illicit distillation, I move—

"That the allotment of Rs. 89,14,000 under Demand No. 2 State Excise Department, be reduced by Rs. 100/-"

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, நல்ல தரமான மதுவகைகள், உபயோகப்படுத்தும் சாதாரண மக்களுக்கு மலிவு விலையில் கிடைக்கச் செய்து, கண்டதை அருந்திவிட்டு சாவதைத் தடுப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

கோரிக்கை எண் 4.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,79,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, புதிதாக வாங்கப்படும் டைப்ரைட்டர் மெஷின்களுக்கு ஒருமுனை வரியாக வசூல் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,79,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, சைக்கிள் உறுப்புகளுக்கு வணிக வரியை அறவே நீக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,79,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(முற்பகல் 9.30)

கோரிக்கை எண் 5.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

1980 ஜூலை 11]

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சென்னையில் கருவூலத்தில் குறைந்த விலையில் முத்திரைத் தாள்கள் விற்பனையில் கிடைக்கப்பெறாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 74,44,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ".

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

to discuss about the failure on the part of the Government to give up the collection of court fee stamps from widows, handicapped, etc. for petitions presented by them to Government, move—

" That the allotment of Rs. 74,44,000 under Demand No. 5 Stamps–Administration, be reduced by Rs. 100/- "

கோரிக்கை எண் 41.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, பெரம்பூர் தொகுதியில் ஒவ்வொரு ஆண்டும் தீ விபத்து, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து காப்பாற்ற காப்பகங்கள் ஏற்படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,97,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

to discuss the failure of the Government to prevent the role of middle men in misappropriating the reliefs in cash and kind given to the sufferer, I move—

" That the allotment of Rs. 2,97,000 under Demand No. 41-Relief on account of Natural calamities, be reduced by Rs. 100/- "

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, 1979 கடைசியில் பெருமழை பெய்து வெள்ளத்தால் கோவை நகரம் புலிய குளத்தில் உள்ள அம்மன்குளம் பகுதியில் நாசமடைந்த குடிசை வாசிகள் பலருக்கு உதவி நிதி கொடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,97,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, இயற்கைச் சீற்றத்தால் அரிஜன காலனிகள் சேதமடைந்து இருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,97,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

கோரிக்கை எண் 46.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரையின்மேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 18,83,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, to discuss policy, I move—

"That the allotment of Rs. 18,83,15,000 under Demand No. 46– Compensation and assignments, be reduced by Rs. 100/-"

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, to discuss policy, I move—

"That the allotment of Rs. 18,83,15,000 under Demand No. 46– Compensation and assignments, be reduced by Rs. 100/-"

1980 ஜூலை 11]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இளையாங்குடி பஞ்சாயத்து யூனியன் சாலைக் கிராமம், மரம் ஏலம் விட்ட தொகை ரூ. 41 ஆயிரம் மூன்று வருடங்களாக பஞ்சாயத்துக்கு வரவு வைக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 41—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகிற ரூ. 18,83,15,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் * வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. பாபு கோவிந்தராஜன் : தலைவரவர்களே, இங்கே பேச எனக்கு அனுமதி தந்ததற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளிலே எக்சைஸ் பற்றியும், சேல்ஸ் டாக்ஸ் பற்றியும் வந்திருக்கிறது. பொதுவாக, என்னுடைய சொந்தக் கருத்துக்களை இங்கே வைக்க நான் தயாராக இருக்கிறேன். இந்த எக்சைஸ், சேல்ஸ் டாக்ஸ் இரண்டுமே புதிதாக உருவாகியிருக்கின்றன. சேல்ஸ் டாக்ஸ், முதலிலே ராஜாஜி காலத்திலே மதுவிலக்கை கொண்டு வந்த காலத்திலே ½ சதவிகிதம் கொண்டு வரப்பட்டது. இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு அது பெரிய வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமையிலே இந்த சேல்ஸ் டாக்ஸ் மூலமாகவும், மதுவிலக்கு கொள்கை மூலமாகவும் அரசாங்கத்திற்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் லாபம் வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே, அதுபற்றி இந்த அவையிலே சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சேல்ஸ் டாக்ஸ் பொதுவாக எல்லா துறைகளிலிருந்தும் வந்தாலும், சினிமா துறையிலேயிருந்து அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் என்ற முறையிலே, சினிமாத் துறையிலேயிருந்து அதிகமான வருமானம் வந்து கொண்டிருக்கிறது. பொதுவாக, ஆட்சியாளர்கள், எதைச் செய்தார்களோ செய்ய வில்லையோ சினிமாத் தொழிலைப் பொறுத்தவரையிலே நல்லதைச் செய்திருக்கிறார்கள். பொதுவாக, டூரிங் சினிமக்களுக்கும், பி, சி, பிரிவுகளிலே வருகின்ற தியேட்டர்களுக்கும் கம்பவுண்டிங் டாக்ஸ் போட்டு நல்ல சௌகரியங்களைச் செய்து தந்திருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. அதே போன்று, நகரங்களிலுள்ள

* கொள்கை விளக்கக் குறிப்புகள் 469, 539, 554 பக்கங்களில் இணைப்புகள் I, II, III, ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

ஏ குரூப் டாக்கிஸ்களுக்கும் காம்பவுண்டிங் டாக்ஸ் கொடுக்கப்பட வேண்டும். காம்பவுண்டிங் டாக்ஸ் இல்லாவிட்டாலும், இப்பொழுது உள்ள வரி முறையை மாற்றியமைக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த டாக்ஸ் விவகாரங்கள் எல்லாம் 20 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப் பட்டவையாகும். 30 பைசா டிக்கட்டுக்கு 1/4 வரி போடப்படுகிறது. 30 பைசா முதல் 1.50 வரை 1/3 வரியாகவும், 1.50-க்கு மேலே உள்ளவைகளுக்கு 2/2 வரி போடப்படுகிறது. இப்போதும் அதே முறைகள்தான் நடைமுறையிலே இருக்கின்றன. அதிலே மாற்றமே கிடையாது பொதுவாக இப்போது 30 பைசா என்பது நடைமுறையிலே கிடையாது பெரிய தியேட்டர்களிலே அங்கே இப்போது 1/3, 2/2 மட்டும்தான் நடைமுறையிலே இருக்கிறது. அதைத் தவிர சர்சார்ஜ் வேறு போடுகிறார்கள். ஷோ டாக்ஸ் என்றும் போடுகிறார் கள். எனவே இது பார்ப்பதற்கு அவ்வளவு சரியானதாக இல்லை. எனவே அனைத்தையும் 1/3, அல்லது 2/2 ஆக மாற்றுவது அல்லது மற்ற தியேட்டர் களுக்குக் கொடுப்பதைப்போல காம்பவுண்டு டாக்ஸ் முறையை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விற்பனை வரியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நாம் கடைகளில் சாமான்கள் வாங்கும்போது பில் தரட்டுமா என்று கடைக்காரன் கேட்டால் வேண்டாம் என்று சொல்லி விடுகிறோம். காரணம் 100க்கு 8 ரூபாய் அல்லது 10 ரூபாய் வரி கொடுக்க வேண்டுமே என்று ஆகவே ஒருமுனை வரியைப் போட்டுவிட்டால் இந்த நிலைமை வராது. ஜனங்களும் ஒருமுனை வரியைத்தான் விரும்புகிறீர்கள். பொதுவாக சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளிடம் கடைக்காரர்கள், வியாபாரிகள் போனால் அந்த அதிகாரிகள், அவர்களிடம் சொல்லுகிறார்கள். இப்போதுள்ள நிலவரப்படி உங்கள் கடையில் இவ்வளவு ரூபாய் வருமானம் வர வேண்டும். அதற்கு இவ்வளவு ரூபாய்கள் டாக்ஸ் கட்டவேண்டும் என்று புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள். இவ்வளவு ரூபாய் டாக்ஸ் போடுவோம். இல்லை என்றால் 'இவ்வளவு' பணம் தா என்று கேட்கிறார்கள். அதற்கொப்ப வியாபாரிகள் நோட்டுப் புத்தகத்திற்குள் பணம் வைத்துக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. இப்படி சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் மிகவும் தொல்லை கொடுக்கிறார்கள்.

அடுத்து ஓட்டல்களுக்கும் வரி போடுகிறார்கள். ஓட்டல்களை தரம் பிரிக்கப் போவதாகச் சொன்னார்கள். அதை 1, 2, 3, என்று தரம் பிரிக்கும் வேலையை உடனடியாகச் செய்யுங்கள். ஓட்டல் பண்டங்களின் எடையை

1980 ஜூலை 11] [திரு. பா.பு. கோவிந்தராஜன்]

பார்க்கப் போகிறோம். விலைவாசியைக் கட்டுப் படுத்துவோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவைகள் எல்லாம் முக்கியமல்ல. தரம்தான் முக்கியம். நீங்கள் ஒரு உத்தரவு போட்டு இட்டிலி 10 பைசாவுக்குப் போடுங்கள் என்றால் அதை போடுவார்கள், அது இட்டிலி போல் இருக்காது, மண்ணாங் கட்டியைப் போலத்தான் இருக்கும். சென்னையில்கூட ஓட்டல்கள் இருக்கின்றன. 11 ரூபாய்க்கும் சாப்பாடு போடக்கூடிய ஓட்டல்கள் இருக்கின்றன. 5 ரூபாய்க்கும் சாப்பாடு போடக்கூடிய ஓட்டல்கள் இருக்கின்றன. 5 ரூபாய்க்கு போடுகிறார்கள், ஏன் 1.50-க்குப் போடுகின்ற ஓட்டல்களும் இருக்கின்றன. அதல்ல முக்கியம் தரம்தான் முக்கியம். பம்பாயில் உள்ளதைப்போல 'கிரேடு' பிரியுங்கள். கேரளாவிலே ஓட்டல்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது. அங்கே உள்ளவர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை போன்றவைகள் கண்ட்ரோல் விலையில் கொடுக்கிறார்கள். எனவே அங்கே அந்தத் தொழில் லாபகரமாக இருக்கின்றது. அந்த அளவுக்கு இங்கேயும் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து மதுவிலக்கு. தமிழகத்திலே உள்ள மக்களிலே பெரும் பகுதியினர், ஏறத்தாழ 2½ கோடி மக்கள் மது அருந்துகிறார்கள். அவர்கள் வெளியே சொல்லிக்கொள்வது இல்லை. மதுவிலக்கினால் ஒன்றும் லாபம் இல்லை. எம்.ஜி.ஆர். மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்துவதால், அவரை இயேசு என்றும் புத்தர் என்றும் சொல்லுகிறார்கள். அதனால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. அதனால் அதிகமான அளவில் நஷ்டம்தான் ஏற்படுகிறது. அப்படி மதுவிலக்கு இருந்தாலும், கள்ளச் சாராயக் கடைகள் இல்லாமல் இல்லை. என் தொகுதியான கடலூரில் 1973-74-லே 4 கடைகள் தான் இருந்தன. நான்கு மூலைகளில் இருந்தன. ஆனால் இப்போது 40 கடைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. சாராயம் மாமூலாக காய்ச்சப்படுகிறது. ஆளுங் கட்சியினரின் தலையீடு இருக்கிறது. தி.மு.க. காங்கிரஸ் ஆண்ட காலத்தில் இவ்வளவு தலையீடு கிடையாது. இப்போது அந்தத் தொழிலை மிகவும் பாதுகாப்பாக நடத்துகிறார்கள். ஆளுங் கட்சிக்காரர்களும், போலீசாரும் லாபம் அடையத் தக்க வகையிலேதான் இருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான லாபமும் இல்லை.

(முற்பகல் 9.40)

சாதாரணமாக குடிப்பவர்கள் குடும்பம் கெட்டுப் போகிறது என்று சொல்வது உண்டு, குடிப்பதால் குடும்பம் கெட்டுப் போவது இல்லை. 100 மில்லி சாராயத்தின் விலை 7 பைசா, 8 பைசாதான். பாரி அன் கோ தயாரிக்கிற

சாராயம் இந்த விலைதான். ஆனால் அரசாங்கம் அதற்கு எக்சைஸ் வரி 73 பைசா, 80 பைசா போடுகிற காரணத்தால், ஏலம் எடுக்கிறவன் 1¼ ரூபாய், 1½ ரூபாய்க்கு எடுத்து விற்கிறான். அந்த விலைக்கு வாங்கி ஒரு தொழிலாளி 400 மில்லி அல்லது 500 மில்லி குடிக்கிறான் என்று சொன்னால்—அவ்வளவு தான் முடியும். 6 ரூபாய் அல்லது 7 ரூபாய் செலவாகும். அவன் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் சம்பாதிக்கிறான் என்று சொன்னால், அதில் ரூபாய் 7 இதற்கே செலவாகி விடுகிறது என்பதால் குடும்பம் கெட்டுப் போகிறது என்று சொல்லலாம். ஆகவே, அரசாங்கம் உற்பத்திச் செலவு 6 பைசா, 7 பைசா என்று இருக்கும் சாராயத்திற்கு 30 பைசா அல்லது 40 பைசா தான் எக்சைஸ் வரி என்று போட்டு விற்கச் செய்தால், ஏலம் எடுப்பவர்கள் குறைந்த விலைக்கு அந்தச் சாராயத்தை விற்க முடியும். குடிப்பவனுக்கும் அதிகம் செலவாகாது. ஒரு நாளைக்கு ரூ குடிக்கும் செலவு கூட ஆகாது. அரசாங்கத்திற்கும் 60 கோடி அல்லது 50 கோடி வருமானம் வரும்.

இப்போதுதான் மக்கள் குடிக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். பல்லாண்டு காலமாக—என் கடவுளுக்கே கூட சாராயம்—அதாவது சோம பானம் வைத்துப் படைத்ததாக நாம் அறிகிறோம். குடித்து விட்டு யாகம் செய்தார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே, குடிப்பது என்பது தற்போது ஏற்பட்டது அல்ல. ஆகவே, செத்துப்போன ஒரு கொள்கையை ஏன் இன்னும் நடைமுறைப்படுத்த பணத்தைச் செலவழித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். இப்படி நான் சொல்வது என்னுடைய கட்சிக் கொள்கை அல்ல—சொந்தக் கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது எல்லோருமே குடிக்கலாம் என்று சொல்கிற அளவிற்கு ரூபாய் 25 கொடுத்தால் பர்மிட் கிடைக்கிறது. அதை வாங்குவதற்கு ஏகப்பட்ட கியூ நிற்கிறது. நான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்து பர்மிட் வைத்து இருக்கிறேன். நான் குடிக்கிறேன் என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப் படவில்லை. அப்போது எல்லாம் பர்மிட் வாங்குவதற்குப் போனால், சோபா வில் உட்கார வைத்து உடனே கொடுத்து விடுவார்கள். இப்போது அதிகம் பேர் பர்மிட் கேட்டு வருவதால் அங்கே கியூ நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் அரசைக் கேட்டுக்கொள்வது—நிறைய கடைகளைத் திறங்கள், பாட்டிலின் விலையைக் குறைத்து விற்க ஏற்பாடு செய்யுங்கள். நடுத்தர

1980 ஜூலை 11] [திரு. பாபு. கோவிந்தராஜன்]

மக்களுக்கு இது மிகவும் நன்மை தரத்தக்கதாக இருக்கும். பாண்டிச்சேரியில் 45 ரூபாய் பாட்டில் விற்கிறது என்று சொன்னால், இங்கே ரூபாய் 60 முதல் 70 வரை விற்கிறது. ஆகவே, அதை பாண்டிச்சேரியை விட குறைவாக விற்கும் அளவிற்கு வசதி செய்து கொடுங்கள். அதேபோல் சாராயம் 30 பைசா 45 பைசா 100 மில்லி என்கிற அளவிற்கு விற்க ஏற்பாடு செய்யுங்கள். இதனால் ஏழை எளிய மக்கள் விரும்பிக் குடித்துவிட்டு, எம்.ஜி.ஆர். வாழ்க வாழ்க என்று கோஷம் போடுவார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைக்கு குடிப்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். அதுவும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் குடிக்கிறார்கள். பொதுவாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருப்பார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் அதிகம் இருப்பார்கள். எம். ஜி. ஆர். ரசிகர்கள்தான் 100-க்கு 90 பேர் குடிக்கிறார்கள். ஆகவே தாராளமாக அவர்களைக் குடிக்க விடுங்கள். உங்களுக்கும் நல்ல பெயர் வரும்.

ஆகவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, மது விலக்குக் கொள்கையை அறவே ரத்து செய்துவிட்டு நான் சொல்கிற மாதிரி விலையைக் குறைத்து விற்பதன் மூலம் நல்ல சரக்கை மக்கள் குடிப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் பாட்டில் விலையையும் குறையுங்கள். இன்றைக்கு நடுத்தர வர்க்கம் என்று ஒன்று இருக்கிறது. அது ஒரு பெரிய வர்க்கம். அந்த வர்க்கத்து மக்களும் குடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் சிறிய சைஸ் பாட்டில்கள் போட்டு உதவுங்கள். பிராண்டி, விஸ்கி நல்ல முறையில் தயாரித்துக்கொடுக்க வழிவகை செய்யுங்கள். பாண்டிச்சேரியில் விற்கும் விலையை விட குறைவாக விற்கும் அளவிற்குச் செய்யுங்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டில் உள்ள 2½ கோடி தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழ்வார்கள், இந்த ஆட்சிக்கு நல்வாழ்த்து தெரிவிப்பார்கள் என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். மணிமாறன் : எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் குடிக்கிறார்கள் என்று சொல்லி இருக்கும் வார்த்தை தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் சொல்லியிருப்பார்கள்.

திரு. பாபு கோவிந்தராஜன் : * *

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஆர். மணிமாறன் : கடைசியாக அவர் சொன்னது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாபு கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு வருவாய்த் துறையில் இருந்த, 137 ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் நிறைவேற்றப்பட முடியாமல் இருந்த போர்டு ஆஃப் ரெவின்யூ-வை கலைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகள்மீது குறைசொல்லுகின்றதை நான் வரவேற்கவில்லை என்றாலும் பல்வேறு துறைகளில் அதிகாரிகள் முடிவு செய்தாலும் இறுதி முடிவு எடுக்கிற அதிகாரம் போர்டு ஆஃப் ரெவின்யூ-விற்கு இருப்பதால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு முடிவு எடுத்தாலும் கூட அதை செயலற்றதாக ஆக்கிவிடும் அதிகாரம் இந்த போர்டுக்கு இருப்பது கூடாது என்பதால் இந்த போர்டு கலைக்கப்பட்டதை நான் வரவேற்கிறேன்.

அதேநேரத்தில் போர்டு ஆஃப் ரெவின்யூ கலைக்கப்படும்போது அதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற அதிகாரிகளை பகிர்ந்து, சம்பந்தப்பட்ட அந்தந்த துறைக்கு மாற்றம் செய்து நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு துறையின் நிர்வாகம் செம்மையாக நடைபெற அந்தந்த துறையில் வாரியங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான் வரவேற்கிறேன்.

தீ விபத்து ஏற்படும் காலத்தில் ஒரு குடிசைக்கு 50 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்து வந்ததை இந்த அரசு 200 ரூபாயாக உயர்த்தி இருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் தீ விபத்தால் பாதிக்கப் பட்டவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு இப்போது 2,000 ரூபாய் கடன் வழங்கப்படுகிறது ; காலப்போக்கிலே விலைவாசி ஏறியிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அந்தக் கடனைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஜூலை 11] [திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் ஏழை எளிய மக்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்கும்போது அவர்களுக்கு மத்திய அரசு 500 ரூபாய் மானியமும் மாநில அரசு 500 ரூபாய் கடனும் கொடுப்பதைப்போல நிலம் இல்லாத ஏழை எளிய மக்களுக்கு நிலங்களை பட்டா செய்து கொடுக்கும் போது அவர்கள் பயிர் செய்வதற்காக மத்திய அரசு 500 ரூபாய் மானியமும் மாநில அரசு கடனும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலப் பட்டா கொடுக்கும்போது நிலப்பட்டா பெற்றவர்கள் 10 ஆண்டு காலத்திற்கு அந்த உரிமையை யாருக்கும் மாற்றக்கூடாது என்று அரிசன மக்களுக்கு மட்டும் நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையை எல்லோருக்கும் விதிக்க வேண்டும். யார் நிலப்பட்டா பெற்றாலும், நிலப் பட்டா பெற்று 10 ஆண்டு காலத்திற்குள் அந்த உரிமையை யாருக்கும் மாற்றக் கூடாது; அவர்கள் யாருக்கும் அந்த நிலத்தை விற்கக் கூடாது. அப்படி விற்றால் அந்த உரிமை ரத்தாகிவிடும் என்று சட்டம் போட வேண்டும். இல்லை என்றால் அப்படி விற்கின்றபோது அரசு வழங்கிய பட்டா நிலத்தை, யார் யார் பட்டா பெறுவதற்கு தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் விற்கவேண்டுமென்ற ஒரு விதியை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. முத்தையா தலைமை.)

அடுத்தபடியாக வணிகப்பயிர் வரி விதிப்பை ரத்து செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். அதேநேரத்தில் நிலச் சீர்திருத்தத்தின் காரணமாக ஏராளமான பினாமிமுறை இருப்பதாகத் தெரிகிறது. அதைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு ஒரு காலக்கெடு நிர்ணயித்து, நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் வருகின்ற நிலத்திற்கு கணக்குக் காட்ட வேண்டும். அப்படி கணக்குக் காட்ட தவறினால், அந்தத் தவறை அரசு கண்டுபிடித்தால், அப்படிப்பட்ட நிலத்தை அரசு எந்த விதமான காம்பன் சேஷனும் கொடுக்காமல் கைப்பற்றிக்கொள்ளும் என்று அறிவிப்புச் செய்ய வேண்டும்; அல்லது சட்டத்தில் அந்த வகையிலே ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

வேளாண்மைத் தொழிலாளர்களின் நியாய ஊதியச் சட்டத்தை தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிறைவேற்றுகின்ற வகையில் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்ற நிலைமையில் இந்த அரசு அந்த பாதிக்கப்படுகின்ற வேளாண்மைத் தொழிலாளர்களுடைய நியாய ஊதியச் சட்டத்தை அமல் படுத்தி, அமைப்பு முறையில் குரல் கொடுக்க முடியாமல் இருக்கின்ற அந்தச் சாதாரண மக்களுக்கு பயனளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுவதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களிலேயும் ஒரு ஊராட்சிக்கு 10 என்ற வகையிலே அரசுக்குச் சொந்தமான பல லட்சம் பலன் தரும் மரங்கள் தனியார்களிடம் இருக்கின்றது என்பதை அரசின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வாறு கிட்டதட்ட 5 இலட்சம், 6 இலட்சம் மரங்கள் தனியார் வசம் இருக்கின்றன. அவை எல்லாம் அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பலன் தருகின்ற மரங்களைப் பொறுத்த வரையில் தென்னைக்கு 4 ரூபாய், புளிய மரத்திற்கு 2 ரூபாய் என்ற அளவிலே தான் அரசுக்கு அவர்களாலே கொடுக்கப் படுகின்றது. இவ்வாறு ஒரு சிறிய தொகையைக் கொடுத்துவிட்டு பல இலட்சக்கணக்கான பலன் தரும் மரங்களிலிருந்து தனியார் 500 ரூபாய், 1000 ரூபாய் என்ற அளவிலே சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மரங்கள் சம்பந்தப்பட்ட பட்டாவை ரத்து செய்துவிட்டு அவைகளை ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுத்தால் ஊராட்சி மன்றங்களுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும். இதன்மூலம் அரசுக்கும் பல கோடி ரூபாய் வருமானம் வரும். ஆகவே தமிழகம் முழுவதும் உள்ள இந்த மரங்களை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வணிக வரியைப் பொறுத்தவரையில் பலமுனை வரியினை நீக்கிவிட்டு ஒருமுனை வரியின் மூலம் வரி கட்டுகிறவர்கள் தாங்களே முன்வந்து வரியினைக் கட்டுகின்ற வகையில்—வரி கொடுக்க வேண்டியவர்களை, வரி வசூலிக்கின்றவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டிய நிலை இல்லாமல்— ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்து, இந்த வணிக வரியைப் பொறுத்தமட்டில் பெரும் வியாபாரிகள் கன்சைன்மென்ட் ட்ரான்ஸ்ஃபர் என்ற அடிப்படையிலே உள்ள பொருட்களுக்கு விற்பனை வரி கிடையாது என்ற நிலையில் வரியினை ஏமாற்றிக்கொண்டிருக்

கிறார்கள். அவர்கள் பல மாநிலங்களிலே தங்களுடைய அமைப்புக்களை வைத்துக்கொண்டு அவைகளும் தங்களுடைய அமைப்புக்கள்தான் என்று கூறுவதன் மூலம் பொருட்களை இங்கிருந்து கன்சைன்மென்ட் டிரான்ஸ்ஃபர் தான் செய்கிறோம், ஆகவே வரி கிடையாது என்று சொல்லி வரி கொடுக்காமல் ஏமாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 7-வது செட்யூலில் மாநிலங்களுக்கான பட்டியல் 54-ல் கீழ்க்கண்டவாறு இருக்கின்றது.

Taxes on the sale or purchase of goods other than newspapers, subject to the provision of Entry 92-A.

இவ்வாறு சட்டத்தில் இருக்கின்ற ஒரு ஓட்டையை வைத்துக்கொண்டு நாங்கள் ஒரு மாநிலத்திலே இருந்து அடுத்த மாநிலத்திற்கு எங்களுடைய நிறுவனங்களுக்காகத்தான் கன்சைன்மென்ட் ட்ரான்ஸ்ஃபர் செய்கிறோம், ஆகவே விற்பனை வரி கொடுக்கவேண்டியதில்லை என்று பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் ஏமாற்றிக்கொண்டிருக்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே நமது மாநில அரசு மத்திய அரசின் உதவியை நாடியாவது 7-வது செட்யூலில் இருக்கின்ற விற்பனை வரி வாங்குவதற்கும் விற்பதற்கும் மட்டுமே, என்ற அந்த நிலையை மாற்றி கன்சைன்மென்ட்டுக்கும் அசைன்மென்ட்டுக்கும் வரி உண்டு என்ற வகையில் திருத்தம் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கின்ற அப்படிப்பட்ட நிலையை மாற்றினால் அரசுக்கு தக்க வருவாய் கிடைக்கும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்து எங்களுடைய பகுதியாகிய திண்டுக்கல்லைத் தனி மாவட்டமாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. அங்குள்ள மக்களெல்லாம் நீதி மன்றத்திற்கு வரவேண்டுமானாலும் மற்ற வருவாய்த் துறைகளுக்கு வரவேண்டுமானாலும் மதுரைக்குத்தான் வரவேண்டி இருக்கின்றது. இவ்வாறு நீண்டதூரம் செல்லவேண்டிய நிலைமை இருப்ப தால் திண்டுக்கல்லைத் தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, எனக்கு பேச வழங்கிய வாய்ப்புக்காக நன்றி கூறி அமைகிறேன்.

* திரு. வி. வால்மீகி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரி, வருமானவரி தொடர்பான மானியக் கோரிக்கையின் மீது, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த என் திருப்பத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் சொல்லிக் கொண்டு, என் உரையை ஆரம்பிக் கின்றேன்.

(திரு. வி. வால்மீகி) [1980 ஜூலை 11

எங்கள் இராமநாதபுர மாவட்டத்தை இரண்டாகப் பிரித்த பின்னர் கிழக்கு இராமநாதபுர மாவட்டத்திற்கு தலைநகர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரச்சினை நீண்ட காலமாக முடிவு செய்யப்படாமல் இருக்கிறது.

கோவை மாவட்டத்தை இரண்டாக பிரித்து ஈரோட்டை தலைநகரமாகக் கொண்டு பெரியார் மாவட்டமாக அமைத்ததைப் போல், சிவகெங்கையைத் தலைநகரமாகக் கொண்டு 'காமராஜர் மாவட்டம்' என்று பெயரிட்டு ஒரு மாவட்டத்தை அமைக்க புரட்சித் தலைவரின் தலைமையிலான அரசு தைரிய மாக முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முடிவு கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றியதாகவும், பெருந்தலைவர் காமராஜருக்குச் செய்யும் மரியாதையாகவும் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம் தாலுகாவை நிர்வாக சௌகரியத்தை முன்னிட்டு இரண்டாகப் பிரிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். லேவின்யூ போர்டை முற்றிலும் நீக்கி விடுவதாக அறிவித் திருப்பது குறித்து நான் முழு மனதுடன் வரவேற்று பாராட்டுகிறேன்.

அடுத்து, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கோஷத்தை எல்லாக் கட்சியினரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறை காரியாம்சத்தில் ஒன்றும் நடைபெறவில்லை. ஆகவே, ஆரம்பக் கட்டமாக உழவடைதார்களுக்கு உழவடைப் பட்டா கொடுக்காமல் இருக்கும் பகுதி யினருக்கு உழவடைப்பட்டா உடனடியாகக் கொடுக்க வேண்டுமாய் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இயற்கைச் சீற்றங்களை என்று எடுத்துக் கொண்டால், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப்போல் புயல் மழையினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர் களுக்கும் நிவாரணத் தொகையை 200 ஆக உயர்த்திக் கொடுக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று திருப்பத்தூர் தாலுக்காவில் சிங்கம்புணரி யூனியன் வட பகுதியில் எங்காவது ஒரு இடத்தில் தீப்பிடித்தாலும் அதை அணைக்க காரைக்குடியிலிருந்து தீ அணைக்கும் வண்டி வரவேண்டியிருக்கிறது. அந்த வண்டி வருவதற்குள் எரிந்து முடிந்து போய் விடுகிறது. ஆகவே, சிங்கம் புணரியில் ஒரு தீ அணைக்கும் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரும் மழையால் இயற்கையின் சீற்றத்தால் பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும் காலங்களில் காளாப்பூர் என்ற கிராமம் அடிக்கடி பாதிக்கப் படுகிறது. எனவே காளாப்பூருக்கு தெற்கே, பாலாற்றின் இருபுறமும் உள்ள குடியிருப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் இரண்டு பக்கமும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் பிரான்மலை, பாப்பாபட்டி, சதுவேத மங்கலம், ஆருத குடிப்பட்டி, திருப்பத்தூர் தெம்மாப்பட்டி போன்ற பல கிராமங்களில் புறம் போக்கு நிலத்தில் குடியிருப்பு மனைகள் கட்டி நீண்டகாலமாக இருந்து வரும் மக்களுக்கு, அந்த மனைகளுக்கான பட்டாக்கள் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வணிக வரித்துறையைப்பற்றி சொல்ல வேண்டிய தருணத்தில், சிங்கம்புணரியில் உள்ள ஆயில் மில்கள் சிலவற்றில் வணிக வரித்துறையினர் திடீரென்று சோதனை போட்டு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசை ஏமாற்றுகிற வகையில் வரி ஏய்ப்பு செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த ஆலை அதிபர்களுக்கு நோட்டீஸ் கூட கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரச்னையில் முன்னாள் அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர் எங்கள் தொகுதியில் போட்டியிட்டார். அவர் தேர்தலில் தான் வெற்றி பெற்றால், வணிகத் துறையில் அந்த ஆலை அதிபர்கள் மேல் உள்ள அத்தனை நடவடிக்கை களையும் ரத்து செய்வதாகச் சொல்லி, அவருக்காக ஆலை அதிபர்கள் பலர் தேர்தலில் அதிகமாக வேலை செய்தார்கள். இப்பொழுதும் அந்த முன்னாள் அமைச்சர் நான் ஆளும் கட்சியில் தான் இருக்கிறேன். உங்களையும் நிச்சய மாக ஆளும் கட்சியில் சேர்த்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு, அந்த ஆலை அதிபர்களையும், அவருடைய கையாட்களையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்க்கப் போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்படி வரி ஏய்ப்பு செய்து அரசை ஏமாற்றுகிறவர்களிடமும் அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்களுடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரி சோதனை நடவடிக்கைகளில் சிறு வியாபாரிகள் சில்லரை மளிகைக்கடை வியாபாரிகளிடத்தில்தான் அதிகாரிகள் கடுமையாக நடந்துக் கொள்கிறார்கள். இதுபோன்ற சிறு வியாபாரிகளிடத்தில் கருணையோடு நடந்துக் கொண்டு, பெரிய தொழில் அதிபர்களிடம் கண்டிப்பாக நடந்து கொள்ள அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் பெரிய வியாபாரிகள் வசதி உள்ளவர்கள். வரியை கட்டாமல் இழுத்தடித்து கோர்ட்டுக்குப் போய் வெற்றியும் பெறுவார்கள். எனவே போடப்படும் வரியை கட்டி விட்டுத்தான் கோர்ட்டுக்கு போக வேண்டும் என்று சட்டத்தில் வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே வருமான வரி, வணிக வரித் துறைகளில் அரசு இன்னும் எச்சரிக்கையாகவும் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் பலகோடி ரூபாய் ஆண்டொன்றுக்கு அரசுக்கு வருமானம் கிடைக்க வழி ஏற்படுகிறது.

(முற்பகல் 10.00)

என் தொகுதியில் இன்னும் பாட்டன்காலத்தில் இருந்தபடியே கூட்டுப் பட்டாக்கள் பிரிவினை செய்யப்படாமல் இருந்து வருகிறது. அதனால் அவர்கள் அரசிடம் கடன் மற்றும் உதவிகள் பெற முடியவில்லை. ஆகவே கூட்டுப் பட்டாக்களை பிரித்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சப்-டிவிஷன் திட்டம் என்று ஒவ்வொரு விவசாயிக்கும் அவர்களிடம் உள்ள ஒவ்வொரு நம்பருக்கும் ஸ்கெச்ப்ளான் கொடுப்பதாகச் சொல்லி, அதற்குரிய கட்டணம் ரசிது கொடுத்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அத்திட்டம் இன்றுவரை அமல் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணங்களை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டும்.

என் தொகுதியில் சென்ற சில ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் புயல், மழை காரணமாக பாதிக்கப்பட்ட பல ரோடுகள் இன்னும் பழுது பார்க்கப்பட வில்லை. குறிப்பாக செல்லையம்பட்டியிலிருந்து பிரான்மலை கிருங்காக் கோட்டை வழியாக சிங்கம்புணரிக்கு போகும் ரோடும், உலகம்பட்டியிலிருந்து புழுதிப்பட்டி போகும் ரோடும், கீழச்சீவல்பட்டி ஆவினிப்பட்டு ரோடும் படுமோசமாக இருக்கின்றன. அவைகளை உடனடியாக பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைச் சார்ந்த நெற்குப்பையில் பெரிய கண்மாய் பெரும் புயல் மழையினால் உடைப்பெடுக்கப்பட்டு சேதமுற்றது. அதைச் செப்பனிட வேண்டும் என்று எவ்வளவோ சொல்லியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைச் சீர்படுத்தவில்லை. ஆகவே அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவும் கரைகளை பலப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக திருப்பத்தூர் தொகுதியில் புயல் மழையினால் பாதிக்கப்

1980 ஜூலை 11] (திரு. வி. வால்மீகி)

பட்டு நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாமல் இருக்கும் பல ரோடுகளைச் செப்பனிடவும் கண்மாய்களை ஆழப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட மனுநீதி நாள் என்ற திட்டம் எங்கள் பகுதியில் சமீப ஆண்டுகளில் சரியாக அமுல்படுத்தப் படுவதில்லை. முறையாக தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத அதிகாரியும் மற்றும் சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை, காவல்துறை அதிகாரிகளும் சென்று கொடுக்கப்படும் மனுக்களுக்கு ஸ்தலத்திலேயே முடிவு எடுக்கப்படவேண்டும். இத்திட்டத்தை பெயரளவில் இல்லாமல் உண்மை யிலேயே நல்ல முறையில் செயல்படுத்த ஆரம்பித்தால் கிராமப்புற பகுதி யினருக்கு பெரும் வசதியாக இருக்கும் என்பதை வற்புறுத்திக் கூறி, இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, நில்வரித் துறை, மாநிலத் ஆயத் தீர்வை, வணிக வரி ஆகிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வருவாய்த்துறை சிறப்பான பணிகளை நல்லமுறையில் செய்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் வருவாய்த் துறை நல்ல முறையில் இயங்கிவருகிறது. அதுவும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் நல்லமுறையில் சிறப்பான முறையில் அத்துறை செயல்பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப் படுகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சி தமிழகத்தில் வந்த பிறகுதான் வருவாய்த் துறை சீரமைக்கப்பட்டு, அத்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அத்துறையில் முன்னேற்றகரமான சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டங்களின் நிர்வாகத்தை நடத்து வதற்கு தமிழ்நாட்டில் இருக்கிற துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தி, அந்த வகையில் கடந்த ஆண்டு 13 துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தி அதன்மூலம் துணை வட்டங்கள் என்ற நிலை இல்லாமல் மாற்றி மீதமிருக்கிற 16 துணை வட்டங்களையும் வட்டங்களாக உயர்த்தவேண்டும் என்ற திட்டத்தை அமைத்து இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அதற்காக என் பாராட்டுதல் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிச்சமுள்ள 16 துணை வட்டங்களையும் இந்த ஆண்டே வட்டங்களாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வட்டத்தின் தலைமை இடங்களில் இருக்கக்கூடிய தாசில்தார்கள், மாவட்ட அதிகாரிகள், கோட்ட அதிகாரிகள், பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக் டர்கள் இவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை இந்த அரசு செயற்

படுத்தி வருகிறது. அதேபோல் இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னர்தான் கிராமங்களில் பணிபுரியக்கூடிய பிர்க்கா இன்ஸ்பெக்டர் அலுவலகமும் வீடும் ஒரேயிடத்தில் இருக்கவேண்டும் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி, வீடு கட்டும் திட்டத்தினை கடந்த ஆண்டு துவக்கியிருக்கிறார்கள். இன்னும் பல பிர்க்கா இன்ஸ்பெக்டர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அந்நிலையைமாற்றி கிராமங்களில் பணிபுரியக்கூடிய அவர்களுக்கு அலுவலகமும் வீடும் ஒரேயிடத்தில் இருக்கக்கூடிய திட்டத்தை இரண்டாண்டு களில் செய்துமுடித்து கிராமங்களில் அவர்கள் நல்லமுறையில் பணியாற்றக் கூடிய நிலையை உருவாக்கவேண்டும். அதைப்போல் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பிர்க்காக்கள் பிரிக்கப்பட்ட நேரங்களிலும் பாபநாசம் வட்டத்திலே, வேதாரண்யம் வட்டத்திலே இன்னும் பிர்க்காக்கள் பிரிக்கப் படாமல் இருக்கின்றன. அங்கே இன்னும் சில பிர்க்காக்களை உருவாக்கி இந்த ஆண்டாவது நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், வேதாரண்யம் வட்டத்திலே இப்போதும் இரண்டே இரண்டு பிர்க்காக்கள்தான் இருக்கின்றன. மற்ற வட்டங்களை எடுத்துக் கொண்டால் பிர்க்காக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இரண்டே இரண்டு பிர்க்காக்களைக் கொண்ட இந்த வேதாரண்யம் வட்டத்தை 5 பிர்க் காக்களாக மாற்றித் தரவேண்டும் என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், அலுவலகங்களை எடுத்துக் கொண்டால், இன்னும் பல தாலுகாக்களிலே வெள்ளைக்காரன் கட்டிய கட்டிடங்களாக, வசதி யில்லாமல் இருக்கிறது. அங்கே அலுவலர்கள் நல்லமுறையிலே பணியாற்றக்கூடிய நிலைமை இல்லை. எனவே, அந்த தாலுகா அலுவலகங்களை எல்லாம் சீரமைத்து, நல்லமுறையில் கட்டித் தந்து, அங்கு பணியாற்றக் கூடியவர்கள் நல்லமுறையிலே பணியாற்ற வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், வருவாய்த் துறையிலே பணிபுரிந்து கொண்டிருக்கின்ற ஊழியர்கள் அங்கே பல்வேறுவிதமான பணிகளைச் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. வெள்ளத் தடுப்பு வேலையாக இருந்தாலும், தீயணைப்பு வேலை யாக இருந்தாலும் அல்லது சட்டம் ஒழுங்கைக் காக்கின்ற வேலையாக இருந் தாலும், இப்படி பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியவர்களாக இருக் கிறார்கள். எனவே, அவர்களுடைய வேலைப் பளுவைக் கவனித்து, இன்னும் கூடுதலான ஊழியர்களை நியமித்து, அவர்கள் சிரமங்களைப் போக்க வேண்டு மென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அது ஒரு பெரிய மாவட்டம். பல துறைகளில் இது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள நிலைமை இருக்கிறது. ஆனால் இந்த மாவட்டத்திற்கு ஆட்சித் தலைவர் ஒருவர் மட்டுமே இருக்கிறார். எனவே இதை மாற்றி கீழ்த் தஞ்சை மாவட்டம் என்று தனியாக ஒரு மாவட்டத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், வருவாய்த் துறையின் மூலம் வெள்ளத் துயர் துடைப்பு, தீயணைப்பு போன்ற பணிகளை வருவாய்த் துறை அதிகாரிகள் செய்து வருகிறார்கள். கடந்த காலத்தில் 77 ஆம் ஆண்டு, 79 ஆம் ஆண்டு வெள்ளம் ஏற்பட்ட காலங்களிலே வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்ற அரசு அதிகாரிகளும் சிறப்பான முறையிலே பணியாற்றி, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட காரியங்களை செய்திருக்கின்றவர்களுக்கு, நாம் பல சலுகைகளை வழங்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், புயல் பாதுகாப்பு இல்லங்கள் கடற்கரை ஓரங்களில் கட்டப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பாதுகாப்பு இல்லத்திற்கும் இடைவெளி 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. பல இடங்களில் 5 கிலோ மீட்டர் என்ற முறையில் கட்டிடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றது. அதை மாற்றி கண்டிப்பாக 5 கிலோ மீட்டர் அளவிலே ஒரு இடத்தில் இத்தகைய இல்லம் கட்டப்பட வேண்டும். இன்னும் போக்குவரத்துக்கு வசதியில்லாத இடங்களில், இந்த 5 கிலோ மீட்டர் தூரம் என்பதைப் பார்க்காமல், அந்தப் பகுதி மக்களுடைய நல்வாழ்விற்காக வெள்ளப் புயல் நிலையங்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இத்தகைய புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், வருவாய்த் துறையிலே நிலப் பட்டாக்கள் நல்ல முறையிலே வழங்கப்பட்டு, ஏழை எளிய மக்கள் நிலப் பட்டாக்கள் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆட்சி காலத்திலே, பட்டாக்கள் கொடுப்பதாக சொல்லிவிட்டு, நிலங்கள் கொடுப்பதில்லை. அந்த நிலை மாறி, இந்த அரசு வந்ததற்குப் பிறகு நிலத்தையும், பட்டாவையும் ஒருசேர கொடுக்கின்ற காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போல் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலே இன்னும் வீடில்லாத மக்கள் அதிகம் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகள்

இல்லாமல் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மக்களுக்கெல்லாம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் வாழக்கூடிய இடங்களிலே வசதியான இடங்களிலே, விரும்பக்கூடிய இடங்களிலே வீடுகள் கட்டித்தர வேண்டும். சட்ட சிக்கல்களை அகற்றி, வழக்கு மன்றங்களுக்கு போவதைத் தடுக்கின்ற முறையிலே சட்டங்களை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், வருவாய்த் துறையிலே இன்னும் பல சிறப்பான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே நில மேம்பாட்டுத் திட்டத்திலே நிலங்களுக்கு பட்டா பிரிக்கின்ற நேரத்திலே, தனித்தனிப் பட்டாவாக மாற்றியமைக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது அந்த நன்மைகள் நிலச் சொந்தக்காரர்களுக்கு மீண்டும் போகின்ற வகையிலே பிரிக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் பரந்த அளவிலே மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதைப்போல், வணிகத் துறையில் நடந்து கொண்டிருக்கின்ற வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற நிலையிலே இந்த அரசு நடவடிக்கை எடுத்து, பெரும்பாலான வரியைத் தேடித் தரவேண்டும். இன்னும் சொல்லப் போனால், இன்றுகூட சீர்காழியிலே கூலிச் சட்டத்திற்கு ஏற்ற கூலி விவசாயிகளுக்கு கொடுக்கப்படாமல் நிலச் சொந்தக்காரர்கள் தடுத்துக் கொண்டு வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமைகளை மாற்றி, விவசாயிகளுக்கு கூலி கிடைக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொண்டு, வருவாய்த் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-10)

* திரு. என். சங்கரய்யா : தாற்காலிகத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை, ஆயத் தீர்வை, நிலவரித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பின்வரும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, குத்தகை விவசாயிகள் செலுத்த வேண்டிய பாக்கிகளைக் குறைத்து தவணை முறையை ஏற்படுத்திய சட்டத்தின் அடிப்படையில் முதல் தவணை செலுத்தும் தேதி 30—6—1980 என்று இருந்தது. அவர்களுடைய சிரமங்கள் காரணமாக அதை நீக்க வேண்டுமென்று அந்த விவசாயிகளின் ஸ்தாபனங்கள் மாநில அரசுக்கு முறையிட்டுக் கொண்டதன் அடிப்படையில் முதல் தவணை செலுத்துவதற்கான நாளாக 31—12—1980 வரை நீட்டித்ததற்காக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் மாநில அரசாங்கத்தையும்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11] [திரு. என். சங்கரய்யா]

நான் பாராட்ட விரும்புகிறேன். அது அந்தக் குத்தகை விவசாயிகளுக்கு மிகவும் தேவைப்பட்ட ஒரு நிவாரணத்தை இன்று அளித்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்தத் துறைகளின் மானியங்களைப் பொறுத்தவரை பிரதானமாக இந்த மாநிலத்திலே இன்னும் செய்யப்பட வேண்டிய நிலச் சீர்திருத்தங்களைப் பற்றித்தான் நான் இங்கே பேச விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே விவசாய உற்பத்தி மேலும் பெருக வேண்டும் என்றால் உற்பத்தியிடு ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஊக்கம் தரப்பட வேண்டுமென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றத் துறைகளில் சொல்லப்படுவது போல் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய உண்மையான உற்பத்தியாளர்கள் அந்த நிலத்தில் பாடுபடக்கூடிய சாகுபடியாளர்களும், விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகள் ஆவார்கள். அவர்களுடைய உழைப்புக்கு நாம் இன்று மதிப்பளித்து அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாகத்தான் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். நிலங்களைப் பெரிய அளவில் வைத்துக் கொண்டு விவசாய உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாதவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டாம். எந்தத் துறையில் எடுத்துக் கொண்டாலும், விவசாயத் துறையானாலும், தொழில் துறையானாலும், யார் உற்பத்தியில் நேரடியாக ஈடுபட்டு இந்த நாட்டின் செல்வத்தைப் பெருக்குகிறார்களோ அவர்களுக்குத்தான் இன்றைக்கு பிரதானமாக ஊக்கம் அளிக்கவேண்டும்.

கிராமப்புறத்திலுள்ள வறுமை ஒழிக்கப்பட வேண்டுமென்றால், தொழிற் துறை வளரவேண்டுமென்று சொன்னால், உள்நாட்டு மார்க்கட் பெருகவேண்டுமென்பது நாட்டிலுள்ள பல்வேறு பொருளாதார நிபுணர்களும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். இந்த மக்களுக்கு வாங்கும் சக்தி இல்லையென்றால் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றப் பொருட்களை வாங்க ஆள் இருக்காது. இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏராளமான கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. பஞ்சாலைகளில் உற்பத்தியாகும் ஜவுளிகள் விற்பனையாவது இல்லை. வேறுபல தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பண்டங்கள் கூட நெருக்கடியில் இருக்கின்றன. பல்வேறு அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கும் நேஷனல் கைட் லைன்ஸ் அடிப்படையில் மக்களின் வாங்கும் சக்தி உயரவில்லை. அவர்களில் மிகப் பெரும்பாலான மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கிறார்கள். எழுபது சதவிகிதத்திற்கு மேல் கிராமப் புறங்களில் இருக்கிறார்கள். அவர்களில் 100-க்கு 90 பேர் விவசாயக் குத்தகைதாரர்கள், சிறு விவசாயிகள். அந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவில்லை என்றால் இந்த நாட்டில் தொழில் வளர்ச்சியைத் தீவிரமாக ஏற்படுத்த முடியாது என்பதை நம் நாட்டின் பொருளாதார வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அந்தப் பின்னணியில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால் நம்முடைய மாநில அரசாங்க வரம்புக்கு உட்பட்டு நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம், குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, தொழிலாளர்கள் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு ஆகிய மூன்று அம்சங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

உதாரணமாக எடுத்துக்கொள்வோம். 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை பதிவு சட்டப்படி 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரை 4,35,379 பேர்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கையிலே உள்ள நிலம் 6,24,451 ஏக்கர் மட்டுமே. இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த மாநிலத்திலே சாகுபடியில் இருப்பது ஏறத் தாழ 1 கோடி ஏக்கர் நிலம். அப்படி சாகுபடியில் இருக்கக்கூடிய நிலத்தில் 6,24,451 ஏக்கர்கள்தான் குத்தகை விவசாயிகள் கையில் இருப்பதாக அதிகாரப் பூர்வமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைந்த எண்ணிக்கை. காரணம் (கன்சீல்டு டெனன்சீஸ்) மறைக்கப்பட்ட குத்தகைகள் ஏராளமாக இருக்கின்றன. கடந்த காலத்திலே குத்தகை பதிவுசெய்யக் கூடிய நேரத்திலே நிலங்களிலே உழைக்கிற மக்கள் பதிவுசெய்யக்கூடிய அதிகாரிகளிடத்திலே செல்லாமலே நிலப்பிரபுக்கள் தடுத்துவிட்டார்கள். அவர்கள் அங்கே சென்று சாட்சியம் அளித்து பதிவு செய்வதைத் தடுத்துவிட்டார்கள். நாங்கள் இதைப்பற்றி எத்தனையோ முறை சொல்லியிருக்கிறோம். இந்த மாநிலத்திலே உள்ள குத்தகை விவசாயிகள் பதிவுசெய்யக்கூடிய முறையிலே குத்தகை விவசாயிகள் பதிவுச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த அரசாங்கம் சகல தயாரிப்புகளுடன் கூட, இதிலே அக்கறை உள்ளவர்களாக இருக்கிற வெகு ஜன இயக்கங்களின் உதவியைக்கொண்டு பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றொன்று, அவர்களிடத்திலே தஸ்தாவேஜுகள் இல்லை. அவர்கள் வாய்மொழியாக சாட்சியம் சொல்லும்போது அண்டை அயலார்கள் சொல்லக்கூடிய சாட்சியங்களையும் ஏற்றுக்கொண்டு இன்னார்தான் சாகுபடி செய்து வருகிறார் என்று அவர்கள் சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு பதிவு செய்யவேண்டும். அது மட்டுமல்ல, குத்தகை விவசாயி ஒருவர், நான் இந்த நிலத்தில் உழுகிறேன் என்று சொன்னால் அப்படி அவர் உழவில்லை என்று கூறவேண்டிய பொறுப்பும், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் நிலக்கிழார்களுக்குத்தான் இருக்கவேண்டும். வாழ்க்கையிலே தாழ்த்தப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்ட அந்த மக்களால் தாங்கள்தான் நிலத்திலே உழுகிறோம் என்பதை நிரூபக்க முடியாது. ஆகவே நிலத்திலே அவர்கள் உழவில்லை என்று நிரூபிக்கின்ற பொறுப்பை நிலப் பிரபுகளிடத்திலே சுமத்தினால்தான் நாம் எண்ணிய காரியத்தை அடைய

முடியும். இது மிகவும் முக்கியமானது. நாம் இதைச் செய்யாவிட்டால் 75—25 வாரம் என்று கொண்டு வந்திருப்பதால் அதிகமான பயன் ஏற்படாது. விளைவதிலே 75 குத்தகை விவசாயிகளுக்கு என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் எத்தனை பேர்களுக்குக் கிடைக்கும்? நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் 4,35,379 பேர்கள்தான் பதிவு செய்திருக்கிறார்கள். அதாவது 6 லட்சத்து சொச்சம் ஏக்கரிலேதான் தமிழ்நாட்டிலே குத்தகை சாகுபடி நடைபெறுகிறது என்றால்—நான் ஏற்கெனவே மொத்தம் 1 கோடி ஏக்கரிலே சாகுபடி நடக்கிறது என்று சொன்னேன். 75—25 என்பது மிகக் குறுகிய அளவிலேதான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். குத்தகை விவசாயிகள் பல லட்சக்கணக்கிலே இருக்கிறார்கள். ஆகவே அவர்களையெல்லாம் பதிவு செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், தீவிர ஸ்தாபனங்களும் அரசாங்கத்திற்கு ஆதரவாக ஒத்துழைக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே இதிலே அக்கறையுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் அந்த ஏழை மக்கள் விவசாயிகளாக பதிவு செய்துகொள்ளக்கூடிய முறையிலே காரியங்களைச் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

நேற்றைய தினம் வனத்துறை பற்றி இங்கே விவாதம் நடந்தபோது கோயில், மடங்கள் நிலத்தைப்பற்றி இங்கே அமைச்சர் பேசியபோது 5.25 லட்சம் ஏக்கர் அவைகளுடைய பொறுப்பிலே இருக்கிறது என்றும் அவைகளிலிருந்து வருமானம் குறைந்துவிட்டது என்றும், என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். குத்தகைதாரர்களுடைய பாக்கியைப் பொறுத்தவரையிலே நம்முடைய சட்டமன்றமே, அரசாங்கமே முடிவு செய்து அவைகளைக் குறைத்திருக்கிறோம். ஒரு தனிப்பட்ட நிலப் பிரபுவினிடத்திலே வேலைசெய்கிற விவசாயிகளுக்கு குத்தகை பாக்கியை குறைக்கிறபோது மற்றவர்களுக்கு வேறு மாதிரியாக பாக்கியை வசூலிக்கக் கூடாது, எல்லோருக்கும் சேர்த்துத்தான் நாம் ஒரு முடிவை இங்கே எடுத்திருக்கிறோம். ஆகவே அதைப்பற்றி பிரச்சினையே இல்லை. நம்முடைய ஸ்டேட் ஒரு செக்குலர் ஸ்டேட், மதச் சார்பற்ற அரசாங்கம். மதச் சார்பற்ற அரசாங்கம் என்று சொல்கிறபோது அரசாங்கம் வேறு, மதம் வேறு என்பது தான். ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றுகிறவர்களும் தங்கள் தங்கள் ஸ்தாபனங்களை திறமையாக நடத்துவதற்கு அவர்களுக்குத்தான் பொறுப்பு உண்டு. அதிலே அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகிறது என்ற பிரச்சினையே எழக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே கோயில், மடம் சம்பந்தமான நிலங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் என்ன செய்யப்

போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு இருக்கிற கவலையை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த குத்தகை விவசாயிகளுடைய நலன்கள் எந்தவிதத்திலேயும் பாதிக்கப்படக்கூடாது என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அப்போதுதான் அவர்கள் பலன் அடைவார்கள். நேற்றுகூட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேளாண்மை நிலங்கள் எல்லாம், பொதுப் பொறுப்புக் கழகங்களிடத்திலே உள்ள நிலங்கள் எல்லாம் ரெவின்யூ இலாகாவிலேதான் வருகின்றன. ஆகவே ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். தவறான வாதங்களினால் கோயில், மடங்களின் நிலங்களிலே உழக்கூடிய விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதகத்தையும் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

மீண்டும் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். அதுபற்றி பிரச்சைனைகள் இருக்கும் என்று அரசாங்கம் கருதினால் குத்தகை விவசாயிகள் இயக்கங்களோடு நீண்ட நேரம் பேசி அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்முதல் முதல் கட்டமாகச் செய்யப்பட வேண்டிய நடவடிக்கையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், 75—25-னால் நில உடைமையாளர்களுக்கு வருமானம் குறைகிறது. மடங்களுக்கு வருமானம் குறைகிறது என்பது பொருள் அல்ல. 1952 ஆம் ஆண்டிலிருந்து 75—25 என்பது National Guidelines ஆக திட்டக் கமிஷனுடைய நிலச் சீர்திருத்தத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டு, கிராமப்புறங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, வாங்கும் சக்தியை ஏற்படுத்துவது ஆகியவைகளின் மூலம் தொழில் நிலையை உயர்த்த முடியும் என்ற சீரிய கோட்பாட்டின்கீழ் அமைந்திருப்பது அது. ஆகவேதான் நான் இதை இவ்வளவுதூரம் குறிப்பிட வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தின்படி பார்த்தால், நமது மாநிலத்தில் கடந்த காலங்களில் பல அரசாங்கங்கள் செய்தாலும் இன்றுள்ள நிலைமை என்னவென்று பார்த்தால், 1961 ஆம் ஆண்டிலிருந்து அந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஒரு கோடி எக்கர் நிலங்கள் சாகுபடியில் இருக்கின்றன. இதில் 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி வரையில் நோட்டிஃபை செய்யப்பட்டு இவைகளெல்லாம் உபரி நிலங்கள் என்று அரசாங்கத்தாலே அறிவிக்கப்பட்டிருப்பது 1,19,889 எக்கர்தான். இதை நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் ; இவ்வளவு குறைவாகத்தான் நாம் நிலப்பிரபுக்களிடமிருந்து

1980 ஜூலை 11] [திரு. என். சங்கரய்யா]

எடுத்துக்கொள்ள முடிந்திருக்கிறது. இதில் அரசாங்கத்தின் பொஸஷனில் வந்த உபரி நிலங்கள் 1,15,999 ஏக்கர்கள்தான். விநியோகம் செய்யப்பட்டிருப்பது 87,123 ஏக்கர்கள்தான். அதனால் பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 83,249 பேர்கள்தான். அவர்களுக்கு 74,695 ஏக்கர் நிலம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே நில உச்சவரம்புச் சட்டத்தை அமல்படுத்தி 53,249 பேர்களுக்கு 74,695 ஏக்கர் நிலங்கள்தான் கொடுத்திருக்கிறோம். இங்கே பல அரசாங்கங்கள் இருந்திருக்கின்றன. உழுபவனுக்கே நிலம் என்ற அந்தக் கொள்கையில் இப்பொழுது நான் நிற்கவில்லை. அதைச் செய்வதற்கு வேறு புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். கோடிக்கால் பூதம் என்று சொல்லப்படும் விவசாயிகள் மாபெரும் இயக்கங்கள் நடத்தி அந்த மாற்றத்தை அடைவார்கள். நான் இப்பொழுது சொல்ல விரும்புவது, தமிழ்நாடு சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம் என்னவாயிற்று ?

திரு. இளையபெருமாள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், தென் ஆற்காடு மாவட்டத்தில், சிதம்பரத்தில் எங்கள் சங்கத்தோடு சேர்ந்து விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்காக கூட்டு முறையிலே செயல்பட்டவர், பினாமி நிறைய இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், இன்னும் மற்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒப்புக்கொள்வார்கள். நம்முடைய சட்டமன்றத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது ? மக்கள் பிரதிநிதிகள் ஏற்படுத்திய சட்டம் என்னவாயிற்று? 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்றால், நான் கேள்விப்படுகிறேன், சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும்கூடச் சொல்கிறார்கள்—குறிப்பிட்ட ஒருவர் குறிப்பிட்ட பல பேர்களுக்கு பட்டா எழுதி தாமே வைத்துக் கொண்டு, அவர்களே கிஸ்தி செலுத்துகிறார்கள். யார் யார் பெயரிலோ, வேலைக்காரர்கள் பெயரிலே எல்லாம் கூட எழுதப்பட்டிருக்கிறது. தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூட அந்த வேலைக்காரர்களுக்குத் தெரியவில்லை. இவர்களே நிலவரியைச் செலுத்தி வருகிறார்கள், சர்க்காரை ஏமாற்றி வருகிறார்கள். எத்தனை நாட்களுக்கு இதை நாம் அனுமதிக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. ஆகவே, மிகத் தீவிரமாக அரசாங்கம் இந்த மாமன்றத்தின் முழு ஆதரவோடு இந்தப் பினாமி நிலங்களைக் கண்டு பிடிப்பதற்கு அடுத்து வரும் ஆண்டுகளில் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உரியதாக வேண்டியதை ஒருசில நிலப் பிரபுக்கள் திருட்டுத்தனமாக மறைத்து இந்த நாட்டைக் கொள்ளையடித்து வந்தால் அதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும் ? ஆகவேதான் இன்று இந்தப் பினாமி நிலங்களைக்

கண்டுபிடிப்பதிலே அரசாங்க இயந்திரம் மட்டுமல்ல, ஏழை விவசாயிகளின் ஸ்தாபனங்கள் எந்த அரசியல் கட்சிகளின் சார்பில் நடத்தப்பட்டாலும் அவர்களின் உதவியோடும் செய்யப்பட வேண்டும்.

எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும், எந்த அரசியல் கட்சியில் உறுப்பின ராக இருந்தாலும், விவசாயி விவசாயிதான், சின்ன விவசாயி சின்ன விவசாயி தான். தங்களுடைய நலன்கள் பாதிக்கப்படுகின்றன என்றால் அவர்கள் செயலிலே ஒன்றுபட்டு ஈடுபடுவார்கள். அதிலே சாதிப் பிரச்சனைகளோ, தேசியப் பிரச்னைகளோ, மதப் பிரச்னைகளோ குறுக்கிடாது. ஏனென்றால் இது விவசாயிகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பிரச்னை. மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பற்றிய பிரச்னை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல, நாமே உபரி நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 3,500 ரூபாய் ஈடாகக் கொடுத்தால் போதும் என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அப்படிக் கொடுத்து அந்த நிலங்களை எடுத்தால் இன்னும் ஐந்து இலட்சம், ஏழு இலட்சம், எட்டு இலட்சம் ஏக்கர் நிலங்கள் தேறும்; எட்டு இலட்சம் பேர்களுக்குக் கொடுக்கலாம். அதுதான் உண்மையிலேயே கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கான அடிப்படையான திட்டம் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, நம்முடைய அரசாங்கம் ரூ. 3,500 அதிகபட்சமான ஈடு என்று சொல்லியிருப்பது ஒரு சரியான திட்டம். அந்தச் சட்டம் வந்தபோது வரவேற்றோம். ஆனால், அது பயன்பட வேண்டும். ஆகவேதான் இந்த உபரி நிலங்களைக் கண்டு பிடித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு கரும்புப் பண்ணைக்கு 4,041 ஏக்கர்கள் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கனவே வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாருக்குச் சொந்தமாயிருந்த நிலம். அந்தக் கரும்பு நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. பிறகு அது ரத்து செய்யப்பட்டதால், கரும் புப் பண்ணைக்குக் கொடுக்கப்பட்டது. இந்த விளக்கக் குறிப்பிலே கொடுக்கப் பட்டிருக்கிறது. கரும்புப் பண்ணை இலாபகரமாக இல்லை; ஆகவே, அதை என்ன செய்வது என்று அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக்கிறது என்று. என்ன செய்ய வேண்டும், கலைத்து விட வேண்டும், அது இலாபக ரமாக இல்லை. ஆகவே, அந்த உபரி நிலங்களை, 4,041 ஏக்கர் நிலங்களையும் தஞ்சை மாவட்டத்திலே, அந்த வட்டாரங்களிலே உள்ள ஏழை விவசாயி

களுக்குப் பிரித்துக் கொடுக்க முடியும். பொருளாதார ரீதியிலே இலாப மற்ற ஒரு பண்ணையை வைத்துக்கொண்டு ஏன் இன்றைக்கு அரசாங்கம் சிரமப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல. அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய இன்னொரு பிரச்னை, அந்தக் கார்ப்பரேஷன், சிறிய நிலக்காரர்களிடமிருந்து 3,000 ஏக்கர்களுக்கு மேலாக என்று கருதுகிறேன், குத்தகைக்கு எடுத்திருக்கிறது. அரசாங்கம் இந்தக் குறிப்பிலே அதைச் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு அந்தக் குத்த கையை மேலும் நீடித்து வைக்கவேண்டுமென்று, நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நீங்கள் அந்தப் பண்ணையைப் பற்றி முடிவு செய்வது என்றால் ஒரு ஆண்டுக்காலத்திற்குள்ளே முடிவு செய்து விடலாம். ஆகவே இரண்டு ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக, ஒரு ஆண்டுக்காலத்திற்குள் அந்தப் பிரச்சனையைப் பற்றி முடிவு செய்துவிட வேண்டும். இப்பொழுது அவர்கள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அந்தச் சிறிய நிலக்காரர்களுக்கு 25 சதவிகிதம் கொடுத்தால் போதும், 75 சதவிகிதம் பண்ணை வைத்துக் கொள்ளலாம் என்று அர்த்தம். சிறிய நிலக் காரர்களை இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு நாம் ஆளாக்க வேண்டாம்.

கடந்த காலத்திலே, அவர்கள் வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார் அவர்கள் சொல்படி கேட்டுச் செய்து விட்டார்கள். இன்றைக்கு அந்நிலங்கள் திரும்ப வேண்டுமென்று பெரிய கிளர்ச்சி நடக்கிறது. ஆகவே, அந்தச் சிறிய விவசாயிகளுக்கு, அவர்கள் நிலத்தை கட்டாயக் குத்தகையிலிருந்து விடு வித்து, ஓராண்டு காலத்திற்குள்ளே கொடுத்து விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான திருத்தச் சட்டங்களை மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டுவரும்போது, இதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் பேச வேண்டிய மிக முக்கியமான விஷயம், நியாய கூலிச் சட்டத்தைப் பொறுத்தவரை ரெவினியூ இலாகாவின் பொறுப்பிலே வருகிறது. நியாயக்கூலிச் சட்டம் என்பது கிழக்குத் தஞ்சையிலே உள்ள 6 தாலுக்காக் களுக்குப் பொருந்தும். அதைப் பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மானியம் என்ற முறையிலே மாநிலம் பூராவும் உள்ள விவசாயத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய குறைந்தபட்சக் கூலி, லேபர் இலா காவிலே வருகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தின் அடிப்படையிலே மாநில அரசாங்கங்கள்

[திரு. என். சங்கரய்யா] [1980 ஜூலை 11

அவ்வப்போது போடக்கூடிய அந்த நோட்டிஃபிகேஷன், அறிவிப்பின் அடிப்படையிலே அது செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதைப்பற்றிய விவரங்கள் இங்கே கொடுக்கப்படவில்லை. ஆனால், அது மிக முக்கியம் என்று கருதுகிறேன். இந்த அரசாங்கம் கலைக்கப்பட்டதற்கு முன்னால் செய்த மிக முக்கியமான ஒரு காரியம். இது, 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 10-லே அண்ணா தி.மு.க. அரசு போட்ட உத்தரவு. மாநிலம் முழுவதும் அது அமுலுக்கு வந்துவிட்டது. ஆனால் அதிலே என்ன அடங்கியிருக்கிறது என்பது இந்த விளக்கக் குறிப்பிலே இல்லை. காரணம், அது வேறு இலாகாவைச் சேர்ந்தது. ஆனால் நான் கூற விரும்புகிறேன், இந்த மன்றம் அதைப்பற்றி ஆழ்ந்த அக்கறை எடுக்கவேண்டும். நியாயக் கூலிச் சட்டம் என்பது தஞ்சை மாவட்டத்திலே 6 தாலுகாக்களுக்குத்தான் பொருந்தும். ஆனால், இந்த அறிவிப்பு மாகாணம் பூராவுக்கும் பொருந்தும். இதிலே, ரூ. 7 கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயத் தொழிலாளிக்கு நெல் அறுவடையிலே 8-ல் 1 பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, நாற்று நடுதல், களை எடுத்தல், ஆகியவற்றுக்கு ரூ. 5 கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, 7 மணி நேரம் பொதுவான வேலையையும், உழவுத் தொழிலில் ஈடுபடக் கூடியவர்களுக்கு 5 மணி நேர வேலையையும் அது கொடுக்கிறது. இதைக்காட்டிலும் கூடுதல் கூலி அமுலில் இருந்தால் அதைக் குறைக்கக் கூடாது என்று கூறுகிறது. அது மட்டுமல்லாமல், உணவு கொடுத்திருந்தால், அத்தக் கூலி தவிர அவர்களுக்கு சாப்பாடு கொடுத்திருந்தால் அந்தச் சாப்பாட்டைக் குறைக்கக் கூடாது என்று சொல்கிறது. இந்தச் சட்டம் இந்த மாநிலத்திலே எப்படி அமுல் நடத்தப்படுகிறது? நான் கூறுகிறேன், லேபர் இலாகாவிற்கு கிராமப்புறங்களிலே அமைப்புகள் இல்லை. ஆகவே, அரசாங்கம் அதை தனித்துறை என்று பார்க்காமல் அரசாங்கத்தினுடைய நிர்வாக இயந்திரத்தின் மூலம், கிராமப்புறங்களில் பூராவும் இந்த ரூ. 7 என்ற குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை, அதனுடைய முழு அம்சங்களோடு அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தால் பல இலட்சக்கணக்கான, ஏன் நான் சொல்வேன், 1 கோடி விவசாயத் தொழிலாளிகள் தமிழகத்திலே பயன்பெறுவார்கள். ஆகவே, அதை அமுலுக்குக் கொண்டு வர மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

ரேடியோவிலே எதை, எதையோ பிரச்சாரம் செய்கிறார்கள், டெலிவிஷனிலே எதை, எதையோ பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் கூலிச் சட்டம் இப்படியிருக்கிறது, இது உங்களுடைய உரிமை, ரூ. 7 வாங்காமல் நீங்கள் வேலை செய்ய வேண்டாம் என்று அவர்கள்

1980 ஜூலை 11] (திரு. என். சங்கரய்யா)

பிரச்சாரம் செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமும் அதனுடைய தகவல் தொடர்புத் துறையின் மூலம் ஏராளமான பிரச்சாரங்களைச் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்றைக்குப் போலீஸ் இலாகா உட்பட ரெவின்யூ இலாகா உட்பட, ஒலிபெருக்கியை வைத்து கிராமப்புறங்களிலே இந்தக் கூலியை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; அந்தக் கூலியைக் கொடுக்க மறுத்தால் அது குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திற்கு விரோதமாகும் என்று பிரச்சாரம் செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த முற்போக்கான நடவடிக்கைகளுக்கு, இந்த நாட்டிலே, இந்த மாகாணத்திலே இருக்கக்கூடிய விவசாயச் சங்கங்களும், உழைப்பாளர்பால் அக்கறை கொண்டிருக்கிற மக்களும் பெரும் ஆதரவு அளிப்பார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

அடுத்து நான் கூறிக்கொள்ள விரும்புவது, இந்த வீட்டு மனைப் பட்டா, குடிமனைப்பட்டா பற்றியதாகும். நாம் செய்து இருக்கக்கூடிய பல காரியங்களை அமலுக்குக் கொண்டு வருவது என்பதிலேதான் இந்தப் பிரச்சினை வருகிறது. இந்த மனைப்பட்டா பிரச்சினை, 1971-லே குடியிருப்பு மனைப்பட்டா உரிமை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டு இதுவரையில் 1,76,263 பேர்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1971-லே கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் 1,76,263 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இது மிகவும் தீவிரப்படுத்தப்படவேண்டும். அப்படித் தீவிரப்படுத்தப்பட்டு அந்த குடிமனைப் பட்டாக்களை இன்னும் தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலே மற்றொரு குறைபற்றிக் குறிப்பிடவிரும்புவது என்னவென்றால், அவர்களுக்கு மனைப்பட்டா கொடுக்கப்பட்டாலும் அதிலே வீடுகள் கட்டிக்கொள்ள கடன் வழங்க வழியில்லாமல் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே இந்தப் பட்டாக்கள் இன்னும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இந்தப் பட்டாக்களை கையிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. சில இடங்களில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக மதுரையில் என்.எம்.ஆர். புரம் என்று ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்திலே உள்ள புறம்போக்கு நிலங்களில் ஏராளமான பேர்கள் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருசிலர்

அதை வளைத்துவைத்து அவர்களிடம் இப்போது வாடகையை வசூலிக்கின்ற நிலைமை இருக்கிறது. அரசாங்கம் தனது அதிகாரிகளை நேரில் அனுப்பி அந்த இடத்தைப் பார்த்து அந்த இடத்தை அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்றவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் உள்ள ஆதி ஆந்திரர்களுக்கு மனைப் பட்டா கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் மதுரையில், கீழ்மதுரை என்ற பகுதியிலே ரயில்வே லைனுக்கு அருகிலே 500 ஏழை அரிசனக் குடும்பங்கள் குடிசைகளைப் போட்டு ஆடு, மாடுகளைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி அரிசன வீட்டு வசதிக் கழகத்திடமும் கூறியிருக்கிறேன், ரெவின்யூ இலாகாவிடமும் கூறியிருக்கிறேன், நகரசபை அதிகாரிகளிடமும் கூறியிருக்கிறேன். ஆனாலும் அவர்களுடைய பிரச்சினை இதுவரையிலும் தீரவில்லை. எனவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நீங்கள் நேரிலே சென்று இவர்களைப் பார்த்து, அவர்களுக்கு பட்டா கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவது, கிராம முனிசிப்புகள், கணக்கர்கள் போன்ற பதவிகளுக்கு அரிசனங்களைக் கொண்டு வரவேண்டும், அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று இருப்பது வரவேற்கத்தக்கது. ஜாதிக் கொடுமைகளால் சூழப்பட்டுள்ள சமுதாயத்தில் அரிசன மக்கள் எத்தனைபேர்கள் கிராம உத்தியோகஸ்தர்களாக வருகிறார்களோ அந்த அளவுக்கு நாட்டிற்குப் பெருமை. இன்றைக்கு கிராம முன்சீப்புகளுக்கு 94 பேர்களுக்கு, அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு கர்ணம் பதவிக்கும், கிராம அதிகாரிகளாக 82 பேர்களுக்கும் இப்போது பரீட்சை எழுத பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அது முக்கியம் அல்ல. எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்து இருக்கிறது? இன்றைக்கு எத்தனை பேர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள்? மற்ற துறைகளிலே எப்படி ரிசர்வேஷன் செய்கிறோமோ, எப்படி இடம் ஒதுக்குகிறோமோ அதேமாதிரி இவர்களுக்கும் ஒதுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கிராம உத்தியோகஸ்தர்களாக வந்து, ஜாதிக் கொடுமைகளை நீக்குவதற்கும் சமுதாயக் கொடுமைகளை நீக்குவதற்கும் பெருமளவுக்கு உதவி செய்ததாக ஆகும்.

அதேபோல, தாசில்தார்கள் ஆபீசில் இருந்து பணிபுரிய வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. முன்பெல்லாம் மாவட்டத் தலைவர்கள் மக்களைச் சந்தித்துப் பேச நான் ஏற்பாடு செய்து, மனுநீதித் திட்டம் என்ற போல்

1980 ஜூலை 11] [திரு. என். சங்கரய்யா]

பார்த்து வந்தார்கள். இப்போது ஒருவேளை வேலைப்பளு அதிகம் இருக்கின்றது என்ற காரணத்தாலே செய்ய முடியவில்லைபோல் இருக்கிறது. எனவே வருமான வரி அதிகாரிகள் மக்களைச் சந்தித்துப் பேச தயாராக இருக்க வேண்டும். அதற்குத் தக்கவாறு தாசில்தார்கள், ஆர்.டி.ஓ.க்கள், மாவட்ட கலெக்டர்கள் இவர்களின் வேலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் கைவினைக் கலைஞர்களுக்கு 1,088 பேர்களுக்குத்தான் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியிருப்பு உரிமைச் சட்டத்தின்கீழ் குடியிருப்பு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான எண்ணிக்கை. கிராமங்களிலே இந்தக் கைவினைக் கலைஞர்கள் இன்னும் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே தேவைப்படுவது என்னவென்றால், தைரியமாக இந்த ஏழை மக்களுக்கு இந்தப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. அரசாங்கமே இடங்களைக் கொள்முதல் செய்யும். கொள்முதல் செய்து மனிதனுக்கு வழங்குவதற்கு, குடியிருப்பதற்கான இந்த இடத்தை கொடுக்காமல் ஒரு நாட்டிலே பொது நல சமுதாய அரசு என்று வைத்துக்கொண்டிருப்பதை எத்தனை நாளைக்குத்தான் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே மிக அவசர உணர்வோடு இந்த வீடு இல்லாதவர்களுக்கு பட்டா, மனைப் பட்டா கொடுப்பதை அரசாங்கம் இந்த ஆண்டிலே ஒரு சீரிய கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, மீன்பாசிபற்றியதாகும். சில இடங்களில் அதை எடுக்கும் உரிமையை தனியார் வைத்து இருக்கிறார்கள். குளங்களைப் பழுதுபார்க்கும் உரிமை பொதுப்பணித் துறைக்குத்தான் உண்டு. அப்படியிருக்கும்போது, சில இடங்களில் தனியார் மீன்பாசி எடுக்கும் உரிமையை வைத்து இருப்பதற்கான காரணம் என்ன? இந்த உரிமையை எல்லா இடங்களிலும் யூனிபார்மாக ஊராட்சி மன்றங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரி மூலமாக அதிகப்படியான வருமானம் ஈட்ட கவனம் காட்டுகிற அரசு, இந்த நகர்புறங்களில் உள்ள நிலங்களை உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் எடுத்து அதனை மக்களுக்கு வினியோகம் செய்வதற்கான முறையில் 'இன் டெப்த்' ஆய்வு செய்யவேண்டும். யார் யாரோ சட்டத்தில் உள்ள ஓட்டைகளை வைத்துக்கொண்டு நிலங்களை இன்றைக்கு வளைத்துப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு காலத்தில் திரு. ஒய். பி. சவான்

அவர்கள் குறிப்பிட்டு இருப்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விவசாயத் துறையில் பசுமைப் புரட்சி என்று எல்லாம் சொல்கிறீர்கள், ஆனால் அந்த மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை ஏற்படுத்தித்தர தவறுவோ மானால் ஏற்படுவது பசுமைப் புரட்சியாக இருக்காது, வேறு புரட்சியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மக்கள் பொறுமையாக இருந்து கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களை நீண்டகாலத்திற்கு கட்டுப் படுத்தி வைக்க முடியாது. அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கத் தயாராக இல்லை என்றால் நிலைமை வேறு விதமாகப் போய்விடும். இன்றைக்கு நகர்ப்புறங்களில் ஏராளமான இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறோம், நிலப்பட்டா கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அரசாங்கம் நிலத்தை கையில் வைத்திருக்காமல் இதைச் செய்ய முடியாது. ஆகவே, தீவிரமான ஆய்வு செய்து அந்த மனைகளை நீங்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தக் கருத்துக்களை மார்க்லிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உங்கள் முன்னால் சமர்ப்பித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய், வணிக வரி, மற்ற வரிகள், ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு ஒரு நல்வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் என்னுடைய நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது விற்பனை வரியானாலும் சரி, ஏனைய வரிகளானாலும் சரி, அல்லது ஆயத்தீர்வையானாலும் சரி, மாநில அரசின் முக்கியமான வரி வருவாய் மூல மாகத்தான் மாநில அரசு திட்டமிட்டுள்ள பணிகளைச் செய்ய முடியும், ஆற்ற இயலும் என்பதை நாம் மறக்க முடியாது. எந்த ஒரு வரியை நம் மாநில அரசு திட்டினாலும், அது தொழில் துறையாக இருந்தாலும் சரி, விவசாயி களாக இருந்தாலும் சரி, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு இருக்கிற, அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப இந்த அரசை நிலைநாட்டி யிருக்கிற புரட்சித் தலைவர் அரசு, விவசாயிகளின் நலனைப் பார்த்தும், தமிழ கத்தின் பொருளாதார நிலையைப் பார்த்தும்தான், அவர்களுக்கு ஏதேனும் ஒரு நன்மையைச் செய்ய வேண்டும் என்ற முறையிலேதான், அதுவும் வருவாய்த் துறை மூலமாக வரும் வருமானம் தமிழக அரசின் காமதேனு என்று சொன் னாலும்கூட, வரிகளை விதிக்கிறபோது, வசூலிக்கிறபோது ஊழல்களை அகற்றிட வேண்டும், அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், பாதிக்கப்பட்ட வர்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்பதைக் கொள்கை ரீதியாக நல்ல முறையில்

அறிவித்து, அதற்கேற்ற வகையில் சட்ட திட்டங்களைத் திருத்துகின்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை இந்த தமிழக அரசு உருவாக்கித் தந்து இருப்பதற்காக தமிழக அரசுக்கு அனைத்துக் கட்சி சார்பிலே அனைவரது பாராட்டும் கிடைக்கும், அனைவரும் நன்றி கூறுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

விற்பனை வரி சட்டத்தைபற்றிச் சொல்லும்போது, அந்த விற்பனை வரியில் விதிகளைத் திருத்துகிறபோது அல்லது சில சட்ட திட்டங்களை வகுக்கிறபோது மாநிலத்தினுடைய பொருளாதார நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது திருத்தங்களை இந்த அரசு செய்து வருகிறது என்பதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அதேபோன்று ஆக்கப் பொருள்களுக்கு தற்போது அளிக்கப்பட்டு வருகிற சலுகைகள், மூலப் பொருள்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இது தொடர்பாக திருத்தங்களை விரைவில் அரசு கொண்டு வர வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில், சில வியாபாரிகள்—குறிப்பாக ஓட்டல்களை எடுத்துக்கொண்டால் ரூபாய் 50,000 ஆண்டுக்கு வருமானம் இருக்கிறபோது அங்கே அவர்களுக்கு விற்பனை வரி இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஓட்டல் அதிபர்கள் சாதாரணமானவர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் தயவால் இந்த விற்பனை வரியை ஏமாற்றி வரும் சூழ்நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்

[முற்பகல் 10-40]

கொள்கிறேன். இது அரசின் தவறு அல்ல. ஆனால் அரசிலே இருக்கிற அதிகாரிகள் சிலர் இந்த நாட்டிலே ஏமாற்றுகின்றவர்களுக்கு உடந்தையாக இருப்பதால் அவர்களைப் பயன்படுத்தி விற்பனை வரியை ஏமாற்றுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் சினிமா கொட்டகைகளுக்கு 'கம்பவுண்டிங் டாக்ஸ்' விதித்ததைப்போல இந்த வியாபாரிகளுக்கும் விற்பனை வரியைப் பொறுத்தவரையில் 'கம்பவுண்டிங் டாக்ஸ்' போடுவதன் மூலம் தமிழக அரசுக்கு அதிகமான வருவாய் வரும் என்கின்ற என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த அரசு பூட்டு, சோப்பு, எழுதுபொருள், பிளாஸ்டிக் பொருள், இரும்பு, பெருங்காயம், மெழுகு வர்த்தி நோட்டுப் புத்தகங்கள் ஆகிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4 சதவித பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியிருப்பதை ஏழை எளிய மக்கள் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்வதில் இருக்கின்ற சிரமங்களை தவிர்க்க வேண்டுமென்ற முறையில் சிறு சிறு குடிசைத் தொழில் மூலம் உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியை அறவே நீக்கியிருப்பதைப்போல சைக்கிள் வரியையும் 6 சதவிகிதத்திலிருந்து 3 சத விகிதமாக நம்முடைய அரசு குறைத்திருக்கிறது ; இருந்தாலும் அதை முழுமை யாகக் குறைத்தால் இந்தத் தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல் இந்த அரசிலே இருக்கிற உத்தி யோகஸ்தர்களும் பாராட்டுவார்கள் என்ற நிலைமை உருவாகும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சைக்கிள் வரியை 6 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகித மாகக் குறைத்ததை அறவே நீக்கினால் நன்றாக இருக்கும் என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. வணிகர்கள் நலன்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு வணிகர்களுடைய நலன்பற்றி ஆராய ' வணிகர் நலக் குழு ' அமைத் திருப்பதை வணிகர்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் வணிகர்கள் அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளுகின்ற வகையில் வியாபாரிகளுக்கு டெலிபோன் வசதியும் செய்து தரக்கூடிய ஒரு குறிப்பை அவைமுன் வைத்திருப்பதற்கு நன்றி சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—திரு. உ. சுப்பிரமணியம் தலைமை)

அடுத்தபடியாக கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் சினிமா கொட்ட கைகளுக்கு நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு ' கம்பவுண்டிங் டாக்ஸ் ' கொண்டுவந்ததன் மூலம் கடந்த ஆண்டு வருமானம் 19 கோடி ரூபாயாக இருந்தது இந்த ஆண்டு 29 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என் பதை நாம் அறிகிறோம். அந்த ' கம்பவுண்டிங் டாக்ஸ் ' ஊராட்சி மன்றங் களில் இருக்கிற சினிமாக் கொட்டகைகளுக்கு மட்டும்தான் விதிக்கப்பட்டிருக் கிறது. அந்த முறையை நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் விரிவு படுத்துவதன் மூலம் அதிகாரிகளுடைய லஞ்சலாவண்ய தொல்லைகளிலிருந்து அவர்கள் விடுபட்டு, இந்த அரசுக்கு நிச்சயமாக வருவாய் பெருகும். ஆகவே, ' கம்பவுண்டிங் டாக்ஸ் ' முறையை நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் இருக்கிற சினிமாக் கொட்டகைகளுக்கும் விதிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அவைமுன் வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

1980 ஜூலை 11] (திரு. சி. கோபால்)

அதுமட்டுமல்ல. வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில்—உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவைகளை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான் ஜனநாயகம் என்ற கருத்தை பல தலைவர்கள் கூறி யிருக்கிறார்கள். அந்த வகையிலே இருப்பதற்கு குடியிருப்பு மனைகளை அமைத்துத் தருவது இந்த அரசின் கடமை. இந்த அரசைப் பொறுத்த அளவில் ஏழை எளிய மக்களுக்கு பட்டாக்கள் வழங்கி நன்மை செய்து வருகிறது. இருந்தாலும்கூட பல வருடங்களாக பல இடங்களில் புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் அமைத்து குடியிருப்பவர்களுக்கு இன்னும் பட்டா கொடுக்காத சூழ்நிலை இருந்துவருகிறது. பெருமை வாய்ந்தது, பொறுப்பு வாய்ந்தது என்று சொல்லப்படுகிற இந்த அரசு, ஏழை எளிய மக்களுக்காக ஆட்சி நடத்துகிற இந்த அரசு, ஏழை எளிய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பட்டா வழங்குவதிலே மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சோளிங்கர், பக்கத்தில் இருக்கிற செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அருகாமையிலே இருந்தாலும்கூட வடாற்காடு மாவட்டத்திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் இடையிலே இருக்கிற ஒரு பகுதியாக அது இருந்து வருகிறது. சோளிங்கரை பொறுத்த வரை 20 ஆயிரம் மக்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அந்தப் பகுதியை தாலுக்காவாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்து எனக்குப் பேசுவதற்கு நல்லதொரு வாய்ப்பினை அளித்த தற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நில்வரி, மாநில ஆய்வுத் தீர்வை, பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம், முத்திரைத்தாள்கள்—நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக 30—6—1980-க்குள் கட்ட வேண்டிய குத்தகை பாக்கியை 31—12—1980 வரை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று அறிவித் திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இதிலே இன்னும் பல்வேறு விஷயங்கள் தொக்கி நிற்கின்றன. நான் அவைகளை எல்லாம் அமைச்சரவர்களிடத்திலே விளக்கி இருக்கிறேன். முந்தைய நிலுவைகள்

குறைக்கப்பட்டு அதில் முதல் தவணையைச் செலுத்துவதற்கென்று குறிக்கப் பட்ட 30—6—1980 என்ற கால அளவு போதுமானதல்ல என்பதால், பயிரிடும் குத்தகைதாரர்கள் குறுகியகாலப்பயிரை அறுவடை செய்து குத்தகை பாக்கியைச் செலுத்த இயலுகின்ற வகையில் அந்தக்கால அளவை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. அப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1972 ஆம் ஆண்டு குத்தகையை ஒரு ஆண்டு கட்டினால் அதற்கு முன்பு உள்ளவைகள் ரத்து என்று சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொல்லப்பட்டு அதற்கு காலம் போதவில்லை கடைசியில். அதனால் பாக்கியைக் கட்ட முடியாமல் நிலுவை இருக்கின்றது. 1973 ஆம் ஆண்டு கட்ட முடியாத பாக்கிகளும் இருக்கின்றன. 1979 ஆம் ஆண்டு பாக்கியும் இருக்கின்றது. ஆகவே இடையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டினால் நான்கு ஆண்டு தள்ளுபடி என்று நமது வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சட்டம் கொண்டு வந்த—அப்படிப் பட்ட பகுதியும் இருக்கின்றது. ஆனால் எங்களுடைய தாழ்மையான கருத்து என்னவென்றால், 1972 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை யிலும் தொடர்ந்து பாக்கி இருந்துவருவதால் இப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்து நீட்டிக்கொண்டே போவதால் உண்மையிலேயே அவர்களால் கட்ட முடி யாத நிலை ஏற்பட்டு அதிகமாக குத்தகைப் பாக்கி ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றது. இதனால் குத்தகை விவசாயிகள் நீதிமன்றம் செல்லவேண்டி இருக் கின்றது, வழக்கறிஞர்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. இவ்வாறு அவர் களுடைய காலமும் நேரமும் கோர்ட்டுகளிலேயே அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருப்பதால் 1972 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரையிலும் உள்ள குத்தகைப் பாக்கியை ஒன்றாகச் சேர்த்து அதை இரண்டாண்டுக் குத்தகையாக நிர்ணயம் செய்து அந்த இரண்டாண்டுக் குத்தகையையும் மூன்றாண்டுத் தவணையில் கட்டுவதற்கு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சட்டம் இயற்றினால்தான் விவசாயிகளுடைய கஷ்டங்கள் நீக்கப்பட்டு அவர் களால் இந்தக் குத்தகையைக் கட்டுவதற்கு வாய்ப்பு தருவதாக அமையும். இது விவசாயிகளுக்கும் நன்மை அளிக்கும், விவசாயிகளைப் பாதுகாக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குத்தகை விவசாயிகளுக்கு குத்தகைப் பதிவு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் பல்லாயிரக்கணக்கான உண்மையான விவசாயிகள் பதிவு செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்த நிலையில் நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள் பல ஊர்களிலே இருக்கின்றார்கள். ஆனால் சாகுபடி செய்யக் கூடியவர்கள் உள்ளூரிலே இருக்கிறார்கள். ஆனால் கிராமக் கணக்குப்

பிள்ளைகள் யார் உண்மையாக நிலத்தைச் சாகுபடி செய்கிறார்களோ அவர்கள் பெயருக்குப் பதிவு செய்வது கிடையாது. நிலச்சொந்தக்காரர் சென்னையில் இருப்பார்கள், அல்லது வேறு ஊர்களிலே இருப்பார்கள், அல்லது அரசு ஊழியர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள்தான் விவசாயம் செய்து வருவதாக தொடர்ச்சியாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். விவசாயக் கூட்டுறவுக் கடன் வாங்குவதற்காக செல்கின்றபோதுதான் யார் உண்மையிலேயே நிலத்திலே சாகுபடி செய்கிறார்கள் என்ற விவரம் தெரியவருகிறது. இதையெல்லாம் போக்குவதற்காக ஒரு ரெவின்யூ அதிகாரியை ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்வதற்கு ஏற்பாடு செய்து யார் உண்மையிலேயே கிராமங்களில் சாகுபடி செய்கிறார்கள் என்ற உண்மையை அறிந்து உடனடியாக எல்லோருக்கும் குத்தகைப் பதிவு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

அடுத்தபடியாக நில உச்சவரம்பு என்று எடுத்துக்கொண்டால், எனக்கு முன்னால் பேசிய தோழர் சங்கரய்யா அவர்கள்கூடச் சொன்னார்கள். நில உச்சவரம்பு என்பது 1961 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது நில உச்சவரம்பு கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மகத்தான போராட்டத்தை நடத்தினார்கள். தோழர் திரு. சீனிவாச ராவ் அவர்கள் தலைமையில் நடந்த அந்தப் போராட்டத்தில் 16,000-க்கு அதிகமான பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதற்குப் பின்னால் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். என்னவென்று? 30 ஏக்கர் நிலம் உச்சவரம்பு என்று சொல்லி சட்டம் வந்தது. ஆனால் எந்த வகையிலும் உபயோகம் இல்லை.

உபரியாக சிறிதளவு நிலம்கூடக் கிடைக்கவில்லை. வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் அவர்களுக்குச் சொந்தமாக 1,000 வேலி நிலம் இருந்தது. ஆனால் அவைகளையெல்லாம் கரும்புக் காடுகள் என்று எழுதி வைக்க வைத்து உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்ப வைத்தார்கள். திருவாரூர் கோவிலுக்கு 1,001 வேலி நிலம் சொந்தமாக இருந்தது. ஆனால் உச்சவரம்பின் கீழ் கொண்டுவரப்பட்டதா? இல்லை. அண்ணன் இளையபெருமாள் அவர்கள் கூட அதைப்பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கினார்கள். ஆனால் கொஞ்சமாவது உபரி நிலம் கிடைத்திருக்கிறதா? ஏதாவது கிடைத்திருந்

தாலும்கூட அவைகள் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? எங்காவது இருக்கும் அரசு ஊழியர்களுக்கு, அவர்களுக்கு நிலம் இல்லை என்று சொன்னால், கேட்டால், அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் நிலத்தை நம்பி, மம்மட்டி எடுத்து கையொடிய வேலை செய்த ஏழை விவசாயத் தொழிலாளிகளுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கலாம், மிகச் சிறிய அளவில் வேண்டுமானால். ஆங்காங்கே ஒன்றிரண்டு பேர்களுக்குக் கிடைத்திருக்கலாமே தவிர, ஏழை பாட்டாளி மக்களுக்கு பெருவாரியான நிலம் கிடைக்கவே இல்லை.

அப்படி ஆயிரக்கணக்கான ஓட்டை உடைசல்களுடன்தான் அந்தச் சட்டம் போடப்பட்டது. நில உச்சவரம்புச் சட்டம் என்பது படுமோசடியான சட்டமே தவிர, உண்மையாகவே உழைக்கும் ஏழை விவசாய மக்களுக்கு உபயோகப்படும் சட்டமாகப் போடவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நான் புரட்சித் தலைவர் அவர்களை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மக்களுக்குத் தேவையில்லாத இப்படிப்பட்ட சட்டங்களைத் தூக்கியெறிந்து விட்டு, உண்மையான சட்டங்களை, நிலத்தை நம்பி வாழக் கூடிய, இருகாத்தால் உழைக்கக் கூடிய அந்த மக்களுக்கு வசதிகள் கிடைக்கும்படியான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். சட்டங்களை நன்கு பரிசீலித்து ஓட்டை உடைசல்களை நீக்கி இத்தகைய சட்டங்களைக் கொண்டு வருவதினால், எதிர்ப்பவர்கள் ஒரு சிலர்தான் இருப்பார்கள், ஆனால் லட்சக்கணக்கான உழைப்பாளி மக்கள் உங்கள் பக்கத்திலே இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நமது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கூட சொன்னார்கள். எல்லோருக்கும் தெரியும், அவர் நல்ல பக்திமான் என்று. அவர் காலத்திற்குள் அதைச் செய்ய முடியவில்லையே என்று வருத்தம் கூட பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கோவில் நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு பட்டா போட்டுக் கொடுத்து விட்டு, அந்தப் பணத்தை எல்லாம் வங்கியில் போட்டு வைத்திருந்து அந்த வட்டியைக் கொண்டு கோவில்களுக்கு மூன்று கால பூசைகளையும் நன்றாகச் செய்யலாம் என்று சொன்னார். இது மிக நல்ல திட்டம். இந்த யோசனையை அரசு பரிசீலிக்க வேண்டும். இதை கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் சொன்னால், அவர்களுக்கு பக்தியில்லை, சாமி தேவையில்லை அதனால் சொல்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் இதை முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

அவர் சிறந்த பக்திமான். கோவிலுக்கும் பூசை தவறாது, ஏழைகளுக்கும் நிலங்கள் சொந்தமாகிவிடும். அந்தப் பணமும் அப்படியே வங்கியில் இருக்கும். இதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் கூட கடவுளை நம்பாதவர். ஆனால் கடவுளை நம்புகிறவனை, வணங்குகிறவர்களை புண்படுத்த வேண்டாம். அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுங்கள், கடவுள்களுக்கும் பாதுகாப்பு கொடுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, கோவில் நிலங்களை குத்தகை விவசாயி களுக்குச் சொந்தமாக்கி, அந்தப் பணத்தைப் பெற்று வங்கிகளில் போட்டு அந்த வட்டியை வைத்து, கேரளத்தில் கோவில்களில் அரசாங்கமே நேரிடையாக ஈடுபடுவதைப்போல, நேரிடையாக அரசாங்கமே அர்ச்சகர்களை வைத்துச் செய்யலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் கரும்புப் பண்ணைக் கழகத்தில் 87 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் இந்த 6, 7 ஆண்டுக் காலத்தில். அதனால் அதை மூடிவிடக் கூடாது. அந்த கரும்புப் பண்ணையை நம்பி, அதற்காக கரும்பு விவசாயம் செய்யும் மக்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பாக வடபாதிமங்கலத்தில் ஒரு 18 சென்ட் உரில் நிலம் இருக்கிறது. அங்கே உள்ள மக்கள் 80 சதவிதம் அரிசன மக்கள். கடந்த 20 தலைமுறையாக அந்த நிலத்தை நம்பியே வாழும் மக்கள். அந்தக் காலங்களில் சாட்டையடிப்பட்டு, சாணி வாரி, அடிமையாக உழைத்த ஏழை எளிய மக்கள். அவர்கள் அந்த நிலத்தை நம்பியே உழைத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் உழைத்து உழைத்து அவர்கள் சிந்திய ரத்தத்தின் எதிரொலிதான், அந்த மக்களின் கஷ்டங்கள்தான் இன்றைக்கு 87 லட்சம் ரூபாய் நஷ்டம் என்ற வடிவில் உருவாகியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. எனவே எதிர் காலத்திலாவது அந்த ஏழை விவசாயத் தொழிலாளிகள் வாழ்க்கையில் வசதி வாய்ப்புகள் பெருக, அந்தத் தொழிலாளர்களுக்கே அந்த நிலங்களைப் பகிர்ந்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புன்செய் நிலங்களுக்கு வரி ரத்து செய்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதேபோல் ஐந்து எக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் சிறிய விவசாயிகள் என்று அரசாங்கம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அரசாங்கத்தின் மூலமாக அந்த விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்கிறார்கள். இன்னொரு வரி பஞ்சாயத்து யூனியனிலிருந்து இரண்டரை

மடங்கு வரி வசூலிக்கிறார்கள். ஏற்கனவே விவசாயிகளுக்கு உற்பத்தியில் நஷ்டம் ஏற்படுகிறது. அவர்கள் பெற்ற கடன்களைக் கட்டமுடியவில்லை. ஆகவே இப்படி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் விவசாயிகளிடம் பஞ்சாயத்து யூனியனில் இருந்தும், அரசிலிருந்தும் வசூலிக்கக்கூடிய வரியை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து இந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1—4—1979 முதல் 31—3—1980 வரை 19,104 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இந்த நாடு சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளாகின்றன. காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டை இருபது ஆண்டுகள் ஆண்டு முடித்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஏழரை ஆண்டுகள் கலைஞர் தலைமையில் ஆட்சி நடந்து முடிந்தது. நமது ஆட்சி இரண்டரை ஆண்டுக்காலம் இருந்து இடையில் கலைக்கப்பட்டு இப்போது மீண்டும் வந்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், காங்கிரஸ் கட்சி நண்பர்களும் சிந்திக்கவேண்டும், தி.மு.க. நண்பர்களும் சிந்திக்க வேண்டும். 27½ ஆண்டு ஆட்சிக் காலத்தில் இந்த சாதாரண விவசாயத் தொழிலாளர் களுக்கு, அந்த ஏழை எளிய மக்களுக்கு, அவர்கள் அனைத்துப் பேர்களுக்கும் பட்டா கொடுக்கமுடியாதா ? யார் அதை தடுக்கிறார்கள், தடுத்திருக் கிறார்கள்? அப்படி எதிர்க்கக் கூடியவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? தஞ்சை மாவட்டத்தில் அப்படித் தடுத்தால் ஏழெட்டு குடும்பங்கள்தான் தடுக்கும்.

* * * *

திரு. ந. சிவஞானம் : சபையில் இல்லாத ஒருவரைப்பற்றிச் சொல்கிறார்கள். அப்படிக் குறிப்பிடலாமா ? அதை நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : அதை நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பெயரைக் குறிப்பிடக்கூடாது என்பது சரியல்ல. இங்கே ஒருவரைப் பற்றி சீரியஸான ஒரு குற்றச்சாட்டைக் கூறும்போது அதற்கு அவர் பதில் சொல்ல வாய்ப்பில்லை என்ற பாயின்ட் வருமே தவிர பொதுவாக பெயரைச் சொல்வதைப் பொறுத்தவரையில் அது தப்பு அல்ல. அதை நீக்குவது என்றால் அது ஒரு புதிய ப்ரீஸிடென்ட்டாகி விடும்.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1980 ஜூலை 11]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : இந்தப் பேரவையில் மறுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத தனிப்பட்டவர்கள் பெயரை நம்முடைய விவாதத்தில் குறிப்பிடாமல் இருப்பது நல்லது.

திரு. ரா. உமாநாத் : நேற்று கூட அந்தப் பக்கத்திலிருந்து திரு. ஆறுமுகம் அவர்கள் ஒருவரது பெயரைக் குறிப்பிடாமல் குறிப்பிட்டு காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு. இளையபெருமாள் பெயரைக் குறிப்பிட வேண்டும் என்று வற்புறுத்தியும் அவர் பெயரைச் சொல்லாமல் இருக்கும்போது, பெயரைக் குறிப்பிட்டார்கள். அது உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : அதுவும் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : அவர்கள் லிஸ்ட் கொடுத்திருந்தால்?

That will be restricting our right.

இந்த அவையில் உறுப்பினர்கள் பேசுவதற்கு பூர்ண சுதந்திரம் உண்டு. * இவர்கள் பினாமி நிலங்கள் வைத்திருக்கிறார்கள். லான்ட்லார்ட்ஸைப் பற்றிச் சொல்லும்போது லான்ட்லார்ட்ஸைப் பாதுகாக்க ஏன் காங்கிரஸ் கட்சி முன்வர வேண்டும்? குற்றஞ்சாட்டிப் பேசினால், குற்றஞ்சாட்டப்படுகிறவர்கள் தன்னை நியாயப் படுத்திக்கொள்ள வாய்ப்பில்லாமல் இருக்கும்போது, வெளியில் உள்ளவர்கள் மீது அவையில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது மரபு.

டாக்டர் கே. சமரசம் : * மீது குற்றச்சாட்டு என்றில்லாதபோது, கற்பனையாக இதைப்பற்றியெல்லாம் எல்லோரும் தி.மு.க.-வினர் எல்லாம் பேசிவிட்ட ஒன்று. அதில் பிரச்னை ஒன்றுமில்லை. இது ஒரு பெரிய குற்றச்சாட்டு அல்ல. ஆகவே அது இருக்கலாம் என்பது என் கருத்து.

(முற்பகல் 11-00)

* **திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசும்போது பல விவரங்களைப் பேச வேண்டியிருக்கிறது. இன்னார் இவ்வளவு நிலங்களை பினாமியாக, அதிகமாக நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்று பேசும்போது, அதை எப்படி குற்றச்சாட்டு என்று சொல்வது? சம்பந்தப் பட்டவர் அப்படிச் சொல்லும்போது, அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கின்ற நிலையிலேதான் பேசுகின்றார். நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்பதுதான் வழக்கம். எனவே, அது குற்றச்சாட்டாகாது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : அது குற்றச்சாட்டு தான்.

திரு. சோ. அழகர்சாமி : இதெல்லாம் எப்படி குற்றச்சாட்டாகும்? ஆகவே, இப்படிப் பேசக்கூடாது என்று சொன்னால், சட்டசபையிலே எப்படிப் பேசுவது? முன்னால் நடந்த நடவடிக்கைகளை தாங்கள் கவனித்திருக்கலாம். எனவே, அப்படிச் சொல்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : மோடிவாகச் சொல்லக்கூடாது ; அதைத் தான் சொல்கிறேன்.

* திரு. ரா. உமாநாத் : டாட்டா குடும்பத்திற்கு இவ்வளவு ஆஸ்தி பெருகியிருக்கிறது, அது சுரண்டியது என்று நாங்கள் பேசும்போது, காங்கிரஸ் கட்சித் தலைவர், சுரண்டவில்லை, அவரது சேவையாலே பெற்றது என்று சொன்னார்கள். அதைப்போல் பார்லிமெண்ட் புரொசீடிங்சைப் பார்க்கலாம், பார்லிமெண்டிலே பேசுகின்ற அளவுக்குகூட அந்த பார்லிமெண்ட் ஸ்டாண்டர்டுக்குகூட நாம் பேசமுடியாது என்று சொன்னால் எப்படி?

You cannot restrict our right.

நீங்களும் கீழே வந்து உட்காரப்போகிறீர்கள். உங்களுடைய உரிமையும் பறிபோய் விடும். எனவே தயவுசெய்து பாதுகாப்பு தாருங்கள்.

திரு. இரா. கருப்பையா : இருக்கின்ற யதார்த்த உண்மைகளை அவர் சொல்கிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. சுப்பிரமணியன்) : உங்களுக்கு நியாயமாக இருக்கலாம்; அது மற்றவர்களுக்கு நியாயமற்றதாக இருக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, இப்போது சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகியும் மனைப்பட்டா கொடுக்கின்றபோது, சட்டத்திலே ஓட்டை இருப்பதன் காரணமாக திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில், மணலியில் சர்க்கார் ஊழியர், பட்டாமணியம் ஹைகோர்ட்டுக்குச் சென்று, ஸ்டே வாங்கி இன்றைக்கும் அந்த அரிசன் உரிமை சொல்ல முடியாத அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். இப்படி சட்டத்திலே ஓட்டை இருப்பதினால், இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும். ஓராண்டு காலத்திற்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏழை எளிய

1980 ஜூலை 11] [திரு. பொ. உத்திராபதி]

மக்களுக்கு, உழைக்கின்ற மக்களுக்கு ஆகிய அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டுமென்று நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதே சட்டத்தில் ஓட்டை யிருப்பதன் மூலமாக, தஞ்சை மாவட்டத்தில் மதுக்கூர் பெரியகோட்டையில் ஆட்சி கலைப்பதற்கு சிலதினங்களுக்கு முன்னால், நான் பெயரைக் குறிப்பிடவில்லை, மதுக்கூர் ஜமீன் என்றுதான் சொல்கிறேன், பல ஆண்டுகளாக அங்கே வாழ்ந்தவர்கள், ஐந்து தலைமுறை களாக அங்கே வாழ்ந்தவர்கள், ஓட்டு வீடு, மண் சுவர் வீடு இருந்தன என்பதற்காக, பாட்டன், முப்பாட்டன் காலத்திலே இருந்து குடியிருந்து வந்த 40 வீடுகளை சில தினங்களுக்கு முன்பு ஆயிரக்கணக்கான அடியாட்களை அழைத்துக் கொண்டு சென்று, காவல் துறையினரையும் வைத்துக்கொண்டு, அங்கே வாழ்ந்துவந்த பிற்பட்ட மக்கள் வசித்துவந்த 40 வீடுகளை தகர்த் தெறிந்திருக்கிறார்கள்; இடிக்க முடியாத வீடுகளை வெடிகள் வைத்து தகர்த்தெறிந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதற்காக பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி அந்த இடத்திற்கு நானும், தோழர் மாசிலாமணி அவர்களும் சென்று, இதைப்பற்றி கலெக்டரிடமும் அறிவித்திருந்தோம். அங்கே ஒரு தாய் பிரசவமாகி 7 நாட்கள்தான் ஆகிறது; தங்குவதற்கு இடம் கிடைக்காமல், கீத்தை தலையிலே வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்தோம். சட்டத்திலே ஓட்டை இருப்பதால்தானே, இதைப்போல் எல்லாம் செய்கிறார்கள்.

அதேபோல், முத்துபேட்டை யூனியனில் கிளை தாங்கி வாய்க்கால் வெட்டிக் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கேட்கின்ற நேரத்திலே, 40 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய இடங்களை காலிசெய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. இதற்குக் காரணம் இயற்றப்பட்ட சட்டத்திலே ஓட்டை இருப்பதுதான். அதற்கு அருகாமையில் காட்டிலாகாவைச் சேர்ந்த 7 ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. சட்டத்தை திருத்தாமையால் இத்தகைய சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. இப்போது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறர்கள். இப்படி சட்டத்திலே இருக்கின்ற சில ஓட்டைகளை நீக்கி, உடனடியாக மாற்று இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூலிப் பிரச்னை. சட்டம் நல்ல சட்டம். விவசாயத் தொழிலாளிகள் வரவேற்கிறார்கள். ஆனால் பூரணமாக அமல் நடத்தப்படுகிறதா? அதிகாரிகள் ஒத்துழைக்கிறார்களா? ஆறாம் தேதி நான் சென்றிருந்தேன்—திருத்துறைப் பூண்டி பட்டாமணியம்—அரசாங்க ஊழியர், அவரே சொல்லுகிறார்—நான் இந்தக் கூலி கொடுக்கமாட்டேன், ஸ்டே வாங்கியிருக்கிறேன், சட்டம் இருந்தால்

நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார், கிசான் இன்ஸ்பெக்டருக்கு போன் செய்து கேட்டால் அவர் 'நான் என்ன செய்வது' என்று சொல்லுகிறார். ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சட்டக் கூலி கிடைக்கவும்—நல்ல சட்டம் போட்டாலும் மக்களுக்குப் பயன் கிடைக்கிறதா என்று பார்க்க மக்கள் குழு அமைத்து அங்கிருக்கும் நிலவரங்களை அரசாங்கத்திற்கு அறிவித்து சட்டத்தை மீறக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று தாழ்மையோடு கேட்டு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தின் மூலமாக வருவாய்த் துறைக்கும் அதைச் சார்ந்து இருக்கிற துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டிருப்பதை எனது தொகுதியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே எவ்வித விளம்பரமும் இல்லாமல் மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்யவேண்டு மென்ற நல்லெண்ணத்திலே நல்ல முறையிலே தமிழகத்திலே செயல்பட்டு வந்திருக்கிறது என்பதையும் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக தமிழகத்திலுள்ள மக்கள் அதை அனுபவித்தவர்கள், உணர்ந்தவர்கள், நன்றாக அறிந்தவர்கள் என்பதை இந்த மாமன்றத்தின் முன்னால் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. முத்தையா தலைமை)

நான் இதைக் குறிப்பிடக் காரணம்—சட்டத்தில் இந்தியன் பீனல் கோட் என்று சொல்வார்கள். அதன்படி எந்த ஒரு காரியம் செய்தாலும் 'இன்டென்ஷன்' இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். 'மென்ஸ் ரியா' என்று சொல்வார்கள். மனம் ஒப்பியிருக்கவேண்டும். உதாரணமாக, இரண்டு பிரிவினர் சண்டை போட்டுக் கொண்டால் அதிலே ஒருவர் குத்தப்பட்டு இறந்துவிட்டால் அந்தக் கொலைக்கும், இரண்டு பேருக்கு இடையே தகராறு இருந்து, அது நீண்ட நாட்களாக மனதில் இருந்து ஒரு நேரத்தில் சில ஆட்களை வைத்து கொலை செய்து விட்டால் அந்தக் கொலைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்வார்கள். திடீரென்று சண்டை ஏற்பட்டு கொலை நடந்தால் அதை "grave and sudden provocation" என்று சொல்வார்கள். ஆனால் திட்டம் போட்டு ஒருவனைக் கொலை செய்தால் அதை "intentional murder" என்று சொல்வார்கள்.

எந்த அடிப்படையில் ஒரு காரியம் செயல்படுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தமிழகத்தைப் பொறுத்தவரை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஏழை எளியவர்களுக்கு நல்ல திட்டங்களைப் போடவேண்டும், முறையாகச் சென்று அவர்களுக்கு அதன் பலன் சேரவேண்டும், அப்படிச் சேரும்போது அதைத் தடுக்க இடையில் யாராவது இருந்தால் அவர்களை அடையாளம் காட்ட வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் ஆட்சியில் வருவாய்த் துறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்று சொல்லுவதில் பெருமைப்படுகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே ஒரு கருத்தை விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1956 ஆம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட குத்தகை தாரர்கள், சாகுபடிதாரர்கள் நியாய வாரச் சட்டம் இன்று வரை அமலில் இருந்தது. 1956-ல் இருந்த விலைவாசியின் நிலைமை, 1956-ல் இருந்த விளைபொருள் உற்பத்திச் செலவு ஆகியவற்றையும் இன்றையதினம் இருக்கிற உற்பத்திச் செலவு விலைவாசி நிலைமையையும் பார்க்கும்போது விலைவாசி உயர்ந்து வருகிற அளவுக்கு உற்பத்திப் பொருள்கள் அதிகமாக இல்லை என்பது மட்டுமல்ல உற்பத்தி பண்ணுகிற பொருள்களுக்கு அதிகமான விலை கிடைக்கமுடியவில்லை. 1956-ல் ஏற்படுத்தப்பட்ட 40—60 சட்டம் தொடர்ந்து இன்றுவரை 24 வருஷங்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலே யாரும் மாற்றம் செய்யவில்லை. அதிலே யாரும் கை வைக்கவில்லை. ஆனால்

(முற்பகல் 11-10.)

விவசாயிகள் போராட்டம், விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டம் இப்படியெல்லாம் இருக்கிறதே, குத்தகை செய்கிறவர்கள் நிலத்தினுடைய குத்தகையை குறைத்து அளக்கவேண்டுமென்ற நிலைமை இதுவரையிலே இல்லை. இதையெல்லாம் துல்லியமாக தெரிந்துதான் புரட்சித் தலைவர் அவர்கள் குத்தகை விவசாயிகளுக்கு நியாயமான முறையிலே, 100 கலம் விளைந்தால் 25 கலம் நிலச் சொந்தக்காரருக்கு அளந்தால் போதும் என்றும் 75 கலத்தை குத்தகை விவசாயி எடுத்துக்கொள்ளலாம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது நல்லபடியாக செயல்படவில்லை என்ற குறை இருக்கிறது. அதைச் செயல்படுத்தக்கூடிய அதிகாரிகள் சரியாக இல்லை, இப்போது அந்த அதிகாரிகளைச் சரிக்கட்டவேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இன்றைய தினம் இருக்கிற நல்ல நிலைமைகளை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் இருக்கின்ற பகுதிகளிலே வெள்ளம் ஏற்படுகிறபோது அவர்களுடைய குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை அல்லது 400 ரூபாயை போனஸாகக் கொடுக்கவேண்டுமென்ற நல்ல திட்டத்தை வருவாய்த் துறையிலே வைத்திருக்கிறார்கள். இது உண்மையிலே அவ்வாறு பாதிக்கப்படக்கூடிய பகுதிகளிலே இருக்கின்ற ஊழியர்களுக்கு நல்ல திட்டமாகும்.

சில திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சில குழுக்களை நியமிக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவர்களின் கீழே உள்ள அதிகாரிகள் இவர்களைக்கொண்ட குழுக்களை அமைத்து இந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே செயல்படுகின்றனவா என்று பார்க்கக்கூடிய முறையிலே அமைக்கிறோம். உள்ளபடியே நாங்கள் பாராட்டுகிறோம் வரவேற்கிறோம். அதே நேரத்திலே பொதுமக்கள் தொடர்புடைய சட்ட மன்ற உறுப்பினர் களையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது அந்தப் பகுதிகளிலே உள்ள சங்கங்களை நடத்துகிறவர்கள் அதிலே இடம்பெற்றால் அவைகள் நல்ல முறையிலே செயல்படுவதற்கு வழிவகை இருக்கும்.

இங்கே முன்னதாகப் பேசியவர்கள் சொன்னார்கள். புயல் நிவாரணப் புகலிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது எந்த அரசாங்கத்தினுடைய பணத்திலே கட்டப்பட்டாலும்கூட—இங்கே சொல்வார்கள், அண்டை வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே என்ற பழமொழியைப் போல் இவர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்களே என்று கேட்பார்கள்—யாருடைய பணமாக இருந்தாலும் வெளியிடத்திலே வாங்கி கட்டிக்கொடுக்கப்பட்டாலும்கூட இந்தத் திட்டத்தின் மூலமாக கடலோரப் பகுதிகளிலே குடியிருக்கிற மீனவர்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களிலே இருப்பதற்கான சிறந்த திட்டமாக இருக்கிறது. புகலிடங்கள் கட்டப்பட்டு, அங்கே வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டு அவைகள் மூலமாக மீனவ மக்களுக்கு தகவல்கள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு அவர்கள் எல்லாம் உடனடியாக பாதுகாப்பான பகுதி களுக்குச் செல்வதற்கான நல்ல திட்டமாக இருக்கிறது.

இன்னும் பல திட்டங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. உச்சவரம்புச் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட மிச்ச நிலங்களை ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது. ஏற்கெனவே கட்டவேண்டுமென்று சொல்லப்பட்ட தொகையை இந்த அரசு குறைத்திருக்கிறது, ஆண்டுத் தவணையை இலகுவாக்கி, அவர்கள் அதனைக் கட்டுகின்ற முறையிலே

அரசாங்கம் குறைத்திருக்கிறது. இது வரவேற்கக்கூடிய திட்டமாகும். 1961 ஆம் ஆண்டிலே நில உச்சவரம்புச் சட்டம் வந்தது, அதன் பிறகு படிப்படியாக சில திருத்தங்கள் வந்தன. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட மிச்ச நிலங்கள், அந்த நிலங்களை யார் யார் கொடுத்தார்களோ அவர்களே அதை வைத்துக் கொண்டு இருக்கக்கூடிய நிலைமை, அவர்களுக்கே அது திருப்பிப் போகிற நிலைமைதான் இருக்கிறது. ஏற்கெனவே அந்த நிலத்தை வைத்திருந்தவர்கள், நிலச் சொந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய அடுத்த உறவினர்களுடைய கையிலேதான் அந்த நிலங்கள் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். குத்தகை செய்கிறவர்கள் பயிர்செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது, ஆனால் அவர்கள் அந்தத் தொகையைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. அதன் காரணத்தினால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அல்லது வசதி படைத்தவர்களுடைய—ஆவணம் அவர்களுடைய பெயரிலே இருந்தாலும்—உரிமையில்தான் இருக்கிறது, பணம் கட்டுவதாக இருந்தாலும், அதிலே பயிரிடுவதாக இருந்தாலும் சரி அவர்களுடைய உரிமையாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு வரையிலே அப்படி கொடுக்கப்பட்ட நிலங்களிலே 100-க்கு 90 விழுக்காடு அந்த நிலங்களை யார் கொடுத்தார்களோ அவர்களிடத்திலேதான் இருக்கின்றன. இது சம்பந்தமாக பல வழக்குகள் வழக்கு மன்றங்களிலே இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவேதான் இந்த நிலைமைகள் மாற வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே அமைந்திருக்கின்ற ஆட்சியில், குறிப்பாக வருவாய்த் துறையில் எக்கருக்கு இவ்வளவு என்று—3,500 ரூபாய் என்று கருதுகிறேன்—அந்தத் தொகையை வைத்து, குத்தகை சாகுபடி செய்பவர்கள் அந்தத் தொகையைச் செலுத்த, அவர்களுடைய தவணையை இலகுவாக ஆக்கியிருப்பதற்கான வழிவகை செய்திருப்பதை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே ஆதி ஆந்திரர்கள் துப்புரவுப் பணி செய்து கொண்டிருப்பதாக மதிப்பிற்குரிய திரு. சங்கரய்யா அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு வீடு கட்டும் வசதிகளை முறைப்படுத்தி, குறைவான தொகையை அவர்களிடத்திலிருந்து வசூல் செய்து, பட்டா வழங்க அரசு எடுத்த நடவடிக்கைகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஏனென்றால் நகர்ப்புறங்களில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நிலப்பட்டா அல்லது மனைப்பட்டா வழங்கப்படுவதில்லை சட்டத்திலேயும்கூட சரியான முறையில் அவர்களுக்குச் சலுகைகள் இல்லை, ஆகவே, நகராட்சிகளாகட்டும், மாநகராட்சியாகட்டும், அங்கேயுள்ள

மக்களுக்குக் கொடுக்கின்ற நிலத்தைப் பட்டாவாகவோ அல்லது குறைந்த தொகையிலே வாங்கவோ அரசாங்கம் இன்னும் ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, இங்கே குறிப்பிடும்பொழுது சொன்னார்கள். உச்சவரம்பு நிலத்தை எடுக்கும்பொழுது பெரும்பாலான அரசு ஊழியர்களிடத்தில்—இன்னும் சொல்லப்போனால் நிலச் சொந்தக்காரர்களிடத்திலேயிருந்து பட்டா வாங்கி வகை செய்துவிடுகிறார்கள், சில கிராம அதிகாரிகளைச் சரிக்கட்டி. இந்த நிலைமை மாற வேண்டும். நான் அரசுக்கு ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். நில உச்சவரம்பு நிலத்தில் மனுப் போடுபவர்கள் அரசு ஊழியர்களாகவோ அல்லது மாதச் சம்பளம் பெறக் கூடியவர்களாகவோ இருக்கக் கூடாது என்று செய்ய வேண்டும். சென்னையிலே இருக்கிறார்கள், மாதம் ஆயிரம் ரூபாய், ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் உச்சவரம்பு நிலத்தில் அவர்கள் பெயர்கள் வந்திருக்கின்றன, பட்டா இருக்கிறது. கிராமத்திலே நிலச் சொந்தக்காரர்களாகக்கூட இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மாற வேண்டுமென்றால் இந்தத் துறையிலே இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களைப் புகுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே வருவாய்த்துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, வருவாய்த்துறையைப் பொறுத்தவரையிலே இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டாலும் சீர்காழி தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு ஒரு மாதம் கழித்துத்தான் சீர்காழி, மாயவரம் போன்ற இடங்களுக்குத் தண்ணீர் வருகிறது. காரணம் என்னவென்றால், சீர்காழி, மாயவரம் தாலுக்காக்களுக்கு மேற்கே உள்ளவர்கள் மேட்டூரிலிருந்து வரும் தண்ணீரைப் பயன்படுத்தி சாகுபடியை முடித்து வடிகால் தண்ணீரை விடுகிறார்கள். எனவே, நாங்கள் வடிகால் பாசனம்தான் செய்துவருகிறோம். அதற்குக் காரணம், எவ்வளவு கட்டுப்பாடுகள் இருந்தாலும் கூட அவைகள் அங்கே செயல்பட முடியவில்லை. சிறிய சிறிய அணைக் கட்டுகள் இருக்கின்றன. பகலிலே அவர்கள் எடுத்துக்கொள்வது என்றும், இரவிலே எங்களுக்குத் தருவது என்றும் திட்டம். ஆனால் அவர்கள் பகலிலே பாய்ச்சிக் கொள்கிறார்கள், இரவிலேயும்—காவல் போட்டிருந்தும் கூட, அவர்களே பயன்படுத்திக்கொண்டு தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். இதனால் ஒரு மாதம் கழித்துத்தான் தண்ணீர் எங்கள் பகுதிகளுக்கு வருகிறது. மற்ற இடங்களிலே அறுவடை செய்கின்ற நேரத்திலே நாங்கள் சாகுபடியை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அக்டோபர், நவம்பர் மாதங்கள்

வரும். வெள்ளம் வரும், கிழக்கே புயல் வரும், மேற்கே வெள்ளம் வரும். இந்த இரண்டுக்கும் ஈடுகொடுத்து சாகுபடி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைதான் மாயூரம், செம்பனார்கோயில், பூம்புகார் சீர்காழி பகுதிகளில் இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு நல்லதொரு திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நான் சொல்வது, ஆழ் கிணறுகள், சமுதாயக் கிணறுகள் ஆகியவைகளைப் பயன்படுத்தி அங்கேயிருக்கின்ற மக்கள் சாகுபடி செய்ய ஒரு வழிவகை செய்தால், அங்கேயிருப்பவர்களெல்லாம் காலத்திலே சாகுபடி செய்ய ஏதுவாகும். இப்படிப்பட்ட பிரச்சினைகளை அரசாங்கம் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை மேன்மேலும் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் இன்றையதினம் புரட்சித் தலைவரவர்களின் தலைமையில் அமைந்திருக்கின்ற அரசு முனைந்து இருக்கிறது. இந்த அரசினுடைய வருவாயை நல்ல முறையில் வசூல் செய்வது மட்டுமல்ல, முறையாகச் செயல்படுத்துவதற்காகத் தான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இங்கே மானியம் கோரி இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. ப. தீர்த்தராமன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளிலே பேச, என்னை அழைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளிலே கொடுத்திருக்கிற நல்ல திட்டங்களை நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் சார்பாக வரவேற்கிறேன். இந்தத் திட்டங்களோடு, மேலும் சில நல்ல திட்டங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பகுதியிலே அடிமட்டத்திலே உள்ள மக்களோடு தொடர்புள்ளவர்கள் கிராம அதிகாரிகள். அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்ற காரணத்தினாலே, மக்கள் அணுகுகின்றபொழுது சரியான பதிலைக் கொடுப்பதில்லை. தேவையான சான்றிதழைக் கேட்கின்ற நேரத்திலே, குறிப்பிட்ட நேரத்திலே கொடுப்பதில்லை. இந்த நிலை மாறுவதற்காக அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கி, கிராமச் சாவடிகள் அமைத்துக் கொடுத்தால், மக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும், அவர்களும் நன்கு பணி புரிய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்முறை அண்டை மாநிலங்களிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன இலாகாவினர் வனத்தை அபிவிருத்தி செய்வது நல்ல திட்டம்தான். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், வனத்தை அபிவிருத்தி செய்கிறோம் என்ற பெயரால், விவசாயி உற்பத்தி செய்கின்ற நிலங்களை, உணவுப்பொருள் விளைகின்ற நிலங்களை, 20, 30 ஆண்டுகாலமாக பயிர் செய்து அனுபவித்து வரும் நிலங்களை ஆக்கிரமித்து, செடிகளை வைத்து விடுகிறார்கள். ஆகவே சாகுபடி செய்ய முடியாத நிலங்களில் மட்டும் வன இலாகா அபிவிருத்தி செய்து கொள்ளலாம் என்றும், சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை, சாகுபடிக்கே கொடுக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சைக்கிள் சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற ஒரு வாகனம். அந்தக் காரணத்தால், அதற்கு வரியைக் குறைத்ததற்காக என்னுடைய கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுமையாக நீக்கினால், சாதாரண மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளிய முறையில், சிறு தொழில்கள்மூலம் செய்கின்ற சோப்புகளுக்கு வரி விலக்கு அளித்தால், அது சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் என்பதையும், ஆகவே, வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், சாதாரண மக்கள் பயன்படுத்தி வருகின்ற நிலங்களிலிருந்து, பயிரிடுபவர்கள் அகற்றப்படுகின்ற நிலை மாற்றப் பட்டு அவர்களுக்கே பட்டா வழங்கப்பட வேண்டும். வன இலாகாவினர் ஏற்கனவே சில தவறுகளைச் செய்யும்போது, 'கூப்' நடக்கின்றது என்ற பெயராலே, சந்தனக் கட்டைகளைக் கடத்திச் செல்கின்ற நிலை இருக்கின்றது. அவ்வளவு மோசமான நிலை இருக்கிற காரணத்தாலே அவர்கள் இம்மாதிரி விவசாய நிலங்களை எடுப்பது தவறானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை, எங்கள் கட்சி, புரட்சித் தலைவருக்கு மிக உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் பாதி அளவுக்கு ஒரே ஆள் வீட்டைக் கட்டியிருக்கிறார். அந்த வீடு யார் வீடு என்று கேட்டால், 2½ ஆண்டுக் காலத்திலே கள்ளுக்கடை வைத்திருந்தவரது வீடு என்று சொல்கிறார்கள். அந்தப் பணம் எங்கிருந்து வந்தது? அந்தப் பகுதி மக்களுடைய பணம்தானே அது. ஆகவே, இந்நிலையைப் போக்க, மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பென்னகரம் தொகுதியில், 70 கள்ளுக் கடைகள் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, சட்டத்தைத் தீவிரமாக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறது. எந்தச் சர்க்கார் அதிகாரம் வழங்குகின்றது என்று மக்கள் கேட்கின்ற நிலையிருக்கிறது. அதை மேலும் வளர விடாது, அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீதும், முத்திரைத் தாள்கள் நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு போன்ற மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முத்திரைத் தாள்கள் விற்பனையைப் பொறுத்தவரை பொதுமக்களுக்கு அரசு அலுவலகங்கள் மூலமாகவும், உரிமை பெற்ற உதவிப் பதிவு அலுவலகங்கள் மூலமாகவும் விற்பனை செய்வதால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மேலும் 50 உதவிப் பதிவு அலுவலகங்களை, இவ்விற்பனைக்கு ஏற்றவையாகக் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். முத்திரைத் தாள் விற்பனையைப் பொறுத்த வரையில் சில குறைபாடுகள் உள்ளன. அவர்கள் தங்கள் கையிலே இருப்பதை வைத்துக்கொண்டே சில சமயங்களில் தற்செயல் தட்டுப்பாட்டை உருவாக்கு கிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக தாளுக்கு உள்ள விலையைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்து வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில், ஆம்பூரில் ஒரு துணை கருவூலம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். துணைக் கருவூலம் அமைக்கத் தேவையான அத்தனை வசதிகளும் ஆம்பூரில் இருக்கின்றன. அங்கே அதற்கானத் தேவையும் இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கருவூலத்திற்குத் தேவையான பாதுகாப்பு அறைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால் என்ன காரணத்தாலோ அது துவக்கப்படவில்லை. எனவே அரசு இதில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்றுக் கொள்ள உதவி பதிவாளர்களுக்கு அனுமதி அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன் அதற்காக அரசுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் பொதுமக்களுக்குச்

சிரமங்கள் குறையும். முத்திரைத் தாள் தீர்வையை கருவூலத்தில் செலுத்தி விட்டு, செலுத்தப்பட்ட சீட்டுடன் அலுவலகத்தை அணுகும் முறை வரவேற்கத்தக்கது.

அடுத்து வணிகர் நலன் பற்றி ஆராய்ந்து, தக்க பரிந்துரைகள் அரசுக்குத் தருவதற்காக வணிகர் நலக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கது. அப்படி அந்தக் குழுவை அமைக்கும்போது அனைத்து வியாபாரிகளுக்கும் அதில் இடம் கொடுக்கவேண்டும். பெரிய வணிகர், சிறிய வணிகர் என்று பாரபட்சம் காட்டாமல் அரசு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புப் பணிகளைப் பொறுத்தவரை இந்த அரசு மிகவும் சிறப்பான பணிகளை ஆற்றி வந்துள்ளது என்பதிலே யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க முடியாது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வாணியம்பாடியில் ஏற்பட்ட வெள்ளத்தில் 1,500 குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டது. அதனால் 1,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அந்த சமயத்தில் அவர்களுக்கு இந்த அரசு பெரும் உதவிகளையும், நிவாரணப் பணிகளையும் செய்து உள்ளது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளையும், அதில் பாதிக்கப்பட்டவர்களையும் நேரில் பார்வையிட்டு வந்தார். அவர்களை அந்த சமயத்தில் தற்காலிகமாக நகருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள சிறிய மலைமீது குடியேற்றி வைத்தார்கள். மூன்று மாதத்தில் அவர்களை வேறு பாதுகாப்பான இடத்திற்கு நிரந்தரமாக குடியமர்த்துவதாக அரசு தரப்பில் வாக்குறுதி கூறப்பட்டது. அதற்கான பணிகளும் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால் அதிலே வேகம் இல்லை. அவர்கள் மலை உச்சியின் மீது இருப்பதால் சிறியகாற்று வந்தால் கூட, அவர்களுடைய குடிசைகள் சாய்ந்து விடுகின்றன. பெருமளவுக்கு மழையோ, காற்றோ வந்தால் பாதுகாப்பு கிடையாது. சென்ற மாதம் பெய்த காற்று மழையினால் 300 குடிசைகள் சாய்ந்துவிட்டன. அவர்களுக்கு அங்கு தண்ணீர் வசதியோ, மின்வசதியோ கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அரசு இதில் தீவிர நடவடிக்கை எடுத்து விரைவில் அவர்களைப் பாதுகாப்பான இடத்தில் நிரந்தரமாக குடியமர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டுமனைப் பட்டாக்களைப் பொறுத்தவரையில் கிராமங்களில் மிகவும் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. அரசு இதில் தீவிரமான கவனம் செலுத்தவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 11] [திரு. ந. குலசேகரபாண்டியன்]

கடைசியாக கொண்டு வரப்பட்ட குத்தகை நில உடமை உச்சவரம்பு சட்டத்தில் ஐந்து ஸ்டான்டர்டு ஏக்கர் நிலத்துக்கு மேல் உள்ள நிலத்தை கைவிடவேண்டும் என்று இருந்ததை மூன்று ஸ்டான்டர்டு ஏக்கராக குறைத்ததை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதேசமயத்தில் அதற்கு மேல் உபரியாக உள்ள நிலம் நிலச் சொந்தக்காரர்களுக்கு இல்லாமல், நிலம் இல்லாதவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே குத்தகைதாரர்களை விட, நிலச் சொந்தக்காரர்களுக்குக் கூட மிகவும் மோசமான நிலை இருக்கிறது. நான் நிலச் சொந்தக்காரர்களுக்காக வாதாடுகிறேன் என்று இந்த மன்றத்தில் யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

(முற்பகல் 11-30)

நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலம் ஒப்படை செய்யும்போது, அந்த நில உரிமையாளர்களுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கூட சட்டத்திலே வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை அரசு கருணையோடு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டங்கள் தற்போது அமல் நடத்தும் பொறுப்பு தாசில்தார், ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ. போன்றவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக நிறைய பணிகள் இருப்பதன் காரணத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அவர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு நீண்ட நாட்கள் ஆகிறது. இது சம்பந்தமான வழக்குகள் கூட 7 ஆண்டுகாலம், 10 ஆண்டுகாலம் தள்ளியே தீர்க்கப்படுகின்றன. ஆகவே, அந்தச் சட்டங்களை அமல் செய்யும் அதிகாரம் நீதித் துறைக்குக் கொடுத்தால் சிறப்பாகவும், துரிதமாகவும் செய்வதற்கு வழிவகை செய்யும் என்று என்னுடைய கருத்தைக் கூறி, இந்த மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை முழுமையாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவை இந்த ரெவின்யூ போர்ட்டை (வருவாய் வாரியத்தை) எடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன், என்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பல முட்டுக்கட்டைகள் இருந்தன. ஏழை எளியமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவற்றையெல்லாம் நல்ல வகையில்

ஆராய்ந்து, அந்த வருவாய் வாரியத்தை ரத்து செய்ததற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், ஏழை எளிய மக்களின் சார்பிலும் என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல நிலப்பட்டாக்கள் பினாமியாக இருக்கின்றன. கோயில் நிலங்கள், டிரஸ்ட் நிலங்கள் ஆகியவற்றை யார் யாரோ தனியார் வைத்துக் கொண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு என்னுடைய தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னது போல்—ஒரு 'ஹை லெவல் கமிட்டி' ஒவ்வொரு யூனியன் பகுதியிலும் அமைத்து, அந்தக் கமிட்டி யார் யார் இப்படிப்பட்ட நிலங்களை வைத்து இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, ஏழை எளிய மக்களுக்கு அந்த உபரி நிலங்களை ஒப்படைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஏழை மக்கள் மிகவும் இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

யூனியன் அலுவலகங்களில் வேலை செய்யும் பணியாளர்களுக்குக் கூட நாம் வீட்டு வசதி செய்து கொடுத்து இருக்கிறோம். ஆனால் தாலுக்கா தலைநகரங்களில் வசிக்கும் பணியாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கப்பட இல்லை. சில இடங்களில் தாசில்தாருக்கு வீடு இருக்கிறது. மற்ற அலுவலர் களுக்கு வீடு இல்லை. அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தாலுக்கா தலைநகரங்களில் ஒரு 100 வீடு கட்டிக் கொடுத்து, வாடகை மூலம் அந்தப் பணத்தை வசூல் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கட்மோஷன் கொடுத்து இருக்கிறார்கள். நில வரி முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று கொடுத்து இருக்கிறார்கள். நிலவரி முழுமையாகத் தள்ளுபடி செய்து விட்டால் அந்த நிலம் தன்னுடைய நிலம் தான் என்று சொல்லிக்கொள்வதற்கு அந்த நிலச் சொந்தக்காரனுக்கு என்ன அத்தாட்சி இருக்கிறது. ஆகவே, நான் தெரிவிக்க விரும்புவது—செஸ்சார்ஜ் தள்ளுபடி செய்யலாம். நிலவரியை முழுமையாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்வது சரியல்ல. மாடு வாங்க கடன் வேண்டும் என்று கேட்கப்போனால், நிலம் வைத்திருக்கிறாயா, நிலவரி ரசீது இருக்கிறதா, அல்லது சொத்து வரி கட்டிய ரசீது இருக்கிறா என்று கேட்கிறார்கள். அவன் அந்த ரசீதைக் காட்டித் தான் கடன் பெற முடிகிறது. ஆகவே, நிலவரி முழுமையாக ரத்து செய்வது என்பதைவிட சற்று குறைவாக நிலவரி வசூலிப்பது பொருத்தமுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 ஜூலை 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

எங்கெல்லாம் புறம்போக்கு நிலம் இருக்கிறதோ—ஓடை புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, ரெவின்யூ புறம்போக்கு—அதில் எல்லாம் கிராமப் புறங்களில் பல்வேறு மக்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று இங்கே கூறப்பட்டு இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன் என்று சொன்னாலும், அதனால் மிகவும் பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், ஊருக்குள்ளே வீடுகளைக் கட்டிக்கொண்டுள்ள வசதி படைத்தவர்கள் கூட புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக்கொண்டு, குடிசைகளைப் போட்டுக்கொண்டு, பட்டா செய்து கொடுங்கள் என்று கேட்கும் நிலை வரும். இப்படிப்பட்ட நிலைகள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. ஆகவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, குறிப்பாக, கண்மாய் ஆக்கிரமிப்பு ஏராளமாக இருக்கிறது—அவற்றை அகற்றி, நீர்ப்பாசன வசதி தட்டுப்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். 1958-ல் நான் எம்.எல்.ஏ.-வாக இருந்தபோது, என்னுடைய 9 ஏக்கர் 30 சென்ட் நிலத்தை கண்மாய்க்காக எழுதிக்கொடுத்து, அதற்கு செட்டில்மென்ட் எல்லாம் போட்ட பிறகு, சில ஆண்டுகளுக்குப் பின் தனிப்பட்ட ஒருவருக்கு அதில் 4 ஏக்கர் பட்டா கொடுக்கப்பட்டு இருக்கிறது. எந்தக் காரணத்திற்காக, எந்த உயர்ந்த லட்சியத்திற்காக—மக்களுக்குப் பயன்படவேண்டும் என்பதற்காக—நான் அந்த நிலத்தை ஒப்படை செய்தேனோ அந்த எண்ணம் ஈடேறவில்லை என்பதைத் தெரிவித்து, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, வத்தலகுண்டு பஞ்சாயத்து யூனியனில் நடக்கக்கூடிய அக்கிரமங்களை நான் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும். வத்தலகுண்டு பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதற்கு அடுத்து ஓடைப்புறம்போக்கு, நத்தம் நறம்போக்கு இருக்கிறது. ஆங்கே

* * * *

ஒரு நபர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உதவியோடு 24 அறைகள் கொண்ட ஒரு ஓட்டலையும் லாட்ஜையும் கட்டிக்கொண்டிருக்கிறார். கட்டுவதற்கு யாரிடத்திலும் பெர்மிஷன் வாங்கவில்லை. பிளான் போட்டு, பேஸ்மென்ட் வரையில் வந்துவிட்டது. ஜனங்கள் தடுத்திருக்கிறார்கள். அதைக் கட்டக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் நேரத்திலே ஒரு பையன் அங்கே

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒரு போர்டு எழுதி வைத்தான். அந்தக் கட்டடத்தைக் கட்டியவர் போர்டு எழுதியதற்காக அவனை அடித்து, அவன் காலை வெட்டி, கால் முறிந்து இன்றைக்கு அந்தப் பையன் ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்ற பயங்கரமான நிலையை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, அவர்கள் பேசும்போது

* * * *

என்று குறிப்பிட்டார்கள். அது சபைக் குறிப்பில் இருக்கலாமா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : அவர்கள் சொன்ன * * * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அதைப்போல இன்னொரு சம்பவம். கட்டக்காமன்பட்டி பஞ்சாயத்து இருக்கிறது. அந்த பஞ்சாயத்தி லுள்ள கண்மாயில் தென்னை மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களை அந்த பஞ்சாயத்தின் முன்னாள் தலைவர் 3 ஆண்டுகளுக்கு 300 ரூபாய்க்கு ஏலம் விட்டார். 3 ஆண்டுக்கு 300 ரூபாய்க்கு ஏலம் விட்டதை மறுபடியும் 7,000, 8,000 ரூபாய்க்கு ஏலம் போட்டு பங்குபோட்டு பகிர்ந்துகொண்டார்கள். நான் அந்தத் தலைவர் யார் என்று சொல்லவில்லை; நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது பஞ்சாயத்துக்கள் எல்லாம் கலைக்கப்பட்ட பிறகு சென்ற அக்டோபரில் அதே மரங்கள் ஏலம் விடப்பட்டதில் ஒரு ஆண்டுக்கு 7,000 ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது. அப்படியானால் சர்க்கார் வருமானம் எந்த அளவுக்கு ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

மரங்களைக் கூட இப்படி பல்வேறு இடங்களில் குறைந்த ஏலத்தில் விட்டு, அதை மறுபடியும் மேல் ஏலத்திற்கு விட்டு, பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலைமை ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் ஒத்துழைப்போடு நடக்கிறது. அதை எல்லாம் அரசாங்கம் தடை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தீ விபத்து, வெள்ளச் சேதத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஒரு குடிசைக்கு 200 ரூபாய் உதவித் தொகை கொடுக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இப்படிப்பட்ட தீ விபத்து ஏற்படும்போது அவர்களுக்கு துணி மணி வாங்குவதற்காக கைச்செலவுக்கு 200 ரூபாய் கொடுப்பதோடு அப்படிப்பட்டவர்களுக்கு 5,000 ரூபாய் கடனாகவும் மானிய

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1980 ஜூலை 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

மாகவும் கொடுத்தால் அவர்கள் நிரந்தரமான வீடு கட்டிக்கொள்ள உதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு ரொம்ப பயனுள்ளதாக இருக்கிறது. இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இப்போது 30 ரூபாய் கொடுத்துவிட்டால் பெர்மிட் வாங்கி மது அருந்தலாம் என்ற நிலை இருக்கிறது. அதையும் நீக்கிவிட வேண்டுமென்று நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்கள் சொல்கிறார்கள். நான் அதற்காக மெத்த வருத்தப்படுகிறேன். கம்யூனிஸ்ட் சகோதரர்கள் இதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால் ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், பிற்பட்ட சமுதாய மக்கள் சமுதாயத்தில் முன்னேறவே முடியாது. அவர்களுடைய முன்னேற்றம் தடைப்பட்டுவிடும். 10, 12 வயது குழந்தைகள் எல்லாம் கூட குடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது. இப்போது 30 ரூபாய்க்கு பெர்மிட் என்பதை 100 ரூபாய் என்று ஆக்க வேண்டும்; அதோடு 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் பெர்மிட் வழங்கப்படும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்படியானால்தான் அக்கிரமம் நடக்காமல் தடுப்ப தற்கு வாய்ப்பு இருக்கும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நாம் இப்போது மரங்களை வளர்ப்பதில் தீவிரமாக இருக்கிறோம். ஏற்கெனவே மரங்கள் வைத்திருக்கிறோம். அதை யாரோ இன்றைக்கு வெட்டுகிறார்கள். சொந்த நன்மைக்கு அதை பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையை அறவே தடுக்க வேண்டும். ரோடு ஓரத்திலும், கண்மாய் ஓரத்திலும், இப்படி எங்கெல்லாம் மரங்களை வளர்க்க முடியுமோ அங்கெல்லாம் பஞ்சாயத்தின் சார்பிலே அல்லது அரசாங்கத்தின் சார்பிலே மரங்களை வைத்து வளர்த்து அதிலிருந்து வருமானம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்தபடியாக, மதுவிலக்குபற்றி ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டியின் மூலமாக மது காய்ச்சுபவர்களை மது காய்ச்சக் கூடாது என்று சொல்லி மது காய்ச்சாத நிலைமையை ஏற்படுத்தி வைத்திருந்தோம். அப்படிக் காய்ச்சாமல் இருக்கின்றவர்களைப் பார்த்து சின்ன சின்ன போலீஸ் அதிகாரிகள் அதாவது சிறிய காவல் நிலையங்களிலே இருப்பவர்கள்,

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

'நீ ஏன் மது காய்ச்சாமல் நிறுத்தி விட்டாய்' நீ மதுவைக் காய்ச்சினால்தான் எங்களுக்கு மாமூல் கிடைக்கும், ஆகவே மதுவைக் காய்ச்சு என்று கட்டாயப் படுத்தி காய்ச்சுகின்ற சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். பெரிய அதிகாரிகள் இவ்வாறு செய்வதில்லை. சின்ன அதிகாரிகள்தான் இந்த மாதிரி நடந்து கொள்கிறார்கள். ஆகவே இது குறித்து தயவுசெய்து கடுமையான நடவடிக்கை எடுத்து இதைத் தடுக்கவேண்டும். எவ்வளவு கடுமையான நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கலாம்.

அடுத்து பல இடங்களில் குழந்தைகளைத் திருடுவது, பெண்களை அவ மானப்படுத்துவது போன்ற நிலைகளை எல்லாம் ஒழிக்க வேண்டுமென்றால் ஜனநாயகத்தைத் தூக்கிக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு அரபு நாடுகளில் இருப்பதைப்போல கடுமையான தண்டனைகளை இதுபோன்ற குற்றவாளி களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கடுமையான நடவடிக்கை எடுத்தால் தான் தூங்கிக்கொண்டிருக்கின்ற பெண்களைத் தூக்கிக்கொண்டுபோவது குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு போவது போன்ற குற்றங்களைத் தடுக்க முடியும். இன்னும் நரபலி கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது என்றால் நாம் எல்லாம் வெட்கப்பட வேண்டிய வேதனைப்பட வேண்டிய நிலைதான் இருக்கின்றது. நேற்றுகூட ஒருவரைக் கொலை செய்திருக்கிறார்கள். ஆகவே, இதற்கெல்லாம் என்ன விசாரணை? விசாரணை செய்யாமல் உடனடியாக அவர்களைத் தூக்கிலே போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி இருந்தால்தான் குற்றங்களைத் தவிர்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தற்காலிக சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு நல்ல கருத்தினை இங்கே சொன்னார்கள். அந்தக் கருத்தை ஒட்டியே என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமங்களில் கைப் பற்றப்படுகின்ற உபரி நிலங்களை யாருக்கு நாம் பட்டா செய்து கொடுக் கிறோமோ அவை அந்தப் பெயரை உடையவர்களுக்கே விரைவாகப் போய்ச் சேருவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிச் செய்யாததன் விளை வாகத்தான் நாம் யாரிடமிருந்து நிலத்தைப் பிடுங்குகிறோமோ அந்த நபரே அலுவலகங்களுக்குச் சென்று அந்த நிலப்பட்டா கொடுக்கப்படவேண்டியவர்

களுக்குப் போய்ச் சேருவதற்கு முன்னாலே கள்ளத்தனமாக சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளை எல்லாம் பறித்து விடுகிறார்கள். இதனால் இரண்டு மூன்று ஆண்டுக்காலம் தாமதமாகிவிடுகிறது நிலப்பட்டா வழங்குவதற்கு. அப்படி ஆகிவிடுவதால் அந்த கூலி விவசாயியால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு நில வரி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு நிலத்தை விட்டுவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதனால் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உபரி யாக இருந்து அரசால் வாங்கப்பட்ட நிலம் கடைசியில் அந்த நிலச்சுவான்தார் களுக்கே போய்ச் சேருகின்ற நிலை ஏற்படுகின்றது. அரசு இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமங்களிலே சில அதிகாரிகள் இருக்கிறார்கள், அதாவது மணியக் காரர் என்றும் கணக்குப்பிள்ளை என்றும் இருக்கிறார்கள். அவர்களிடம் யார் மோதினாலும் ஒன்றும் செய்ய முடிவது இல்லை. அமைச்சர்களால் கூட ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. காரணம் என்னவென்றால் அவர்கள் ஒரு புள்ளி வைத்தால் வைத்ததுதான், அவர்கள் எதைக் கொடுக் கிறார்களோ அதுதான் சட்டமாக இருக்கின்றது. ஆகவே கிராமங்களிலே இருக்கின்ற நிலங்களைக் கண்டுபிடிப்பதற்கு கிராமங்களிலே இருக்கின்ற பொது மக்களைக் கொண்டே ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். அப்படிக் கமிட்டி அமைத்து அந்த மக்கள் அதைக் கண்டுபிடிக்க வேண்டும். ஆகவே அங்கிருக் கின்ற மணியக்காரர்கள் தவறு செய்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக் கைகளை உடனடியாக எடுப்பதற்கு சட்டத்தில் வகை செய்வதற்குரிய அள விலே ஏற்பாடு செய்வது மிக முக்கியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் செய்கின்ற பித்தலாட்டத்தின் காரணமாகத்தான் பல பினாமி நிலங் களைக் கைப்பற்ற முடியாமல் போய் விடுகிறது. அது மட்டுமல்லாமல் அவர் களுக்காக வக்காலத்து வாங்க சிலர் இருக்கிறார்கள். அப்படி இருப்பதன் காரணமாகத்தான் நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்ன தாகவே அந்தச் செய்தி நிலச்சுவான்தார்களுக்கு எட்டிவிடுகிறது. அதனால் தான் அண்ணன் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதுபோல யானை, பூனைகள் மீதெல்லாம் சொத்தினை எழுதி வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படு கிறது. ஆகவே திடீரென்று சோதனை நடத்தி பினாமி நிலங்களைக் கண்டு பிடிப்பதற்கு தக்க முறையில் கிராம கமிட்டியினை அமைத்தாக வேண்டும். உள்ளூர்க்காரர்களை அந்தக் கமிட்டியில் போடவேண்டும். அதிலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவது என்பது பெரிதல்ல. அந்தந்த கிராமங்களில் இருப்பவர்களையே போடவேண்டும். அப்படி கிராமங்களிலே கமிட்டிகளை ஏற்படுத்தி பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற் கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த பட்டா வழங்குவதிலே பலபேருக்கு பட்டாக்கள் கிடைத்தாலும்கூட அதை வைத்துக்கொண்டு அவர்களால் நிலங்களை அனுபவிக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பலபேருக்கு கொடுக்கப்படுகிறது. அதிலும் நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பதவி ஏற்றதற்குப் பிறகு, கடந்த 2½ ஆண்டுகளிலும் சரி, இப்பொழுதும் சரி, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளிலே பட்டாக்கள் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றன. இதற்காக நான் அமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். அதைக் கட்சிச் சார்பிலே வரவேற்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த பட்டா வழங்குவதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்கிற அந்த நேரங்களில், அந்த கிராம அதிகாரிகள் யாருடைய நிலம் பட்டா வழங்கப்படுகிறதோ அவர்களுக்கு அந்த முதலாளிகளுக்கு தகவல் கொடுத்து விடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் பானைக்காரத் தோப்பு என்ற இடம் இருக்கிறது. அதில் ஏறத்தாழ 120 பட்டா மனைகள் கைப்பற்றப்பட வேண்டும் என்று 30 ஆண்டு காலமாக நாங்கள் போராடி வருகிறோம். அங்கேயிருக்கிற ஒரே முதலாளி அந்த நிலங்களை உபயோகப்படுத்திக் கொண்டு வருமானத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அந்த மக்கள் இருக்க இடம் இல்லாமல், சாலை ஓரங்களில் குடிசைகளை கட்டிக் கொண்டு வேகமாக வருகிற லாரி மோதி எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிற அபாயகரமான நிலைமையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இதுமாதிரி இடங்களில் நிலங்களை ஆர்ஜிதம் செய்தாலும்கூட, அங்கு இருக்கும் நிலச்சுவான்தார்கள் செய்ய விடுவதில்லை.

இரவோடிரவாக அதைச்சுற்றி சுவர் வைத்து விடுகிறார்கள். பண வசதி உடையவர்கள். அதனால் ஆட்களை வைத்து பணத்தை செலவு செய்து சுவர் வைத்து விடுகிறார்கள். கட்டடம் கட்டி விடுகிறார்கள். இல்லையென்றால் குடிசைப் போட்டு விடுகிறார்கள். இல்லையென்றால் தென்னம்பிள்ளை நட்டு விடுகிறார்கள். இந்த நிலையில் ஆர்ஜிதம் செய்கிற அதிகாரிகள் அங்கே போய் பார்க்கிறபோது, வீடு கட்டப்பட்டிருக்கிறது, எப்படி காலி நிலம் என்று சொல்லி ஆர்ஜிதம் செய்வது என்று கேட்கிறார்கள்.

அப்படி இல்லையென்றால், அந்த நிலச் சுவான்தார்கள் தாங்கள் கட்டிய கட்டிடங்கள், குடிசைகள், வைத்த தென்னங்கன்றுகள் ஆகியவைகளுக்கு நஷ்ட ஈடு கோரி, சாக்கு போக்கு காட்டி, நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமல் இருப்பதற்

கான வழிவகைகள் செய்கிறார்கள். இதனால் அரசாங்கம் ஆர்ஜிதம் செய்கிற நேரத்திலே, அந்த நிலங்களில் கட்டிடமோ, குடிசைகளோ, தென்னங்கன்று களோ எது இருந்தாலும் அவைகளுக்கு எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்கப்பட முடியாது என்ற வகையில் வழிவகை செய்து சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தடுக்கப்படும். உண்மையான ஏழை எளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த நிலங்கள் கிடைக்கும். அதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கைப் பொறுத்தவரையில், எனக்கு முன்னால் பேசிய அம்மையார் அவர்கள்கூட நிறையச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் உண்மைதான். காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் கூட கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையோ, அல்லது அந்தக் கள்ளச் சாரா யத்தையோ ஒழிப்பதற்கு முடியாது. ஏனென்றால் சில இடங்களில் அப்படிப் பட்ட கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு காவல் துறையினரே துணை போய்க் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் ஊருக்குப் பக்கத்திலே உள்ள காவல் துறையைச் சேர்ந்தவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை எல்லாம் அழைத்து ஒரு சிறிய மாநாடு அமைத்து, இந்த ஏரியாவில் இருக்கும் உனக்கு இவ்வளவு, உனக்கு இவ்வளவு என்று சொல்லிச் சொல்லி கோட்டா போட்டுக் கொடுக்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்ச கோட்டாக்கள் பிரித்துக் கொடுக்கிறார்கள் காவல் துறையினர். ஆகையினால் இந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன் னால், தயவுசெய்து உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் மதுவிலக்கையே ரத்து செய்யுங்கள் என்று. இதனால் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் கீழ் நிலையில் இருக்கும் மக்கள் பயன் அடைவார்கள்.

எப்படி என்று சொன்னால், முதலாளிகள் கள்ளச் சாரயம் காய்ச்சுவதை தொழிலாக எடுத்துக் கொண்டாலும் கூட, அவர்களிடம் கூலி வாங்கிக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் இந்த ஏழை எளிய மக்கள் தாம் பிடிபட்டாலும் இவர்கள் தான் பிடிபடுகிறார்கள். இவர்கள் மேல்தான் வழக்குகள் போடப்படுகின்றன. இவர்களின் குடும்பங்கள் தான் திண்டாடி தெருவில் நிற்கின்றன. அதனால் கள்ளச் சாராயம் காய்ச்சுகிற கூலித் தொழில் செய்பவர்களை பிடிக்காமல், காச்சுகிற முதலாளிகளை பிடித்து அவர் களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கும்படி சட்டத்தில் வழி வகை செய்ய வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு கொலை தண்டனை செய்தவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனை கூட கொடுத்து, கடுமையான முறையில் தண்டித் தால் தான், இந்த கள்ளச்சாராயம் ஒழியும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அடுத்து மீனவர்கள் பிரச்னை என்று எடுத்துக் கொண்டால், எரால், தவளை, நண்டு போன்றவைகளை ஏற்றுமதி செய்கிற சிறு தொழில் மீனவர்களுக்கு 5 சதவீதம் வரி இருக்கிறது. அதை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு அதிகமான வருமானம் இல்லை. இவர்கள் சிறு சிறு மீனவர்கள். படகிலே சென்று மீன் பிடித்து வந்து ஏற்றுமதி செய்பவர்கள், அவர்கள் தாம் இந்த எரால், தவளை, நண்டு போன்றவைகளையும் ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த வரி விலக்கு அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த வருவாய் துறை மானியக் கோரிக்கையின் திட்டங்கள் சிறப்பான திட்டங்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்களின் திறமையையும் அவர்கள் இந்த துறையை சிறப்பாக நடத்திக் கொண்டு வருவதையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்தைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-50)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, வணிகவரி குறித்த மானியக் கோரிக்கை மீது பேச அனுமதித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது புரட்சித் தலைவரின் அரசு இன்று போர்ட் ஆப் ரெவன்யூவை நீக்குவதற்கான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேல்ஸ் டாக்சைப் பொறுத்தவரையில் சிலவற்றிற்கு சிங்கில் பாயின்ட் என்றும் சிலவற்றிற்கு மல்டி பாயின்ட் என்றும் இருக்கிறது. இந்த மல்டி பாயின்ட் டாக்ஸ் கட்டும் சிறு வியாபாரிகள் பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே அந்த இன்னல்களைக் களையவேண்டுமென்றால் அவற்றையெல்லாம் சிங்கில் பாயின்ட்டாக மாற்றினால் அரசுக்கும் நல்ல வருமானம் வரும், அதே சமயத்தில் சிறிய வியாபாரிகளுக்கு தொல்லைகளிலிருந்து விடுபடும் நிலையும் ஏற்படும்.

அடுத்து, இன்றைக்கு 19,104 பேர்களுக்கு குடியிருப்புப் பட்டாக்கள் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த குடியிருப்பு மனைப் பட்டாக்கள் வழங்குவதில் ஒருசில இடங்களில் சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், ஹரிஜன மக்களுக்கு வீடுகட்டிக்கொள்ள வீட்டு

மனைப் பட்டா வழங்கவேண்டுமென்றால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். அதன்காரணமாக பல ஆண்டுகளாக வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்படமுடியாமல் ஏழை மக்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே நல்லதொரு திட்டத்தை வகுத்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க எந்த நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்ய நினைக்கிறதோ அதற்கு எந்தவிதமான தடையும் இல்லாமல் கைப்பற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

நிலப்பட்டாக்கள் வழங்குவதில் இன்றைக்கு சாதனைகள் பல அரசு செய்திருந்தாலும் பல சிக்கல்கள் உள்ளன. ஒரு சிலயிடங்களில் மேல் கால் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் இவைகளை எடுத்து பட்டா செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த மேல் கால் புறம் போக்கு, கால்வாய்ப் புறம்போக்கு, ஓடைப்புறம்போக்கு இவை எதற்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டதோ அதற்குப் பயன்படாமல் இன்று இருக்கின்றன. அங்கே ஏழை எளிய ஹரிஜன மக்கள் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஒரு சில வசதிபடைத்தவர்கள் தங்கள் செல்வாக்கை வைத்துக் கொண்டு, செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த இடங்களை தங்கள் பெயர்களில் பட்டா மாற்றிவிடுகிறார்கள். ஆகவே அந்த நிலை மாறவேண்டும். அது குறித்து இந்த அரசு சிந்தித்து ஒரு சட்டம் இயற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது அனுபவத்தில் ஒன்றைச் சொல்கிறேன். என் தொகுதியில் ஒரு கிராமத்தில் ஒரு ஏழை அரிஜன விவசாயி நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்துவருகிறான். அந்த நிலத்தை தனக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு பலமுறை விண்ணப்பம் செய்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அதை அனுமதித்த பிறகும் இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. ஆனால் வசதி படைத்த ஒருவர் அதை உடனடியாக பட்டா செய்துகொள்ளமுடியும். பஞ்சாயத்து தீர்மானம் போட்டு பட்டாவை அந்த விவசாயிக்கு கொடுத்துவிடாமல் தடுத்து விடுகிற நிலை இருக்கிறது. அவர் ஒரு எக்ஸ் சர்வீஸமென். முப்பது ஆண்டுகளாக அவர் டெம்பரரி பட்டாவை வைத்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு நிரந்தர பட்டா கொடுக்கப்படவில்லை.

சிறுநல்லூர் என்ற கிராமத்தில் புறம்போக்கு நிலம் 272 ஏக்கர் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் உள்ள ஹரிஜனங்களுக்கு நூறு ஏக்கர்தான் அவர்களுக்கு உழுவதற்குத் தேவை. அவர்கள் நிலம் இல்லாமலிருக்கிறார்கள். அவர்கள்

பயிர்கள் வைக்க முயற்சி செய்தபோது அவர்களை கூலி விவசாயிகள் என்று சொல்லி பெரிய மிட்டா மிராசுகள் எல்லாம் அவர்களுக்கு அந்த நிலம் கொடுக்கப்பட்டால் தங்களுக்கு கூலி வேலை செய்ய ஆட்கள் கிடைக்காமல் போய் விடுமே என்று எவ்வளவுதூரம் அந்நிலத்தைக் கொடுக்காமல் தடுக்கமுடியுமோ அவ்வளவுதூரம் தடுக்க நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டபிறகு கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்க முயற்சித்தபோது அந்த பஞ்சாயத்து தலைவரும் மற்றவர்களும் அந்த நிலங்களை முழுவதும் காட்டு இலாகாவிற்குக் கொடுக்கவேண்டும் என்றுசொல்லி காட்டு இலாகாவிற்கு கொடுத்து விட்டார்கள். ஆகவே அந்த ஏழை விவசாயிகளுக்கு, கூலி வேலை செய்கிற அந்த நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு எந்தவிதமான நிலமும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்துவருகிறது. இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய தாலுகாவிலே பல இடங்களில் பினாமி பட்டாக்களை நிலமற்ற என்.ஜீ.ஓ-க்கள் எல்லாம் தங்கள் பெயரிலே மாற்றி யிருக்கிறார்கள். அதை ரத்து செய்யவேண்டும். பல ஆண்டுகளாக அந்தக் கிராமங்களிலே உள்ள விவசாயிகள் எல்லாம் கூறிக்கொண்டு வந்தும், இன்னும் அவைகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. எங்கெங்கே இவ்வாறு என்.ஜீ.ஓ.-க்கள் பட்டா போட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவைகளை யெல்லாம் ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகை வார பயிர்ச் சட்டம் 1969-லே இயற்றப்பட்டாலும், அதை அமுல் படுத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, குத்தகை வார பயிர்ச் சட்டத்தின்கீழ் ஒரு நிலத்தை பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், அடங்கலைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் பெயரிலே அந்த நிலம் இருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த கிராமத்தைச் சேர்ந்த அடங்கலிலே அவர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், பதிவு செய்வதற்கு செல்கின்ற அதிகாரிகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் போய்விடுகிறது. உதாரணமாக, எங்கள் தாலுக்காவில் 1973 ஆம் ஆண்டு கூவத்தூர் என்ற கிராமத்திலே அரிசன விவசாயிகளை அங்குள்ள மிராசுதார்கள் மிரட்டி நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே, அந்த விவசாயிகள் அங்குள்ள தாசில்தார் அவர்களிடத்திலும், சப் கலெக்டர் அவர்களிடத்திலும் முறையிட்டார்கள். அப்போது சப்கலைக்டர் அவர்களும் அந்த இடத்

1980 ஜூலை 11] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

திற்கு நேரிலே வந்து பார்வையிட்டார்கள். அப்போது கணக்குப் பிள்ளை யையும், கிராம முன்சிப்பையும் வரவழைத்து, உங்கள் அடங்கலிலே என்ன பதிவு செய்திருக்கிறீர்கள் என்று பார்வையிட்ட நேரத்தில், அந்த நிலங்கள் மிராசுதாரர்கள் பெயரிலே பதிவு செய்யப்பட்டிருந்ததைப் பார்வை யிட்டார் கள். பின்னர் நேரடியாக விசாரணை செய்கின்ற காலத்தில், இது தவறு என்பதை அந்த கணக்குப் பிள்ளையும், கிராமமுன்சிப்பும் ஒப்புக்கொண் டனர். இது தவறுதான், அரிசன மக்கள்தான் நிலத்திலே பயிர் செய்கிறார் கள், அவர்கள் பெயரிலே பதிவு செய்யாமல், மிராசுதாரர்கள் பெயரிலே பதிவு செய்தது தவறுதான் என்பதை ஒப்புக் கொண்டு, அதற்கான ஸ்டேட்மெண்டை வாங்கிக் கொண்டு சப் கலைக்டர் அவர்கள் சென்றார்கள். அந்த கிராம முன் சிப் மீதும், கணக்குப் பிள்ளை மீதும் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, பலருடைய தலையீட்டின் காரணமாக அந்த சப் கலைக்டர் மாற்றப்பட் டாரே தவிர, அந்த கிராம முன்சிப்பும், கணக்குப் பிள்ளையும் இன்றைக்கும் அந்தப் பதவியிலேயே இருந்து வருகிறார்கள்.

அது மட்டுமல்ல. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபிறகு, அணைக்கட்டு கிராமத்திலே அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் குத்தகை வார பயிர்ச் சட்டத்தின்கீழ் தங்கள் நிலங்களை பதிவு செய்து கொள்ள, பட்டா செய்துகொள்ள கேட்டார்கள். அவர்களுக்கு பட்டா போட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் பல இன்னர்களுக்கும், இடை யூறுகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். இதை அந்த மிட்டா மிராசுகள் செய்து வருகிறார்கள். ஆனாலும் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அவர்கள் பெயரிலே குத்தகை வார பயிர்ச் சட்டத்தின்கீழ் நிலங்கள் பதிவு செய்யப் பட்டது. அப்படி பதிவு செய்த பிறகும், அந்த நிலங்களில் அவர்கள் போக, அனுபவிக்க இந்த மிட்டா மிராசுகள் அனுமதிக்கவில்லை. அரசு பல நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும், அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய காவல் துறை அவர்களுக்கு சரியான ஒத்துழைப்பு கொடுக் காத காரணத்தினால், அந்த விவசாயிகள் இன்றைக்கும்கூட அந்த நிலங்களிலே விவசாயம் செய்ய முடியாத அபாயகரமான நிலைமை இருந்து வருகிறது. யாராவது எதிர்த்து அந்த நிலத்திலே பயிர் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்தால், அவர்கள் அந்த ஊரைவிட்டே வெளியேற்ற வேண்டிய அபாயகர மான நிலைமையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த கிராமத்தைச் சேர்ந்த பலர் இன்றைக்கு வேறு கிராமங்களிலே குடியேறி விவசாயக் கூலிகளாக இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கு தக்க பரிகாரத்தைக் காண வேண்டும், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியை இந்த அரசு செய்துகொண்டு வருகிறது. பினாமி நிலங்கள் எங்கே இருக்கின்றன என்பது இந்த அரசுக்குத் தெரிய வேண்டுமென்றால், அதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் அறிவிப்பு செய்ய வேண்டும். இந்த இந்த நெம்பர்கள் எல்லாம் பட்டா நிலங்கள், இந்த இந்த சர்வே நெம்பர்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்ட பட்டா நிலங்கள் என்று அறிவிப்பு செய்தால்தான், இந்த பினாமி நிலங்களைக் கண்டு பிடிக்க முடியும். யார் யாருடைய பெயர்களிலே அந்த நிலங்கள் பட்டா செய்யப்பட்டிருக்கின்றன என்பது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி களுக்கு தெரியாத வரையில் எந்த நிலங்கள் பினாமி நிலங்கள் என்பதை யாரும் சொல்ல முடியாது. அதைத் தெரிந்துகொள்ள, இப்படிப்பட்ட அறிவிப்பு களைச் செய்ய வேண்டும், கிராமங்களிலே வெளியிட வேண்டும், அதற்கான வழிவகைகள் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். அப்போது தான் இந்த பினாமி நிலங்களை ஒழிக்க முடியும்.

மேலும், மினிமம் வேஜஸ் சட்டத்தை 1976 ஆம் ஆண்டு போட்டாலும், அதைச் சரியான முறையிலே அமுலாக்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. யாராவது சரியான முறையிலே, சட்டத்திற்கு உட்பட்டு எங்களுக்கு கூலி கொடுக்க வேண்டும் என்று போராடினால், அந்த மக்களுக்கு ஏற்படுகின்ற நிலைமையைப்பற்றி, இன்னல்களைப்பற்றி நான் அனுபவத்தில் பார்த்திருக் கிறேன். சரியான கூலியை யாராவது கொடுக்கவேண்டும் என்று கேட்டாலோ அல்லது அதற்கு சற்று குறைந்த அளவு கூலி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டாலோ, அவர்கள் வீடுகள் எல்லாம் பறிக்கப்படுகின்றன.

[நண்பகல் 12.00]

இந்த வீடுகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்வதற்கு வேண்டிய பாதை வசதிகள், மற்ற வசதிகள் எல்லாம் தேவையென்றால் அந்தப் பகுதிகள் மிராசுதாரர்கள் பெயரில் இருக்கின்றன. விவசாயக் கூலிகள் அந்த இடத்திலிருந்து வெளியே வரக்கூட அனுமதி கிடையாது. அந்த வீடுகளை எல்லாம் ஒரே இரவில் பிரிப்பதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் அவர்களுக்கு இருக்கின்றன. அந்த நிலைமையை எல்லாம் மாற்ற காவல் துறையினருக்கு அதிகாரம் கொடுத்து சட்டமியற்றி தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும், கூலி விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஜூலை 11] (திரு. எஸ். டி. உகம்சந்த்)

தீ விபத்தால் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பல நன்மைகளைச் செய்து வருகிறது. தீ விபத்தால் பாதிக்கப்படும் குடிசைகளுக்கு 200 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்திருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடியது. தீ விபத்து எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ந்து அதைத் தடுக்க ஆங்காங்கு தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும். மதுராந்தகம் தாலுகா கன்னியாகுமரி மாவட்டத்தின் அளவுக்கு நிலப் பரப்பில் பெரிய தாலுக்கா. இதுவரை அங்கு எந்தவிதமான தீயணைப்பு நிலையமும் இல்லை. தீ விபத்து ஏற்பட்டு விட்டால் செங்கற்பட்டிலிருந்து தீயணைப்பு வண்டிகள் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஃபயர் எஞ்சின் வந்து சேருவதற்கு முன்னாலேயே கிராமமே நாசமாகிவிடுகிறது. அந்தப் போக்க உடனடியாக அங்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் ஏற்படுகிற இன்னல்களுக்குக் காரணமாக இருப்பவர்கள் முன்சிப், கர்ணங்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் பாரம்பரை பரம்பரையாக அந்தப் பகுதியில் இருப்பதால், அவர்கள் வாரிசுகளே அந்தப் பதவிக்கு வந்து கொண்டிருப்பதால் இந்த நிலைமைகள் இருக்கின்றன. அவர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்ற நிலைமையில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

என்னை பேச அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த் துறையின் மானியத்தின்மீது பேச அனுமதி தந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருவாய்த் துறை மானியங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் இன்று காலை வரை எனக்குத் தரப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அலுவலகத்திலிருந்து இதைப் பெற்று பேசுகிற நிலைமை இருக்கிறது. இனி இவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு தலைவர் அவர்களும் செயலாளர் அவர்களும் நடவடிக்கை எடுத்து நல்ல முறையில் உடனடியாகச் சேருவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : இது முன்னரே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அவரவர்கள் அறைக்கு அனுப்பப்பட்டன. என்னுடைய அறையிலும் நேற்று கொடுக்கப்பட்டது.

திரு. பாபு ஜனார்த்தனன் : எனக்கு வரவில்லை. நான் இதைக் குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை.

திரு. கி. சட்டநாத கரையாளர் : எனக்கு இந்தப் புத்தகங்கள் நேற்று இரவு 11 மணிக்குத்தான் கிடைத்தது என்பதை அவைத் தலைவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(7) ஒழுங்குப் பிரச்னை.

விவாதத்திற்கு அமைச்சர் பதிலளிக்கும் முன் உரையாற்றவேண்டிய கட்சி.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இப்போது மதிப்பிற்குரிய பாபு ஜனார்த்தனன் அவர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முடித்ததற்குப் பின்னால் அமைச்சர் பேசுகின்றாரா என்று அறிய விரும்புகிறேன். எங்கள் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற காரணத்தால் எல்லோரும் பேசியதற்குப் பிறகு வைன்ட் அப் பண்ணிப் பேசி எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுவார்கள், அதற்குப் பிறகு ஆளுங்கட்சியின் சார்பாக அமைச்சர் பதில் சொல்வார் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : சில மானியக் கோரிக்கைகளிலே இறுதியிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவார்கள். சில மானியக் கோரிக்கைகளிலே, தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுவார்கள். அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளில் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுதான்.

திரு. துரை முருகன் : தாங்கள் புதிய மரபை ஏற்படுத்தக் கூடாது. அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சிதான் வைன்ட் அப் பண்ணிப் பேசும், அதற்குப் பிறகு அமைச்சர் பேசுவார், அதுதான் ஏற்கெனவே இருக்கிற மரபு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது துணைத் தலைவரோ பேசினால்தான் அவர்கள் பேசியதற்குப் பிறகு அமைச்சர் பேசுவார் என்ற மரபைத்தான் வைத்திருக்கிறார்கள்.

* திரு. துரை முருகன் : மன்னிக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் யாராவது ஒருவர் கடைசியிலே வைன்ட் அப் பண்ணிப் பேசுவார், அது யார் என்பது நாங்கள் கூடி முடிவு எடுக்கிற விவகாரம்.

1970 ஜூலை 11]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : மரபு என்ன என்றால் எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது துணைத் தலைவரோ வைன்ட் அப் பண்ணி பேசிய பிறகு அமைச்சர் பேசுவார்.

திரு. துரை முருகன் : எங்களுடைய கட்சிக்கு இருக்கிற உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது. திரு. பாபு ஜனார்த்தனன் பேசுயதற்குப் பின்னாலே அமைச்சர் பேசுவாரா என்பதுதான் நாங்கள் எழுப்பியிருக்கிற வினாவாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : உங்கள் கட்சியின் சார்பாக திரு. பாபு ஜனார்த்தனன் பேசுவார் என்ற அறிவிப்பு சற்று முன்னால் தான் கொடுக்கப்பட்டது. இங்கே இருக்கிற மரபு எப்படி என்றால் எதிர்க் கட்சித் தலைவரோ அல்லது எதிர்க் கட்சித் துணைத் தலைவரோ பேசிய பிறகு தான் அமைச்சர் பேசுவார் என்பதுதான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : 1962 ஆம் ஆண்டிலிருந்து நான் இந்த மன்றத் திலே இருந்திருக்கிறேன். அப்போது எதிர்க் கட்சியாக இருந்தோம். எதிர்க் கட்சியின் சார்பாகப் பேசிய பிறகு அமைச்சர் பதில் சொல்வது என்பதுதான் வழக்கம். அப்போதும் சிறு கட்சிகள் எல்லாம் இருந்தன. எதிர்க்கட்சி என்று அங்கீகாரம் கொடுத்ததற்குப் பிறகு இறுதியாகப் பேசுவது, அதாவது வைன்ட் அப் பண்ணிப் பேசுவது சாதாரணமாக பிரதான எதிர்க் கட்சிதான். அதற்குப் பிறகு அமைச்சர்தான் பதில் சொல்வார். இதுவரையில் இருந்த மரபு அதுதான். அதை ஏன் தாங்கள் மாற்ற வேண்டுமென்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : விவாதத்தை ஆரம்பித்து வைக்கிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தால் மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் முடிப்பார்கள். மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆரம்பித்து வைத்தால் தாங்கள் முடிப்பது என்பதுதான் நிலைமை. இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகிற மரபு, எதிர்க் கட்சித் தலைவரோ எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ முடித்துவைத்துப் பேசிய பிறகு அமைச்சர் பேசுவார் என்பதுதான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் தாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள் கிறேன். ஆனால் ஆரம்பித்து வைத்துப் பேசுவது யார் வேண்டுமானாலும் ஆரம்பித்து வைத்துப் பேசலாம். ஆனால் வைன்டிங் அப் ஸ்பீச், எல்லோரும் பேசியதற்குப் பிறகு அவைகளையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு அரசாங் கத்தைச் சாடுவது என்பது எதிர்க்கட்சிதான், அந்த முறையிலே பேசியபிறகு

அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும். ஆனால் அந்த உரிமையை ஆளுங் கட்சிக்கு உடந்தையாக இருக்கின்ற தோழமைக் கட்சிகளுக்குக் கொடுத்து விட்டால் அவர்களுக்குச் சாதகமாகத்தான் பேசுவார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : இருக்கிற மரபு எதிர்க் கட்சித் தலைவரோ அல்லது துணைத் தலைவரோ அவ்வாறு பேசிய பிறகு அமைச்சர் பேசுவதுதான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இப்போது கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன. இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இருக்கின்றன. அவர்கள் ஆளுங்கட்சிக்கு ஒத்துப்போகக்கூடிய தோழமைக் கட்சிகள்தான், அவர்களை உள்ளபடியான எதிர்க்கட்சிகள் என்று எடுத்துக்கொள்ள முடியுமா ? வேண்டுமென்றால் நாளைக்கு, நாளை மறுதினம் வரக்கூடிய நிலைமை இருக் கிறது, அவைகளிலே மற்ற எதிர்க்கட்சிகள் இன்ஷியேட் பண்ணட்டும், ஆனால் முடித்துவைத்துப் பேசுகின்ற உரிமை பிரதான எதிர்க்கட்சிக்குத்தான் உண்டு, அதுதான் இதுவரையிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகிற முறை. ஆரம்பிப் பதைப் பொறுத்தவரையிலே யார் வேண்டுமானாலும், திரு. உமாநாத் அல்லது அழகர்சாமி அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். ஆனால் முடித்துவைப்பது பிரதான எதிர்க்கட்சியாகத்தான் இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே உள்ள நிலைமை, ஒரு விவாதத்தின் முடிவிலே பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இறுதியாக ஒன்று சேர்ந்துப் பேசுகின்ற அந்தப் பணியை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதை இங்கே அவர்கள் இப்போது வலியுறுத்துவதில் நியாயம் இருக்கிறது. இங்கே அதையே தாங் களும் பின்பற்றலாம். காங்கிரஸ் கட்சியும் அதை வலியுறுத்தவில்லை. எனவே அந்த நிலையில் தங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இருக்கிற நடை முறையைப் பின்பற்றுவது நல்லது என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : ஏன் நடந்தது என்பதை நான் சொல்லியாக வேண்டும். வைன்ட் அப் செய்வதாக முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பெயர் கொடுக்கப்படவில்லை. சற்று முன்தான் கொடுக்கப்பட்டது. எனவே, ஏற்கெனவே அவைத் தலைவரவர்கள்

1980 ஜூலை 11]

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. முத்தையா]

காங்கிரஸ் கட்சி சார்பில் வைன்ட் அப் செய்வதற்கு எழுதி வைத்திருக்கிறார்கள். சற்று முன்னர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து கொடுத்திருப்பதால், இடையிலே சேர்த்திருக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. கடைசியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் வைன்ட் அப் செய்வதாகப் போடப்பட்டிருக்கிறது. இதில் தவறு இல்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பில் வற்புறுத்த இல்லை என்றால் கடைசியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவரவர்களே, தவறான தகவலைச் சொல்கிறீர்கள். துணைக் கொறடா அவர்கள் எங்கள் கட்சியின் சார்பில் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே, பெயரை அறிவிக்காத காரணத்தால் சேர்க்கவில்லை என்று சொன்னீர்கள். அது உண்மைக்குப் புறம்பான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : சற்று முன் கொடுக்கப்பட்டது என்றுதான் சொன்னேனே தவிர, கொடுக்கவே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே கொடுத்துள்ள பெயர்களில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வைன்ட் அப் செய்வதற்கு குறிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி வற்புறுத்தவில்லை என்றால் கடைசியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசலாம்.

திரு. என். சங்கரய்யா : தற்காலிகத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது ஆளுங்கட்சிக்கு உடந்தையாக இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகள் என்று சொன்னார்கள் . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இல்லை, தோழமைக் கட்சி என்று சொன்னேன். சில விஷயங்களில் உடந்தையாகத்தான் இருக்கிறீர்கள். இல்லை என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உடந்தை என்பதற்கும், உதவி என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் உதவி என்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதை நீங்களும்தான் செய்கிறீர்கள்.

[1980 ஜூலை 11

திரு. என். சங்கரய்யா : தேர்தலில் தோழமைக் கட்சியாக அணிவகுத்து நின்றோம். நாங்கள் அரசாங்கத்திலே இல்லை. ஆகவே, பாராளுமன்ற நடைமுறைப்படி நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கிறோம். திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் உடந்தை என்று சொல்லி, அது ஏதோ 'கொல்யூஷன்' என்பது மாதிரி, அது தவறான அர்த்தத்தைக் கொடுக்கும். இரண்டாவதாக அவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் நாங்கள் யாரோ பேசப்போகிறோம் என்று. அவர்களோடு உடந்தையாக இருந்த காங்கிரஸ் கட்சிதான் பேசப்போகிறது. அந்த உடந்தை நின்றுபோய் விட்டதா? உடைந்து போய்விட்டதா? அவர்கள் பேசுவதையே ஆட்சேபிக்கிறர்களே, அதில் உடைப்பு ஏற்பட்டு விட்டதா? இல்லையென்றால் ஏன் அதை ஆட்சேபிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, நான் கன்வே செய்யும் பொழுது அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. ஆளுங்கட்சிக்கு உறுதுணை யாக இருக்கும் கட்சி என்று சொன்னேன். உடந்தை என்றால், அவர்கள் சொல்வதை எல்லாம் புரட்சித் தலைவர் ஏற்றுக்கொள்கிறாரா? ஏற்றுக்கொள்ள மாட்டார். சில முறைகளில் ஒத்துப் போகிறார்கள் என்ற பொருளில் சொன் னேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், கம்யூனிஸ்ட் கட்சி யையும் ஒன்றாகவே நினைக்கிறோம் என்றால் அது சரியல்ல.

திரு. என். சங்கரய்யா : புரட்சித் தலைவர், அவர்கள் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று சொல்கிறார். அதுபோலவே அரசாங்கம் சொல்வதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அப்படியென்றால் அரசாங்கம் எது செய்தாலும் அதை நீங்கள் எதிர்க்க வேண்டுமென்ற முடிவில் இருக்கிறீர்களா? அப்படியொரு கொள்கை ஒரு கட்சிக்கு இருக்க முடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

(6) வரவு செலவுத் திட்டம் 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கை யில், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் நிவாரணத் தொகையாக ரூபாய் நூறிலிருந்து ரூபாய் இருநூறாக உயர்த்தியதற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அது மட்டுமல்லாமல், ரொக்க மானியம் தவிர ஒவ்வொரு ஏழைக்கும் ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*24. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17-இன் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

*25. கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழிற் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

** 26. கோரிக்கை எண்கள் 1, 41, 46 மற்றும் 48—வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@ 27. கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

@ 28 கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

** 29. 1980-81 ஆம் ஆண்டின் வருவாய்த் துறைக்கான சாதனை அறிக்கை.

கோரிக்கை எண்கள் 1, 2, 4, 5, 41, 46-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 10—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

* 10—7—1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

** 10—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

@ 8-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

[361ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

கொள்கை விளக்கக் குறிப்பு

1. முன்னுரை.

மாநிலத்தின் வருவாய் நிர்வாகத்திலே நிலவரி விதிப்பு நிலவரி வசூல், வேளாண் வருமான வரி, நகர்புற நிலவரி, ஏனைய பல்வேறு வரிகள், அரசுக்குச் சேர வேண்டிய கடன்கள் ஆகியவை அடங்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், வருவாய் கோட்ட அளவில் கோட்டாட்சி அலுவலரும் வட்ட அளவில் தாசில்தாரும், பிர்க்கா அளவில் வருவாய்த்துறை ஆய்வாளரும், இப்பணிக்குப் பொறுப்பேற்கின்றனர். கிராமத் தலைவன், கிராமக் கர்ணம், கிராமப் பணியாளர்கள் ஆகியோரை அடிப் படைக் கிராமப் பணியாளர்களாகக் கொண்டு, கிராமங்களில் இப்பணி முதன் முதலாகத் தொடங்கப்பட்டுள்ளது. எல்லா நிலைகளிலும் வருவாய் நிர்வாக அதிகாரிகள் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்கின்றனர். தொன்று தொட்டு வருகின்ற இம்முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. சாதாரண காலங்களில் மட்டுமன்றி, புயல், வெள்ளம், தீ, பேரிடர் முதலிய இயற்கைச் சீற்றங்களின் போதும் இம்முறை செவ்வனே நடைபெற்றது. கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, பயிரிடுவார்க்கு நில ஒப்படை செய்தல், வீட்டு மனைகள் வழங்குதல், பட்டா மாற்றம் செய்தல் பல்வேறு காரியங்களுக்காகச் சான்றிதழ்கள் வழங்குதல் முதலிய முக்கிய பணிகளை வருவாய்த் துறை கவனிக்கிறது. சென்ற நிதியாண்டில் பல்வேறு பிரிவுகளில் அடைந்த சாதனைகளும் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ள விருக்கும் செயல் திட்டங்கள் குறித்த விவரமும் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

2. இயற்கைச் சீற்றங்கள்.

மானியக் கோரிக்கை 41-ன் ‘‘ இயற்கைச் சீற்றங்கள் குறித்த நிவாரணம் ’’ என்பதன்கீழ் அது வருவாய்த் துறைக்கு எந்த அளவிற்குப் பொருந்துமோ, அந்த அளவிற்கு, தீ, வெள்ளம், புயல் முதலியன போன்ற இயற்கைச் சீற்றங்கள் குறித்து அத் துறையால் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தீ விபத்து.—தீ விபத்து என்பது தற்செயலாகவும ஏற்படலாம்; மனிதர்களாலும் ஏற்படலாம். பொதுவாகக் குடிசைகளில் வசிக்கும் ஏழை மக்கள் தான் இதனால் பெரும் துன்பமடைகிறார்கள். அவர்கள் தாங்கள் வசிக்கும் குடிசை களையும் தங்கள் உடைமைகளையும் இழக்க நேரிடுகிறது. தீ

[1980 ஜூலை 11

விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கையில் தற்செயலாக ஏற்படும் தீ விபத்துக்களுக்கும், தீயிடப்பட்டதன் விளைவாக ஏற்படும் தீ விபத்துக்களுக்கு மிடையே அரசு பாகுபாடு காட்டுவதில்லை. முற்றிலும் சேத மடைந்த குடிசையின் சொந்தக்காரருக்கு ரூ. 100 நிவாரணமும், ஒரு பகுதி சேதமடைந்த குடிசையின் சொந்தக்காரருக்கு ரூ. 50 நிவாரணமும் முன்னர் வழங்கப்பட்டது. சாதாரணமாகக் குடிசைகளில் வசிக்கும் குடித்தனக்காரருக்கு துணிமணிகள் இழப் பிற்காகக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 25 தொகை வழங்கப்படுகிறது. இது முடிந்தவரையில் துணிகளாகவே வழங்கப்படும். தீ விபத்துக் களினால், துன்பம் அடைபவர்களில் பெரும்பான்மையோர் அங்குக் குடியிருக்கும் குடித்தனக்காரர்களாவர். குடிசையை மீண்டும் கட்டுவதற்காக ரூ. 100 மானியம் பெறும் அக்குடிசைச் சொந்தக்காரர்கள், குடித்தனக்காரர்களின் பயனுக்காக, குடிசைகளை மீண்டும் கட்டிப் பொதுவாக அக்கறை கொள்வ தில்லை. குடிசைகளில் வசிக்கும் குடித்தனக்காரர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்குவதற்காக அரசு, தீ விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ரொக்க மானியம் வழங்கும் முறையை பின்வருமாறு மாற்றியமைப்பதற்கு முடிவு செய்துள்ளது :—

(1) குடிசைச் சொந்தக்காரர் தனிவொருவராகத் தனது அனுபோகத்தில் வைத்திருந்தால் மொத்த ரொக்க மானியம் ரூ. 100 அல்லது ரூ. 50 அவருக்கு வழங்கப்படும்.

(2) அக்குடிசை, சொந்தக்காரரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தனக்காரர்கள் அனுபோகத்தில் இருந்தால், ரொக்க மானியம் ரூ. 100 அல்லது ரூ. 50 அக் குடிசையை, அனுபோகத்தில் வைத்திருப்பவர்களுக்கு— அதாவது சொந்தக் காரர்களுக்கும், குடித்தனக்காரர்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(3) அக்குடிசை, ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தனக்காரர்கள் மட்டும் அனுபோகத்தில் வைத்து இருந்தால் ரொக்க மானியம் ரூ. 100 அல்லது ரூ. 50 அக்குடிசையை அனுபோகத்தில் வைத்துள்ள குடித்தனக்காரர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) தீ, வெள்ளம் புயல் முதலியனவற்றினால் சேதமடைந்த ஒரு குடிசைக்குத் தரப்படும் நிவாரணம் ரூ. 100 அல்லது ரூ. 50 ஆகும். இத்தொகை, மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனுபோக தாரர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படும். தீ விபத்தால் முழுதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கான நிவாரணத் தொகையை குடிசை ஒன்றுக்கு ரூ. 100லிருந்து ரூ. 200 ஆக 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் நாள் முதல் உயர்த்து மாறும் அரசு ஆணையிட்டுள்ளது.

1980 ஜூலை 11]

2. மேற்சொன்ன ரொக்க மானியத்தைத் தவிர, அரசு வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் உதவியைப் போலவே, தீ விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர் களுக்கும் உதவி அளிக்கிறது. இதற்கிணங்க, தீ விபத்துக் ளினால் பாதிக்கப்படும், ஒவ்வொரு குடும்பமும், 5 கிலோ கிராம் அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரத் திற்கும் மேலாக மின்சாரம் தடைபடக் கூடுவதற்கான சாத்திய மிருந்தால்) ஒரு வேட்டி அல்லது லுங்கி, ஒரு புடவை அடங்கிய துணிகள் ஆகியவற்றை இலவசமாகப் பெறுவதற்குத் தகுதி யுடையதாகும்.

3. தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கள், சேதமுற்ற குடிசைகளை மீண்டும் கட்டுவதற்காக நில மேம்பாட்டுக் கடன்கள் வேளாண்மைக் கடன்கள் சட்டம் ஆகியவற்றின்கீழ் ரூ. 2,000வரை கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். அரிசனங்களைப் பொறுத்தவரை இக்கடன் வட்டியில்லாக் கடனாகும்.

4. யாருடைய வருமானத்தைக் கொண்டு அக் குடும்பம் நடைபெற்று வந்ததோ, அவர் தீ விபத்து ஒன்றில் இறந்து விட்டாலும், அவரது குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தாலும், அவரது சட்டப்படிக்கான வாரிசுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000வரை நிதியுதவி அளிக்கப் படுகிறது. உதவி பெறுவதற்குரிய தகுதிகளின் அடிப்படையில் விதி விலக்கான நேர்வுகளில் சொந்த உடைமைகளை இழந்த தற்காக உதவி வழங்கவும் கருதிப் பார்க்கப்படுகிறது.

5. புயல் வெள்ளப்பெருக்கு.—வட-கிழக்கு பருவமழை பொது வாக அக்டோபர் திங்கள் மத்தியிலிருந்து தொடங்குகிறது. செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய கடற் கரைப் பகுதியிலுள்ள மாவட்டங்கள் குடிநீருக்கும், பயிர் செய் வதற்கும் வட கிழக்குப் பருவ மழையையே நம்பியுள்ளன. மேலே குறிப்பிட்ட கடற்கரைப் பகுதியிலுள்ள மாவட்டங்கள் தவிர, உட் பகுதியிலுள்ள பல மாவட்டங்களிலும் வட கிழக்குப் பருவ மழை காலத்தில் பரவலாகவும் பலமாகவும் மழை பெய் கிறது. இதன் விளைவாக, பெரிய சிறிய பாசன வாயில்களில் உடைப்பெடுத்து விடுகின்றன. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உடைப்பெடுத்து பயிரிடும் நிலங்களின் பெரும் பகுதி யையும், சாலைகள், கட்டிடங்கள் போன்ற ஏனைய பொது, தனியார் சொத்துக்களையும் நீரில் மூழ்கடிக் கிறது. கடற்கரைப் பகுதிகளும் பல்வேறு வேகத்தில் அடிக்கும் புயலால் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக சொத்துக்

களுக்குச் சேதமும், உயிரிழப்பும் ஏற்படுகின்றது. முன்னர் அடித்த புயலின் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்ட இழப்பு நபர் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ. 30 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது புயல் அடிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் இத்தகைய சீற்றத்தால் ஏற்படுகின்ற பெரும் இழப்பைக் காட்டுகின்றது. மக்களுக்கு புது வாழ்வளிப்பதற்கும், சமுதாய, சமூக வாழ்க்கையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும் பெருமளவில் பணமும், பொருள் தேவைப்படுகின்றன. ஏற்பட்டுள்ள சேதம் அளவிட எளிதாக இல்லாவிடினும், பெருமளவில் உள்ளது. அடைந்த பாதிப்பினின்றும் மீண்டும் சாதாரண நிலையை அடைவதற்குக் கூடப் பெருமளவில் இடுபொருட்கள் தேவைப்படும். இந்நிலையை விரைவில் அடைய வேண்டியுள்ளது. எனவே, புயல்/வெள்ளப்பெருக்கால் ஏற்படும் எதிர்பாராத விளைவுகளை எதிர்த்து மீள்வதற்குத் தயாராக இருக்க வேண்டிய தேவையை அரசு உணர்ந்துள்ளது. ஆகவே, ''இடர்காப்புத் திட்டம்'' ஒன்றைத் தமிழ்நாட்டிற்கு வகுத்துள்ளனர்.

6. இடர்காப்புத் திட்டமானது, எளிதில் பாதிப்படையக் கூடிய பகுதிகளைக் கண்டு பிடித்தல், தீங்கு ஏற்படும்போது பொதுமக்கள் என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன செய்யக்கூடாது என்பதைக் குறித்து செய்தித் தொடர்பு சாதனங்கள் அனைத்தின் வழியாகவும் அவர்களுக்கு அறிவுறுத்தல், இடர் ஏற்படும்பொழுது கைக்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், புது வாழ்வளித்தலுக்குரிய நடவடிக்கைகள் முதலியன உட்பட தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை விளக்கிக் கூறுகிறது. இத்தகைய பேரிடர்கள் ஏற்படும்போது பல்வேறு துறைகளிலுள்ள அதிகாரிகள், பணியாளர்கள், பொது மக்கள் ஆகியோரின் நலனுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொருவரும் தனது மாவட்டத்திற்காக அவசர காலத்திட்டம் ஒன்றையும் தயாரித்துள்ளனர்.

7. ஒவ்வொரு மாநிலத்திற்கும் (முந்தைய ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட சராசரித் தொகையின் அடிப்படையில்) தொடக்க உதவித்தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று ஏழாம் நிதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இத்தொகை, வெள்ளப்பெருக்கு, புயல் போன்ற இயற்கை பேரிடர்களால் ஏற்படுகிற நிவாரணம், புதுவாழ்வளிப்புத் திட்டங்கள் குறித்த செலவுகளுக்காகத் தனியாக வைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு தனியாக ஒதுக்கி வைக்கப்பட்ட இத்

1980 ஜூலை 11]

தொகையை விடக் கூடுதலாக மேற்சொன்ன இயற்கைச் சீற்றங்களின் விளைவாக செலவு ஏற்படுமாயின் கூடுதல் செலவின் 75 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்; எஞ்சியுள்ள 25 சதவீதம் மாநில அரசால் அளிக்கப்படும். நிதியாணைக் குழுவால் மாநில அரசுக்கு இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொடக்க உதவித் தொகை ஒதுக்கீடு ரூபாய் 8·59 கோடியாகும். இதற்காக மத்திய அரசு அனுப்பி வைக்கும் மத்திய அரசு அதிகாரிகள் குழு, மாநில அரசு கோரிக்கைகளை பரிசீலித்து நிதி ஒதுக்கம் செய்யும்.

8. 1979 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழையால் மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் பரவலாகவும், பலமாகவும் மழை பெய்தது. கனத்த மழை காரணமாக பெருவாரியான நீர்த் தேக்கங்களில் நீர்வரவு மிகுந்து விரைவில் நிரம்பின. பல பகுதிகளில் மழை பலமாகப் பெய்ததால் பல ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. முன் பெய்த மழைகளால் ஏற்கனவே நிரம்பிவிட்ட ஏரிகள் உடைந்து பெருமளவில் உயிருக்கும் சொத்துக்கும் இழப்பு ஏற்படுத்தி, பெருஞ்சேதம் விளைவித்தது. இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே நீர் நிறைந்து ஓடிய எண்ணிறைந்த பாசன வாய்க்கால்களும் தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் நீர்ப்பெருக்கெடுத்து, உள்ளூர் வடிகால்களிலிருந்து வந்த கூடுதல் தண்ணீரும் சேர்ந்து கரை புரண்டோடி பெருஞ்சேதம் விளைவித்தது. மாநிலப் பாசன முறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் மாநிலச் சாலைப் போக்குவரத்தும் பெருமளவில் சேதமடைந்தது. 1979-ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் திங்களில் பெய்த கனத்த மழை வெள்ளப்பெருக்குக் காரணமாக, இம் மாநிலத்தில் பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் மொத்தம் 80 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முதலமைச்சர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு தாமாக மதிப்பீடு செய்த பின்னர், நிவாரணம், புதுவாழ்வு நடவடிக்கைகள் பலவற்றை அறிவித்தார்.

9. 1979ஆம் ஆண்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உழவர்கள், மீனவர்கள், அரசுப்பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஏற்பட்ட துயரைத் தணிக்கும் வகையில் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்தது:—

(1) சிறு உழவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும், ஏக்கருக்கு ரூ. 30 மதிப்புள்ள விதை நெல்லும், ரூ. 10 மதிப்புள்ள சிறு தானியங்களும் இலவசமாக வழங்குதல்.

[1980 ஜூலை 11

(2) ஒரு ஏக்கருக்கு ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, சிறு உழவர்களின் நிலத்தினைப் கிணற்றினைப் பொறுத்தவரையில், மணல்மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் பண்படுத்தி சீரமைக்கும் பணியினை இலவசமாகச் செய்து தருதல், ஏனைய உழவர்களைப் பொறுத்தவரையில் 50 சதவீத உதவித்தொகை அளித்தல்.

(3) மதுரை, கோயம்புத்தூர், மாவட்டங்களில் உள்ள சிறு உழவர்களுக்குத் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல், வெற்றிலைக்கொடிக்கால் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை அளித்தல்.

(4) திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள சிறு உழவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும், வாழைத்தோட்டம் அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானியமாக அளித்தல்.

(5) மதுரை, கோயம்புத்தூர் வடஆற்காடு மாவட்டங்களில் உள்ள சிறு உழவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும், கரும்புத் தோட்டத்துக்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானியமாக அளித்தல்.

(6) மீனவர்கள் கட்டுமரங்களும், மீன்பிடிப்படகுகளும் வாங்குவதற்காக, 30 தவணைகளில் வசூலிக்கும் வகையில் 75 சதவீதம் வட்டியில்லாக் கடனாகவும், 25 சதவீதம் மானியம் ஆகவும் அவர்களுக்கு வழங்குதல்.

(7) நெசவாளர்களுக்கு நிவாரண உதவி அளிக்க வேண்டி, வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளுக்காக, வீடு ஒன்றுக்கு ரூ. 250 உதவித் தொகையாகவும், ரூ.250 கடனாகவும் அளித்தல், சேதமேற்பட்ட தறிகள், துணைக் கருவிகள் போன்றவற்றிற்காக தறி ஒன்றுக்கு ரூ. 150 உதவித் தொகை அளித்தல்.

(8) கீழ்க்கண்ட வகைகளில் வரக்கூடிய பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 30 கிலோ அரிசி இலவசமாக வழங்குதல் :—

(அ) முழுவதுமோ, ஒரு பகுதியோ சேதமடைந்த குடிசைகளுக்கு உரியவர்களும் அவ்வாறு சேதமடைந்த அக்குடிசைகளுக்காக அரசிடமிருந்து ரொக்க நிவாரணம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களும் ஆன அனைத்து நபர்கள் ;

1980 ஜூலை 11]

(ஆ) உள்ளாட்சி மன்றங்கள் அல்லது ஏனைய அரசு சார்ந்த அல்லது அரசுச் சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியால் செயல்படும் நிவாரண முகாம்களில் தங்கி உணவு உண்பவர்கள் அனைவரும்.

(9) வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் அல்லது பணிபுரியும் பி, சி, டி, தொகுதியைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாப் பணியாளர்கள் அனைவருக்கும், அவர்களுடைய வீடுகளுக்கோ, ஏனைய சொத்துக்களுக்கோ இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டிருப்பின் அவர்களது ஒரு மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூ. 400 இதில் எத்தொகை குறைவானதோ அத்தொகை வட்டியில்லா முன்பணமாக அளிக்க அனுமதிக்கப்பட்டது.

(10) (அ) தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் 1979 ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பர்த் திங்களில் பெய்த பலத்த மழையாலும் ஏற்பட்ட வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிரின் விளைச்சல் அளவு 6 அணாவாக இருக்கக்கூடிய, அனைத்து நிலங்களின் மொத்த இழப்பு குறித்து வாரியத்தின் நிலை ஆணையின்படி, 1389 ஆம் விளைச்சல் ஆண்டிற்கு (1979 ஜூலையிலிருந்து 1980 ஜூன் வரையில்) செலுத்தப்பட வேண்டிய நிலவரி, பாசனவரி, உள்ளூர் வரி, கூடுதல் தீர்வை, கூடுதல் பாசன வரி, தனித்தீர்வை, தனித் தண்ணீர் வரி அனைத்தும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டது.

(ஆ) மேற்சொன்னவாறு 1389 பசலி ஆண்டிற்கு நிலவரி செலுத்தப்பட்ட எல்லா இடங்களிலும் உள்ளூர் செஸ் மேல் வரியை ஊராட்சி ஒன்றியங்களும் தள்ளுபடி செய்யும்.

(இ) 1389 பசலி ஆண்டிற்கு நிலவரி செலுத்தப்பட்ட இனங்களில், நிலவரி பாக்கி, தண்ணீர் வரி, உள்ளூர் செஸ் வரி, கூடுதல் தீர்வை, தனித் தீர்வை, தண்ணீர் தனித் தீர்வை மற்றும் தக்காவி கடன்களின் நிலுவைத் தொகைகள் நடப்புத் தவணைகள் ஆகியவற்றை வசூலிப்பதை 1390 பசலி ஆண்டிற்கு ஒத்தி போடப்படும். ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளூர் செஸ் மேல் வரி பாக்கித் தொகைகளை வசூலிப்பதை அவ்வாறு தள்ளிப் போட உத்தரவு பிறப்பிக்கும்.

[1980 ஜூலை 11

10. வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் பல்வேறு துறைகள் ஏற்பளித்த நிவாரண மீட்புப் பணித் திட்டங்கள் செயற்படுத்து வதை ஆய்வு செய்து மேற்பார்வையிடும் பொருட்டு, மாவட்டங் களுக்குப் பொறுப்பு வகிக்கின்ற வருவாய்த்துறை வாரிய உறுப் பினரைத் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரை உறுப் பினர்—செயலராகவும் ஏனைய மாவட்ட அதிகாரிகளை உறுப் பினர்களாகவும் கொண்டு, மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், மாவட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் நிவாரணப் பணிகள், மறுவாழ்வுப் பணிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றி அவ்வப்போது ஆராய்ந்து வருகின்றனர்.

11. முதலமைச்சரின் அறிவிப்புகளைத் தொடர்ந்து, அரசு வெவ்வேறு துறைகளின்கீழ் நிவாரண—மறுவாழ்வுப் பணித் திட்டம் ஒன்றை வகுத்து, 31—3—1980-க்கு முன்னர் செல விடுவதற்கு ரூ. 18.66 கோடிக்கு அனுமதி வழங்கியது. இது குறித்து மத்திய அரசின் உதவியும் கேட்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் குழு ஒன்று 1979 டிசம்பர் 11 முதல் 14 வரையிலான தேதிகளில் இம்மாநிலத்திற்கு வருகை தந்தது. நிவாரணப்பணி குறித்து, மத்திய குழுவின் அறிக்கையின் பேரில், உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசு, நிவாரணப்பணி, மறுவாழ்வுப்பணி, பழுது பார்த்தல் பணி, பொதுப்பணிகள், சீரமைப்புப்பணி ஆகிய பல்வேறு இனங்கள் குறித்து 1979—80-ல் செலவிடப்படக்கூடிய கூடுதல் செலவிற் கான உச்சவரம்புகளை அறிவித்தது. பல்வேறு துறைகளுக்காக இந்திய அரசு அறிவித்த மொத்தத் தொகை ரூ. 15·679 கோடி யாகும். 1979 ஆம் ஆண்டில் வெள்ளத்தினால் ஏற்பட்ட கூடுதல் செலவினங்களை ஈடு செய்ய உள்ளபடி மத்திய அரசின் உதவித் தொகை எவ்வளவு கொடுக்க வேண்டியிருக்குமென்பதை மதிப் பிடுவதற்காக இரண்டாவது மத்தியக்குழு ஒன்று 1980 மார்ச்சு 20, 21 ஆகிய நாட்களில் இம்மாநிலத்திற்கு வருகை தந்தது. தொடக்க உதவித்தொகையிலிருந்து அதாவது 1979—80 ஆம் ஆண்டுக்கான 8.59 கோடி ரூபாயிலிருந்து ஈடு செய்ய வேண்டிய 1978—79 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற பணிகளுக்காக ஏற் படும் செலவினம் குறித்து இக்குழு மாநில அரசுடன் விவாதித்தது. இரண்டாவது மத்திய குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க மத்திய அரசு, மொத்தத்தில் ரூ. 22.49 கோடி செலவிடலாமென வரை யறை செய்து ஒப்புதலளித்து, மாநில அரசு ரூ. 21.12 கோடி செலவிடுவதற்கு தகுதியுடையதென்று தெரிவித்தது. (இவ் விவரங்கள் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.), இதன் அடிப்படையில், 1979 ஆம் ஆண்டில் வெள்ளம் காரண

1980 ஜூலை 11]

மாக ஏற்பட்ட கூடுதல் செலவினங்களை ஈடு செய்யும் பொருட்டு திட்டஞ்சாரா மானியமாக மத்திய அரசு ரூ. 9,40,43,00-ஐ இவ்வரசுக்கு வழங்கியது.

12. நிவாரணப் பணிகளை நிறைவேற்றிவந்த பல்வேறு துறைகள் அப்பணிகளை 31—3—1980-க்கு முன்னர் முடிக்க இயலவில்லை ; எனவே 1979 வெள்ள நிவாரண பணிகள் சம்பந்தப்பட்ட எஞ்சிய பணிகள் 1980—81 ஆம் ஆண்டில் முடிக்க கோரிக்கை வைத்தன. பல்வேறு துறைகளுக்கான கோரிக்கைத் தொகை ரூ. 8.53 கோடியாகும். எனினும், மூன்று தலைமைப் பொறியாளர்களுக்குத் (நெடுஞ்சாலைகள்—வெள்ள நிவாரண பணிகள்), (பாசனம்), (கட்டிடங்கள்) தேவைப்பட்ட ரூ. 7.83 கோடியை 1980—81 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 8.59 கோடி தொடக்க உதவித் தொகைக்கு முதல் பொறுப்பாக சாட்டலாமா எனக் கருதப்பட்டது. 1980-81 தொடக்க தொகைக்கு மேலே மதிப்பிடப்பட்ட ரூ. 7.83 கோடி தொகையை முதல் பொறுப்பாகக் கொண்டு செலவிட அனுமதிக்குமாறு இவ்வரசு இந்திய அரசின் நிதியமைச்சகத்தைக் கேட்டுக் கொண்டது. ஆனாலும், இந்திய அரசு இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இது குறித்து அவர்களுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்த கருதப்படுகிறது.

13. தீயினால் சேதமடைந்த குடிசைகளுக்காக ரொக்கத் தொகை வழங்குதற் பொருட்டு, தீ விபத்து நிவாரணம் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான நிவாரணத் தொகைகள் புயல்-வெள்ளத்தால் சேதமடையும் குடிசைகளுக்கும் கொடுப்பதற்குப் பொருந்தும் ; அவையாவன :—

(1) குடிசையின் சொந்தக்காரரே குடிசையை முழுவதுமாக அனுபோகத்தில் வைத்து வந்திருந்தால், நேர்விற்கேற்ப ரொக்க உதவித் தொகையான ரூ. 100 அல்லது ரூ. 50 மேற் சொன்ன குடிசையின் சொந்தக்காரருக்கு வழங்கப்படும்.

(2) ஒரே குடிசையை அதன் சொந்தக்காரரும், ஒருவரல்லது ஒருவருக்கு மேற்பட்ட குடித்தனக்காரர்களும் அனுபோகத்தில் வைத்து வந்திருந்தால் நேர்விற்கேற்ப ரொக்கத் தொகையான ரூ. 100 அல்லது ரூ. 50 குடிசையை அனுபோகத்தில் வைத்து வந்தவர்களிடையே அதாவது குடிசையின் சொந்தக் குடித்தனக்காரர்கள் ஆகியோருக்கிடையே சமமாகப் பிரித்துக் கொடுக்கலாம்.

[1980 ஜூலை 11

(3) ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட குடித்தனக்காரர்கள் மட்டுமே குடிசையை அனுபோகத்தில் வைத்து வந்திருந்தால் நேர்விற்கேற்ப ரொக்கத் தொகையான ரூ. 100 அல்லது ரூ. 50 குடிசையை அனுபோகத்தில் வைத்து வந்த குடித்தனக்காரர்களிடையே சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) இத்தொகை ஒவ்வொரு குடிசைக்கும் வழங்கப்படுவதாகும். அக்குடிசைகள், தீ, வெள்ளம், புயல் முதலியவற்றால் சேதமடைந்து இருக்க வேண்டும்; நேர்விற்கேற்ப ரூ. 100 அல்லது ரூ. 50 ரொக்க உதவி தொகை மேலே குறிப்பிட்டவாறு அனுபோகதாரர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும். வெள்ளம், புயலினால் பாதிக்கப்படுகின்ற குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி (72 மணி நேரத்திற்கும் கூடுதலாக மின்சாரத் தடை இருக்கவேண்டும் என்கிற நேர்வில்) ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும், ஒரு ஜோடி வேட்டி, ஒரு புடவை ஆகியவை தீ விபத்தினால் பாதிக்கப்படுபவர்களுக்கும் வழங்குவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14. பொதுவாக, தாழ்வான பகுதிகள், ஏரிப்படுகை' ஆற்றோரங்கள், மலைச்சரிவுகள் முதலியவற்றில் வீடுகளைக் கட்டிக்கொண்டுள்ள ஏழை மக்கள் பெரு மழை-வெள்ளம் ஆகியவற்றினால் பாதிக்கப்படுவதோடு, அவர்களுடைய குடிசைகள் முழுவதும் அல்லது ஓரளவு சேதமடைய ஏதுவாகின்றன. அந்நபர்கள் அதே இடத்தில் குடிசைகளை மீண்டும் கட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுமாறு வருவாய்த்துறைக்கும், ஏனைய துறைகளுக்கும் கண்டிப்பான உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அத்தகையோருக்கு புது வாழ்வுக்கு இன்றியமையாத வகையில், நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய நல்லதொரு கட்டிடம் கட்டிக் கொடுப்பதைக் கருத்திற் கொண்டு அடிப்படைக்குடி வசதிகளுடன், உயர்வான பகுதிகளில் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் வழிமுறைகள் குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

15. 1978, 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்-வெள்ளம் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் நிலப் பெயர்ச்சியும், நிலச்சரிவும் ஏற்பட்டன. மண் அரிப்பைத் தடுப்பதற்காகக் காடுவளர்த்தல், உருளைக்கிழங்கிற்குப் பதிலாக பழத் தோட்டங்கள் பயிரிடுதல், நில ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல், புவிப்-பொறியியல் தொழில் நுட்ப உத்திகள் போன்ற நீண்ட கால நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

1980 ஜூலை 11]

16. இம்மாநிலத்தில் கடற்கரையோரப்பகுதிகளில் 82 புயல் காப்பு புகலிடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இவற்றில், செலவுத்தொகையை 50:50 என்ற வீதத்தில் பிரித்துக் கொள்ளும் அடிப்படையில், 25 புகலிடங்கள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவின் உடனுழைப்புடன் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றுக்காகும் செலவு 50:50 என்ற வீதத்தில் பிரித்துக் கொள்ளப்படுகிறது. இவற்றில் 10 புகலிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மகாராட்டிர மக்களின் புயல் நிவாரணக் குழுவின் முழு நிதியுதவியுடன் தென்னாற்காடு மாவட்டத்தில் 5 புயல் காலப் புகலிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ''யுனிசெப்'' நிறுவனத்தின் மூலம் 50:50 செலவு வீத அடிப்படையில், கனடா நாட்டவர் அனைத்துலக வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியுடன் 2 புகலிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடற்கரையோரப்பகுதிகளில் 50 புகலிடங்கள் கட்டுவதற்காக, ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளது. இதற்கும் கூடுதலாகச் செலவு ஏற்பட்டால் இதனை மாநில அரசின் நிதிவாயில்களிலிருந்து ஏற்கப்படவேண்டும். மேலும் 18 புகலிடங்கள் கட்டுவதற்கு அவர்களது நிதியுதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண காலங்களில், பள்ளிகள், சுகாதார நிலையங்கள், குழந்தைகள் காப்பகங்கள், முதியோர் கல்வி நிலையங்கள் போன்ற சமுதாய நலக் காரியங்களுக்கும் இப்புகலிடங்கள் பயன்படுத்தப்படும்.

17. இடர்காப்புத் திட்டத்தின் குறிக்கோள் என்னவெனில், புயல் எச்சரிக்கைச் செய்தியை மக்களிடையே பயன்தரும் வகையில் பரவச் செய்வதற்காக, மாவட்ட, கோட்ட, வட்ட அளவில் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டும், அதனால் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் மூலம் வானிலை ஆராய்ச்சித் துறை அறிவிக்கும் முன்னெச்சரிக்கைச் செய்திகளைக் கேட்டு வருவாய்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடங்களில் உள்ளவர்களுக்கு அனுப்ப முடியும்; அத்தகைய அவசர கால நிலைமைகளில் காலம் பொன்னானது. அதன் அடிப்படையிலேயே மக்களையும் கால்நடைகளையும் அகற்றி பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லுதல் போன்ற முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்; ஆதலால், செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற ஐந்து கடற்கரையோர மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், வருவாய்க்கோட்ட அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள்

போன்றவற்றிற்கு 60 வானொலி பெட்டிகள் வழங்குவதற்கு ஆணைகள் பிறப்பிககப்பட்டுள்ளன. 1978, 1979 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மாவட்டம் புயலாலும், நிலச்சரிவாலும், பாதிக்கப்பட்டதால், அம்மாவட்டத்தின் நில அமைப்பைக் கருத்திற் கொண்டு, அம்மாவட்டத்திற்கும் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகள் வழங்குவதும் பரிசீலனையில் உள்ளது.

18. வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், புளியம்பாளையம் கிராமத்தில் 10 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம், இடர்பாதுகாப்புக் கட்டடத் தொகுதி அமைப்பதற்காக இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுப் பிரிவிற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத் தொகுதியில் கிடங்குகள், அலுவலகக் கட்டிடங்கள், பணியாளர்கள் குடியிருப் யிருப்புகள் ஆகியவை இருக்கும். இந்த கிடங்குகள், கூடாரங்கள், தார்பாய்கள், சமையல் பாத்திரங்கள், மருந்துகள், உணவுப் பண்டங்கள் துணிகள், கம்பளங்கள் போன்ற வெள்ளத்தடுப்புச் சாதனங்களைச் சேமித்து வைப்பதற்காகப் கட்டப்படுகின்றன. புயல் அல்லது வெள்ளம் ஏற்படும் பொழுது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவற்றை எளிதில் எடுத்துச் செல்ல முடியும். இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு சுமார் ரூபாய் 14 இலட்சம் செலவாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுக்கொண்டதின் பேரில் அலுவல் துறைப் பணியாக (ஆனால் சென்டேஜ் கட்டணங்கள் விதிக்கப்படாமலேயே) கட்டுமானப் பணியைத் தொடங்குமாறு பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக செஞ்சிலுவைச் சங்கம் முன் கூட்டியே நிதிகள் வழங்கும்.

19. வெள்ளம், புயல் நிவாரணப் பணிகள் தொடர்பான அலுவலர்களுக்கு, சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் புயல் நடவடிக்கைகளில் பயிற்சி அளிப்பதற்காக நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக 1980 ஆம் ஆண்டில் பயிற்சியின் இரு பயிற்சி வகுப்புகள் நடத்தக் கருதப் பட்டுள்ளது.

20. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த கிராமங்களில் நவன வசதிகள், தொலைவில் கிட்டாத மக்களுக்கு புயல் குறித்துத் தகவல் தெரிவிப்பதற்காக 1981 ஆம் ஆண்டில் ஏற்பட இருக்கிற இந்திய தேசிய விண்கலத்துடன், தொடர்பு கொண்ட தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இடர் எச்சரிக்கை

TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

வானொலிப்பெட்டிகள் (தகவல் வாங்கும் கருவி) ஒன்றை நிறுவுவதற்கு இந்திய அரசு வானியல் ஆராய்ச்சித்துறை வகுத்துள்ளது. தொடக்க நடவடிக்கையாக மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அறிக்கை ஒன்று தயாரிக்க சென்னையிலுள்ள நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்ட (தொழில் நுட்ப) இணை இயக்குநரைத் தலைவராகவும்; காவல் துறை வானொலி அலுவலரையும், வானியல் துறை ஆராய்ச்சித் துறை அலுவலர் ஒருவரையும் உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

1977, 1978, 1979ஆம் ஆண்டுகளுக்கு புயல் வெள்ள நிவாரணத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்த தொகை.

செலவினங்களின் விவரம்.	1977	1978	1979
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. மருத்துவ உதவி	138.71	17.00	58.14
2. சிறு விவசாயிகளுக்கு மானியம் (விதைகளும், உரங்களும்)	320.00	38.90	38.74
3. மண்மேடிட்ட நிலங்கள் கிணறுகள் சீரமைப்பு மானியம்	230.00		
4. மீனவர்களுக்கு உதவி	132.00	50.00	1.00
5. நெசவாளர்களுக்கு உதவி	50.00	2.08	22.09
6. (அ) அரசுப்பாசனங்கள்	1,025.00	275.00	349.00
(ஆ) சிறுபாசனங்கள்	..	12.00	..
7. சாலைகள்	1,400.00	750.00	1,087.75
8. (அ) அரசுக்கட்டிடங்கள்	150.00	70.00	71.44
(இ) பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து ஒன்றியக் கட்டிடங்கள்.	50.00	..	28.96
(உ) பள்ளிக்கட்டிடங்கள்	122.00	..	6.92

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9	கீழ்க்கண்ட வகை சாலைகள் மற்றும் சொத்துக்கள் சீரமைத்தல்—			
	(அ) நகராட்சிகள்	136.00	30.00	200.00
	(இ) சென்னை மாநகராட்சி	200.00	..	300.00
	(உ) மதுரை நகராட்சி	..	..	50.00
	(எ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்			
	(ஒ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	..	..	15.00
10	குடிசைகள் கட்டுவதற்கு	1,100.00	68.42	151.00
11	துறைமுகங்கள் செப்பனிடுதல்	30.00	..	..
12	மின்சார வாரிய அமைப்புக்கள் சீரமைப்பு	300.00	..	..
13	சென்னை புறநகர் வடிகால் சீரமைப்பு	26.00	..	..
14	அரிசி வழங்குதல்	260.00	..	74.09
15	நீலகிரி மாவட்டத்தில் காடுகள் அமைத்தல்	..	..	5.00
16	கருணை மானியம்	3.05	1.01	1.40
17	உரங்கள் வாங்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறுகிய கால கடன்.	200.00	..	..
		5,872.76	1,314.41	2,46.53

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் புயல்-வெள்ள நிவாரணத்துக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

	1977	1978	1979
	(1)	(2)	(3)
1	பயிர் விளைச்சல் 6 அணா (37 பைசாவும்) அதற்கு குறைவாகவும் இருப்பின் நிலவரி, நீர்வரி, உள்ளூர் வரி, கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் நீர்வரி, சிறப்பு நீர்வரி, ஆகியவற்றிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. எங்கெல்லாம் நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி மீதான மிகு வரியை ஊராட்சி ஒன்றியங்கள் விலக்கு அளித்தன. நிலவரி தள்ளுபடி செய்யப்பட்ட நேர்வுகளில் பழைய பாக்கி நிலவரிக்கடன் தவணைகள் முதலியன அடுத்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.	1978 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாத புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு அணாவாரி சான்றிதழ் வழங்குவதற்கு அடிப்படையாகக் கருதப்படும் 6 அணா (37 பைசா) அல்லது அதற்கு குறைவான விளைச்சல் இருந்த எல்லா வகை நிலங்களிலும் வருவாய் வாரிய நிலை ஆணைகளில் கண்டுள்ள வரைமுறைபடி 1388 ஆம் ஆண்டு பசலிக்குரிய நிலவரி, உள்ளூர் வரி, கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் நிலவரி, சிறப்பு நீர்வரி, ஆகியவற்றிற்கு வரிய விலக்கு அளிக்கப்பட்டன. எங்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் உள்ளூர் வரி மீதான மிகு வரிக்கு	1979 ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பெய்த மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அணாவாரி சான்றிதழ் வழங்கு அடிப்படையாகக் கருதப்படும். 6 அணா (37 பைசா) அல்லது அதற்கு குறைவான விளைச்சல் இருந்த நிலங்களுக்கு வருவாய் வாரிய நிலை ஆணைகளுக்குட்பட்டு 1389 ஆம் ஆண்டு பசலிக்கான நிலவரி, நீர்வரி, உள்ளூர் வரி, கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் நீர்வரி, சிறப்பு நீர்வரி ஆகியவற்றிற்கு முழு விலக்கு அளிக்கப்படுகிறது. எங்கெல்லாம் நிலவரி விலக்கு அளிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் உள்ளூர் வரி மீதான மிகு வரியை ஊராட்சி ஒன்றியங்கள்

(1)	(2)	(3)
	ஊராட்சி ஒன்றியங்கள் விலக்கு அளித்தன. பழைய பாக்கி நிலவரி கடன் தவணைகளை அடுத்த பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.	விலக்கு அளிக்கும். பழைய பாக்கி நிலவரி கடன் தவணைகளை அடுத்த பசலிக்கு ஒத்தி வைக்கப்படுகின்றன.
2. முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 100-ம் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 50-ம் குடியிருக்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 (துணிகளாக) கொடுக்கப்பட்டது. சில குறிப்பிட்ட நேர்வுகளில் குடிசை செப்பனிடத் தொகை ரூ. 200 வரை உயர்த்தப்பட்டுள்ளது.	நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடிசையிழந்தோர்க்கு தனி வகையாக ஒரு குடிசைக்கு ரூ. 200 வீதம் அதில் குடியிருப்போர்க்கு சொந்தக்காரரானாலும் இல்லாவிட்டாலும் கொடுக்கப்பட்டது. ஒரு குடிசையில் ஒரு குடும்பத்திற்கு மேல் குடியிருந்தால் ரூ. 200 எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் குடிசையின் சொந்தக்காரர்களுக்கு முழுச் சேதமடைந்த குடிசைக்கு ரூ. 100-ம், பகுதி சேதமடைந்த குடிசைக்கு ரூ. 50-ம், குடிசையின் சொந்தக்காரரல்லாதவர்களுக்கு ரூ. 25 துணி	பாதிக்கப்பட்ட குடிசைகளில் வாடகைக்கு குடியிருப்பவர்களும் பயனடையும் வகையில் அரசு கீழ் கண்டவாறு உத்திரவிட்டுள்ளது :— 1. பாதிக்கப்பட்ட குடிசையில் அதன் சொந்தக்காரர் மட்டுமே வசித்தால் அவருக்கு குடிசை மானியமான ரூ. 100 அல்லது ரூ. 50 பாதிப்புக்குத் தக்கவாறு வழங்கப்படும். 2. அதே குடிசையில் அதன் சொந்தக்காரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாடகைக்குக் குடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)
	மானியமாகவும் கொடுக்கப் பட்டது.	யிருப்பவர்கள் வசித்தால் குடிசை மானியமான ரூ. 100 அல்லது ரூ. 50 அவர்களுக்குச் சரி சமமாக பிரித்துக் கொடுக். கப்படும்.
		3. ஒரு குடிசையில் ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட வாடகைக்குக் குடியிருப்பவர்கள் வசித்தால் குடிசை மானியமான ரூ. 100 அல்லது ரூ. 50-ஐ அவர் களுக்குச் சரி சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
		4. மானியம் வழங்க தீ மற் றும் வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடிசையும் ஒரு யூனிட்டாக கருதப்பட்டு அதில் வசிக்கும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் மேற்— குறிப்பிட்டவாறு பிரித்துக் கொடுக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.	சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் வழங்கப்பட்டன. உரம் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீத மானிய அடிப்படையில் கொடுக்கப்பட்டது.	சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் வழங்கப்பட்டன. உரங்கள் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது.	சிறு விவசாயிகளுக்கும், குத்தகைகாரர்களுக்கும் ஒரு ஏக்கருக்கு ரூ. 30 மதிப்புள்ள விதைகளும் ஒரு ஏக்கருக்கு ரூ. 10 மதிப்புள்ள தானிய வகைகளும் அளிக்கப்பட்டன.
4.	மண்ணில் புதையுண்ட நிலங்களும், கிணறுகளும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு 50 சதவீதம் உதவியாகவும் சீரமைக்கப்பட்டன.	மண்ணில் புதையுண்ட நிலங்களும், கிணறுகளும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு 50 சதவீதம் உதவியாகவும், ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் உதவியளிக்கப்பட்டது.	மண்ணில் புதையுண்ட நிலங்களும், கிணறுகளும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு 50 சதவீதம் உதவியாகவும், ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் உதவியளிக்கப்பட்டது.
5.	தென்னங் கன்றுகளை இலவசமாக அளித்தல், கரும்பு, வாழை முதலியவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100 உதவித் தொகை, வெற்றிலைக்கு ரூ. 500 உதவித் தொகை, காய்கறி தோட்டங்களுக்கு இனாமாக விதையளித்தல், முதலியன சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்படும்.	பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தென்னங்கன்றுகளை இலவசமாகவும், கரும்பு, வாழை இவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100 உதவித் தொகையாகவும், வெற்றிலைக்கு ரூ. 500 (ஒரு ஏக்கருக்கு) உதவித் தொகையாகவும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250-க்கும் நபர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கும் மேற்படாமல் உருளைக் கிழங்கு விதைகளுக்கு 25 சதவீதம் விலை இலவச உதவித்	மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சிறு விவசாயிகளுக்கு தென்னங் கன்று இலவசமாகவும் வெற்றிலைக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 500-ம் கொடுக்கப்பட்டது. திருச்சி, மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறு விவசாயி குத்தகைதாரர்களுக்கும் வாழைப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 100 உதவித் தொகையாக

1977 (1)	1978 (2)	1979 (3)
	தொகையாகவும், காய்கறி தோட்டத்திற்கு விதைகள் இலவசமாகவும் சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.	வழங்கப்பட்டது. மதுரை கோயம்புத்தூர், வட ஆற்காடு மாவட்டங்களில் ஒரு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் கரும்பு பயிரிடுவதற்கு மானியம் கொடுக்கப்பட்டது.
குடும்பத்தின் பொருளீட்டுபவர் இறந்துபோனால் அக்குடும்பத்திற்கு ரூ. 1,000 கருணை மானியம் அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரே இத்தொகை வழங்க அனுமதிக்கப்பட்டது.	இறந்தவர்கள், அக்குடும்பத்தின் பொருளீட்டுபவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் குடும்பத்திற்கு முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 கருணை மானியம் கொடுக்கப்பட்டது.	இறந்தவர்கள் அக்குடும்பத்தின் பொருளீட்டுபவராக இருப்பின் அக்குடும்பத்திற்கு ரூ. 1,000 கருணை மானியமாக கொடுக்கப்பட்டது.
நெசவாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்பட்டது.	நெசவாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்பட்டது.	நெசவாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்பட்டது.
1. தொழிற்கூடமாகவும், பயன்படுத்திய வீடிழந்தவர்களுக்கு மானியமாக ரூ. 200-ம் ரூ. 300 கடனாகவும் கொடுக்கப்பட்டது.	1. தொழிற்கூடமாகவும், பயன்படுத்திய வீடிழந்தவர்களுக்கு மானியமாக ரூ. 200-ம் ரூ. 300 கடனாகவும் கொடுக்கப்பட்டது.	1. தொழிற்கூடமாகவும், பயன்படுத்திய வீடிழந்தவர்களுக்கு ரூ. 250 மானியமாகவும், ரூ. 250 கடனாகவும் கொடுக்கப்பட்டது.
2. பாதிக்கப்பட்ட தறிகளுக்கும் மற்ற உபகரணங்	2. பாதிக்கப்பட்ட தறிகளுக்கும் மற்ற உபகரணங்	2. பாதிக்கப்பட்ட தறிகளுக்கு ரூ. 125 மானிய

களுக்கும் ஒரு தறிக்கு ரூ. 125 மானியமாகக் கொடுக்கப்பட்டது.	களுக்கும் ஒரு தறிக்கு ரூ. 125 மானியமாகக் கொடுக்கப்பட்டது.	மாகக் கொடுக்கப்பட்டது.
மீனவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் வலைகள் மற்றும் படகுகள் வாங்க உதவியளிக்கப்பட்டது.	மீனவர்களுக்கு கீழ்க்கண்டவாறு சலுகைகள் அளிக்கப்பட்டன. ரூ. 1. முழுச்சேதமடைந்த கட்டு மரத்திற்கு. 2,000 2. பகுதிச்சேதமடைந்த கட்டு மரத்திற்கு. 1,000 3. முழுச் சேதமடைந்த நாட்டுப்படகுகள். 4,000 4 பகுதிச் சேதமடைந்த நாட்டுப்படகுகள். 2,000 5. முழுச் சேதமடைந்த நைலான் வலைகள். 3,000 மேற்கூறியவை 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் வட்டியில்லா கடனாகவும் 30 தவணைகளில் வசூலீக்க தக்கதாகவும் வழங்கப்பட்டது.	மீனவர்களுக்கு 75 சதவீதம்கடனாகவும், 25 சதவீதம்மானியமாகவும், கட்டுமரம், படகுகள் வாங்க அளிக்கப்பட்டது. கடன் 30 தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1980 ஜூலை 11

3. நிலமற்ற ஏழை மக்கள் பயிரிட நிலம் வழங்குதல்.

1. உழுதுண்டு வாழ நிலமின்றி வாடும் நிலமற்றவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் அரசு தரிசு நிலங்கள் ஒப்படை செய்யப் படுகின்றன. 5 பேர் அல்லது அவர்களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத்தின் தலைவனுக்கு, மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகவோ வருமானம் கிடைப்பின் அவர் '' ஏழை '' எனக் கருதப்படுகிறார். ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு அதிகமாக இருப்பின், மாதமொன்றுக்கு வருமான வரம்பு ரூ. 250 அல்லது அதற்கு குறைவாகும்.

2. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங் களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால் அங்கு ஒருவருக்கு, உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ அல்லது $\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

3. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப் படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டுக் காலத் துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி பராதீனம் செய்யவோ கூடாது. ஆயின், கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடை மானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும், அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோ தான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந் நிலத்தைப் பயிரிடக்கூடாது.

4. இப்பணியைக் கவனிக்கும் பொருட்டு, ஒவ்வொரு பிரி விலும், வட்டாட்சியர் ஒருவர், வருவாய்த்துறை ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய 27 பிரிவுகளை அமைப்பதற்கு அரசு 1979–80 ஆம் ஆண்டில் அனுமதி அளித்தது. அந்த 27 பிரிவு களில் 12 பிரிவுகள் 1980–81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகின்றன.

5. நிலம் பெறுவதற்குத் தகுதியுடைய 29,465 பேருக்கு, 1979 ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரை 29,483.30 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான நிலை பின் வரும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

1979–80 ஆம் ஆண்டில் ஒப்படை செய்யப்பட்ட பயிரிடு நிலங்களின் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும் மாவட்டமும்.		பட்டாக்கள்.	ஒப்படை செய்யப் பட்ட பரப்பு.
(1)		(2)	(3)
			ஏ. செ.
1	செங்கல்பட்டு	1,890	1,359·75
2	தஞ்சாவூர்	2,692	1,151·59
3	சேலம்	763	1,268·03
4	திருச்சிராப்பள்ளி	3,461	2,705·46
5	கோயம்பத்தூர்	157	258·42
6	மதுரை	1,230	2,238·28
7	தருமபுரி	4,228	7,136·05
8	இராமநாதபுரம்	3,898	4,272·55
9	திருநெல்வேலி	8	7·82
10	வட ஆற்காடு	370	313·69
11	தென் ஆற்காடு	2,317	3,356·53
12	கன்னியாகுமரி	888	224·85
13	நீலகிரி	60	55·12
14	புதுக்கோட்டை	7,497	5,131·50
15	பெரியார்	6	3·66
		29,465	29,483 30

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. இவ்வாறாக, பெருமளவு நில ஒப்படைத் திட்டம் பல்லாண்டுகளாகச் செயலில் இருக்கையில் இத்திட்டத்தின் உண்மை நோக்கம் தோல்வியடையும் வகையில், தகுதியற்ற ஒரு சிலருக்கு முறையின்றி நிலம் தவறாக ஒப்படை செய்யப்பட்டுள்ளதையும் அரசு அறிந்தது. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ, நில ஒப்படை செய்வதற்குரிய நிபந்தனைகள் மீறப்பட்டு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ ரத்து செய்யும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன், மாவட்டங்களில் நில ஒப்படை செய்யப்பட்டிருப்பதை மறு ஆய்வு செய்வதென அரசு முடிவு செய்தது. முன்னர் செய்த நில ஒப்படையை மறு ஆய்வு செய்வது தொடர்பான பணியைக் கவனிக்கும் பொருட்டுச் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒவ்வொரு பிரிவுகளிலும், துணை வட்டாட்சியர் ஒருவர், வருவாய்த்துறை ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய 23 பிரிவுகளைக் கொண்ட தனிப் பணியாளர்களை நியமிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையின் கீழ் களப்பணியாளர்கள் மறு ஆய்வு நடத்தியதன் காரணமாக 1980 மார்ச்சுத் திங்கள் வரையில் 40,605 நில ஒப்படைகள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், 779 நில ஒப்படைகளில் முறைகேடுகள் காணப்பட்டதன் காரணமாக அவை ரத்துச் செய்யப்பட்டன. எஞ்சியவை மேற்கொண்டும் விசாரிக்கப்படுகின்றன. மறு ஆய்வின் முடிவு மாவட்டவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

31—3—1980 அன்றுள்ளவாறு, விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பட்டா நிலங்களின் (பயிரிடத்தக்க தரிசு நிலங்கள்) எண்ணிக்கை, தனிப் பணியாளர்கள் மறு ஆய்வு நடத்திய பின்னர் ரத்து செய்யப்பட்ட பட்டா நிலங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டத்தின் பெயர்.	விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.	ரத்து செய்யப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1 செங்கல்பட்டு	6,742	67
தஞ்சாவூர்	3,489	94

1980 ஜூலை 11]

மாவட்டத்தின் பெயர்.	விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.	ரத்து செய்யப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
2 சேலம்	4,044	56
4 திருச்சிராப்பள்ளி	4,170	49
5 கோயம்புத்தூர்	1,932	89
6 பெரியார்	5,471	..
7 மதுரை	3,435	16
8 தருமபுரி	135	..
9 இராமநாதபுரம்	2,912	40
10 திருநெல்வேலி	3,360	6
11 வட ஆற்காடு	1,514	17
12 தென் ஆற்காடு	853	102
13 புதுக்கோட்டை	2,548	248
	40,605	779

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. சேலம் மாவட்டத்தை சேர்ந்த கஞ்சமலைப் பகுதியில் உள்ள சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு நிலங்கள் தேவைப் பட்டன. இத்திட்டத்திற்கு நிலம் தேவைப்பட்டதைக் கருத்திற் கொண்டும், அரசுத்துறையில் தொழில் வளர்ச்சிக்காக நிலங்கள் தேவைப்பட்டதைக் கருத்திற் கொண்டும், அரசு நிலங்கள் ஒப் படை செய்வதை அல்லது குத்தகைக்கு விடுவதைத் தடை செய் தது. 147 கிராமங்களில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள 4,346 ஏக்கர் அரசு நிலங்களை, சேலம் உருக்காலைத் திட்டத் தின் தேவையைப் பாதிக்காவண்ணம், நிலமற்ற ஏழையர்களுக்கு ஒப்படை செய்ய இயலுமென அரசு அறிந்தது. இக்கிராமங் களிலுள்ள நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ரத்து செய்தது.

[1980 ஜூலை 11

4. வீட்டு மனைகளை ஒதுக்குதல்.

வசிக்க வீடின்றி வானமே கூறையாக நினைத்து வாழும் ஏழை எளியோர்க்கு வீடு கட்டிக்கொள்வதற்காக சென்னை, மதுரை மாநகரங்களிலும், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும் 750 சதுர அடி வரையிலும் மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 3 சென்டு வரையிலும் அரசு நிலம் இலவசமாக ஒதுக்கப்படுகின்றன. பல இடங்களில் அரசு நிலங்களில் பலர் ஏற்கனவே குடிசை கட்டி வாழ்ந்து வருவதால், அத்தகைய இடங்களில் வீடுகள் கட்டிக் கொண்டதற்கு மறுப்பேதும் இல்லை எனக் கூறி முறைப்படுத்த வேண்டியதாயுள்ளது.

2. பயிரிட நிலம் ஒதுக்கியதைப் பொறுத்த மட்டில் ''வறியவர்'' என்னும் சொற்றொடருக்கான பொருள் விளக்கம், வீட்டு மனைக்காக வழங்கப்படும் நிலத்திற்கும் பொருந்தும்.

3. 30—6—77—ம் நாள் அன்றுள்ளபடி, வீடற்ற வறியோர் குடிசைகளைக் கட்டிக்கொண்டு செய்த நில ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என்றும் ஆனால் விதிகளுக்கிணங்க முறைப்படுத்தப்படலாமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

4. சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்களாகப் பணியாற்றி வருகின்ற ஆதி ஆந்திரமக்கள் பெரும்பான்மையினோர், ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தை முறைப்படுத்தும் பொருட்டு, நிலம் ஒதுக்குதல் குறித்த தனித் திட்டம் ஒன்றிற்கு வருவாய்த் துறையின் 21—10—1976 ஆம் நாளிட்ட 2160—ஆம் எண்ணுள்ள அரசாணையில் அரசு அனுமதி வழங்கியது. ஆதி ஆந்திர குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கிரவுண்டு ரூ. 3,000 என்ற வகையில் நிலத்தின் கிரயத்தைச் செலுத்தினால் 750 சதுர அடி பரப்புள்ள நிலத்தை அவர்களுக்கு ஒதுக்க இத்திட்டம் அனுமதித்தது. 750 சதுர அடிப் பரப்புக்கும் கூடுதலான நிலத்தைப் பெற விரும்பினால் அந்நில மதிப்பைப் போல இரு மடங்கு தொகை செலுத்துவதன் பேரில் அந்நிலம் அவர்களுக்கு ஒதுக்கப்பெறும். 2170 ஆதி ஆந்திரர்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அவ்வாறு அக்கிரமிப்பு செய்துள்ளவற்றில் 894 ஆக்கிரமிப்புகள் இதுவரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

5. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகள் என அறிக்கையிடப்பட்டுள்ள அரசு, மாநகராட்சி பொது நிலங்களை ஆக்கிரமிப்பாளர்கள், அனுமதியின்றி தங்களது அனுபோகத்தில் வைத்து வந்ததால், அவை தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் 20 சதுர மீட்டர் என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டு, முறைப்படுத்தப்படும் என வீட்டு வசதி-

1980 ஜூலை 11]

நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 21—6—1979 ஆம் நாளிட்ட 1117 ஆம் எண்ணில் அரசு ஆணையிட்டு இத்திட்டம் உலக வங்கித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு சதுர மீட்டர் நிலத்தின் மதிப்பு ரூ. 700 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் ஒரு கிரவுண்டு நிலத்தின் மதிப்பு ரூ. 7,000 ஆகும். தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்றுச் சட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகள் என அறிவிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல் படுத்தப்படும். இதற்காக, தனிப்பணியாளர்களை நியமித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6. 1—4—1979 முதல் 31—3—1980 வரை 19,104 பேருக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாகப் புள்ளி விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

மாவட்டத்தின் பெயர். (1)	1979–80ல் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. (2)
செங்கற்பட்டு—	
எல்லையோரம் அல்லாத பகுதி ..	1,310
எல்லையோரப் பகுதி	1,102
தஞ்சாவூர்	1,665
சேலம்	957
திருச்சிராப்பள்ளி	2,835
சென்னை	207
கோயம்புத்தூர்	652
மதுரை	3,697
தருமபுரி	432
இராமநாதபுரம்	718
திருநெல்வேலி	152
வட ஆற்காடு	763
தென் ஆற்காடு	2,834
கன்னியாகுமரி	212
நீலகிரி	439
புதுக்கோட்டை	227
பெரியார்	902
	19,104

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1980 ஜூலை 11

5. பட்டா புத்தகத் திட்டம்.

1. 1972-ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் பட்டா புத்தகத்திட்டம் செயல்பட்டு வருகிறது. நில உரிமையாளர் ஒவ்வொருவரும், தன் வசம் உள்ள நிலங்கள் தொடர்பாக தாளது வரையில் விவரங்கள் பதியப்பெற்று ஏற்பு பெற்ற பதிவேடு ஒன்றை வைத்திருக்க இத்திட்டம் உதவும். பட்டா புத்தகம் நிர்வாகத்திற்கு சிறந்த ஆவணமாகவும் உதவுகிறது.

2. பட்டா புத்தகத் திட்டம் செயல்படுவதில் சில குறை பாடுகள் இருந்தமையால், அத்திட்டம் எவ்வாறு செயல்படு கின்றது என்பது குறித்து அறிய, மதிப்பிடுதல் செயல் முறை ஆராய்ச்சித்துறை 1977 மார்ச்சில் முன்னோடி ஆய்வு ஒன்றை நடத்தியது. பின்னர் கொடுத்த அறிக்கையை ஒட்டி பட்டா புத்தகத்துடன் நோக்கத்தை செவ்வையாக நிறைவேற்று வது எவ்வாறு என்பது குறித்து ஆராய நிலவரி (முக்கியப்பணி) ஆணையாளர் தலைமையில் குழு ஒன்றை அரசு நியமித்தது. இக் குழு, 1979 மார்ச்சில் தனது அறிக்கையை அனுப்பியது. மாநில அளவில் அமைந்த வங்கிக் குழுவும், ஸ்டேட் வங்கியும், இந்திய ரிசர்வ் வங்கியும், கூட்டுறவுச் சங்கப் பதிவா ளரும் தெரிவித்த கருத்துரைகள் சிலவற்றின் அடிப்படையில் இப்பிரிவுரைகள் அமைந்துள்ளன.

3. பட்டா புத்தகத் திட்டம் தொடர்பாகக் குழு தெரி வித்த பரிந்துரைகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

(1) நிலங்களின் விவரத்தையும் அந்நிலங்கள் தொடர் பாக செலுத்தத்தக்க தண்ணீர் தீர்வை மற்ற வரி உட்பட பல வரிகள் அனைத்தையும் ''ஜமா பந்தி'' காலத்தில் கணக்கு கள் தீர்க்கப்பட்டவுடனே ஒவ்வொராண்டும் கிடைக்கக் கூடிய விவரங்கள் அனைத்தையும் பட்டா புத்தகத்தில் எழுதி வைக்கும்படி கர்ணத்திற்கு வட்டாட்சியர் உத்திரவிடவேண்டும். கூட்டுப்பட்டாவின் கீழ் பாக்கி வரவை எழுதி வைப்பதற்காக, பட்டா புத்தகத்தில் 17 முதல் 19 வரையிலான பக்கங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

(2) கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகள், நகர்ப்புற வங்கிகள் உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், அந்தந்த நிறுவனப் புத்தகங்களில் உள்ள விவரங்களோடு எளிதில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, பட்டா தாரரின் உறுப்பினர் பதிவு எண்ணை பட்டா புத்தகத்தில் அந்தந்த நிறுவனம் எழுதி வைக்க வேண்டும்.

(3) கடன் நிலுவைகள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதில் திருப்பிச் செலுத்தப்படும் தவணைகளின் எண்ணிக்கை, கால அளவு, கடைசி தவணைத் தொகை செலுத்தப்பட வேண்டிய நாள், கடைசி தவணைத் தொகை செலுத்தப்பட்ட நாள் பற்றிய விவரங்கள், பட்டா புத்தகத்தில் எழுதப்பட

1980 ஜூலை 11]

வேண்டும். பட்டா புத்தகத் திட்டத்தை கட்டாயமாக நிறைவேற்றும் நாள் அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கடன்களைப் பொருத்தமட்டிலே இந்த விவரங்கள் எழுதப்பட வேண்டியது அவசியம். நிதியுதவி நிறுவனங்கள், இந்த பதிவுகளை பூர்த்தி செய்ய வேண்டும். பட்டா புத்தகத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து குழு தெரிவித்த பரிவுரைகளின் அடிப்படையில், பட்டா புத்தகத்தை வைத்து வருவது தொடர்பாக வருவாய்த்துறை வாரியத்திற்கும் (நிலவரி), மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும், பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கும் வருவாய்த் துறையின் 23—5—1979 நாளிட்ட 1132 ஆம் எண்ணுள்ள அரசாணையில் விரிவான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. இதனால் பட்டாதாரரின் கடன் இறுக்கும் சக்தியை நிச்சயித்தறிந்து, செலுத்தப்பட்ட தீர்வை, கடன்கள் முதலியவற்றின் விவரங்களைக் காட்டும் பதிவேடு ஒன்றை உழவர்கள் வைத்து வர இப்புத்தகம் சிறந்த ஆவணமாக உதவும்.

(4) பட்டா புத்தகத் திட்டம் குறித்த குழு பட்டா புத்தகத்தில் சம்பந்தப்பட்ட விவரங்கள் அனைத்தையும் பதிவுச் செய்ய இயலும் வகையிலும் நில உரிமைக்குரிய சரியான அத்தாட்சியாக இந்த பட்டா புத்தகத்திற்கு சட்டப்படிக்கான அந்தஸ்து அளிக்கும் வகையில் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் வகையிலும் பட்டா புத்தகத்தின் வடிவமைப்பை திருத்தியமைக்க யோசனை தெரிவித்துள்ளது. குழு, வரைவுச் சட்ட முன் வடிவு ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன்படி நில உடைமை உரிமை அளித்து பட்டா புத்தகம் வழங்கப்படும். இதனை சாட்சியாக நீதிமன்றத்தில் அளிக்கலாம். கடன் உதவி நிறுவனங்கள், கடன் வழங்கும் போதோ, அது பற்றிய பதிவுகளைப் பட்டா புத்தகத்தில் எழுதிவைக்கும் போதோ நிலச் சொத்துகள் விற்றதை பதிவு செய்யும்போதோ. அடமானம் வைக்கும் போதோ இதனை சாட்சியமாக அளிக்க சட்டமுன் வடிவு வகை செய்யும். இது தொடர்பாக சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

6. பொது மக்கள் தொடர்புத் திட்டம்.— கிராம மக்களுக்குக் கவலையை உண்டாக்கும் தீராத பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க மக்கள் தொடர்புத் திட்டம் வாய்ப்பளிக்கிறது. மாவட்ட நிர்வாகம் வகுத்த திட்டத்தின்படி அரசு அதிகாரிகளைக் கொண்ட குழு குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களின் குறைகளைப் பரிவோடு கேட்டு அங்கேயே அவற்றைத் தீர்த்துவைக்கின்றனர். இத்திட்டம் தொடர்ந்து

தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1—4—1979 முதல் 30—4—1980 வரை 41,957 மனுக்கள் வரப் பெற்று, அவற்றில் 38,720 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

7. தண்ணீர் கட்டண வீதங்கள்.

(1) இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. நன்செய் நிலங்கள், ஒருபோகப் பயிர் விளையும் நிலங்கள், இருபோகப் பயிர் விளையும் நிலங்கள், கூட்டு இருபோகப் பயிர் விளையும் நிலங்கள் என்று மேலும் பிரிக்கப்படுகின்றன. மண்வளம், வேளாண்மை விளை பொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பொறுத்து நன்செய் புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிலவரியுடன் தண்ணீர்த் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படும். தண்ணீர் தீர்வை தர, வீதங்கள் முறையின் கீழ் நிர்ணயித்த ஏற்பாட்டின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இது பாசன வாயில்களின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள், தனி சிறு பாசனத் திட்டப் பணிகளில் தனி தண்ணீர்த் தீர்வை வீதங்கள் நடைமுறையில் உள்ளன.

(2) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டத்தின் கீழ் கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, முறையே நன்செய் நிலங்கள், இதர நிலங்களின் மேல் விதிக்கப்படுகின்றன. இது தவிர, 1978 ஆம் ஆண்டு, 15-ம் சட்டத்தின் மூலம் பின்னர் திருத்தப்பட்ட தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டத்தின் (சட்டம் 4/1970) படி, முதல் வகுப்பு/இரண்டாம் வகுப்பு பாசன வாயில் அல்லது, அச்சட்டத்தின் III ஆம் விவர அட்டவணையில் அல்லது IV ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு பாசன திட்டத்திலுள்ள பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் ஒவ்வொரு பயிருக்கும் 1977 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், முதல் நாளிலிருந்து தனி வரியும், **தனி**

1980 ஜூலை 11]

தண்ணீர்த் தீர்வையும் அரசு விதித்தது. தனி வரியும், தனி தண்ணீர்த் தீர்வை வீதங்களும் வருமாறு :—

பாசன வாயில்கள்.	தனி வரி விதிப்பு சாதாரண பயிர்.	தனி வரி விதிப்பு இருவகை பயிர்
முதல் வகை பாசன வாயிலும் III ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாசன வாயில்களுக்கும்.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 10.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 15.
இரண்டாம் வகை பாசன வாயிலும் IV-ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாசன வாயில்களும்.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 8	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 12.

பாசன வாயில்கள்.	தனி தண்ணீர்த் தீர்வை சாதாரண பயிர்.	தனி தண்ணீர்த் தீர்வை இருவகைப் பயிர்.
முதல் வகை பாசன வாயிலும் III ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாசன வாயில்களும்.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 10.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 15.
இரண்டாம் வகை பாசன வாயிலும் IV ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாசன வாயில்களும்.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 8.	ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 12.

(3) மாநிலத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

(4) இதற்கிடையே, நில வரி தீர்வைகள், தண்ணீர்த் தீர்வை, கூடுதல் வரி விதிப்பு அல்லது கூடுதல் தண்ணீர்த் தீர்வைக்கு மேலாக தனி வரி அல்லது தனி தண்ணீர்த் தீர்வை செலுத்த வேண்டியிருப்பதால் விவசாயிகளுக்கு பெருந் தொல்லை ஏற்பட்டிருப்பதாக முறையிட்டதன் பேரில் இதற்கென தனியாகச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் தொடக்கத்திலிருந்து தனி வரி, தனி தண்ணீர்த் தீர்வை விதிப்பை விட்டுவிட அரசு

முடிவு செய்தது. இதற்கான சட்ட முன்வடிவு சட்டப்பேரவையின் கடந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்டது. ஆனால் சட்டப் பேரவை கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் சட்ட முன்வடிவு காலாவதியாகிவிட்டது. அதனை மீண்டும் இப்போதைய கூட்டத் தொடரில் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. 1389 ஆம் பசலிக்கு விதிக்கப்பட்ட வரியை வசூலிப்பதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

8. வணிகப் பயிர் வரி விதிப்பு.—

(1) மாநிலத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக 1976 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்புச் சட்டம் 1—7—1976 விருந்து செயலுக்கு வந்தது. இச் சட்டத்தின் கீழ் சில வணிகப் பயிர்களுக்கு கீழ்க்காணும் வீதங்களில் வரி விதிக்கப்பட்டது :—

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை. மஞ்சள் ஆகியவற்றிற்கு ஏக்கருக்கு ஆண்டிற்கு ரூபாய் 20,

(ஆ) புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றிற்கு ஏக்கருக்கு ஆண்டிற்கு ரூ. 12·50.

(2) மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பாதகமான பருவ நிலை நிலவியதால், மேற்படி சட்டத்தின்கீழ் 1386 பசலி ஆண்டுக்கு வணிகப் பயிர்களுக்கு செலுத்த வேண்டிய வரியை அரசு தள்ளுபடி செய்து விட்டது. மேலும், திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்களின் மேல் விதிக்கப்பட்டிருந்த வரி வீதத்தை ரூ. 20-லிருந்து ரூ. 15-ஆகக் குறைத்தது. மேலும் புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றின் மீதான வரி விதிப்பை 1387ஆம் (1977 ஜூலை திங்கள் முதல்) பசலி ஆண்டிலிருந்து கைவிட்டு விட்டது.

(3) வணிகப் பயிர் வரி விதிப்பை எதிர்த்து விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளின் பேரில் உழவர்களின் பிரச்சினைகளை ஆராய உயர்நிலைக் குழுவை அரசு அமைத்தது. 1387, 1388, 1389ஆம் பசலி ஆண்டுகளுக்கான வணிகப் பயிர் வரி விதிப்பும் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வரி விதிப்பை விட்டுவிடும்படி உயர்நிலைக் குழு பரிந்துரைத்தது ; அரசு இப்பரிந்துரையை ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்புச் சட்டத்தை அது செயலுக்கு வந்த

1980 ஜூலை 11]

காலத்திலிருந்தே ரத்து செய்யவும் முடிவு செய்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்ற சட்ட முன்வடிவு சட்டப் பேரவையின் கடந்த கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்டது. ஆனால் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதால் சட்டமுன்வடிவு காலாவதியாயிற்று. ஆகவே அந்தச் சட்ட முன்வடிவை மீண்டும் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது.

9. வேளாண்மை வருமான வரி:

(1) தமிழ்நாட்டில் வேளாண்மை வருமானத்திற்கு, தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு மலைத் தோட்ட வேளாண்மைச் சட்டத்தின் மூலம் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ், காப்பி, தேயிலை, இரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு வரி விதிக்கப்பட்டது. மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டப் பயிர்களுக்கும், ஏனைய பயிர்களுக்கும் 1958–59ஆம் வரி விதிப்பு ஆண்டிலிருந்து வரி விதிக்க இயலும் பொருட்டு, 1958-ல் இச்சட்டம் திருத்தப்பட்டது.

(2) வேளாண்மை விளை பொருள்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தையொட்டி படித்தர வீதங்களில் 1958ஆம் ஆண்டு சட்டத்தின்படி வரி நிர்ணயிக்கப்பட்டு, ரூ. 5,000–க்கு மேல் வருமானமுடைய அல்லது 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறையாமல் நிலம் வைத்துள்ள வரி விதிக்கப்பட்டவர் ஒவ்வொருவருக்கும் முந்தைய ஆண்டின் (கணக்கு ஆண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின்மீது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் வரி விதிக்கப்பட்டு வந்தது. சாதாரண ஏக்கர்கள் தரம் வரி விதிப்பின் அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றப்படுகின்றன.

(3) 1958ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் வரி விலக்கு வரையறை ரூ. 2,000-த்திலிருந்து ரூ.3,600–க்கு உயர்த்தப்பட்டது. மேலும் இந்த வரையறை 1968-ல் ரு.4,000-க்கும், 1973-ல் ரூ.5,000-க்கும் உயர்த்தப்பட்டது. வரி இணக்கத் திட்டத்தின்படி, முந்தைய வரி விலக்கு வரையறை 10 ஸ்டாண்டர்டு ஏக்கராகும்.

(4) வேளாண்மை வருமானத்தின்மீது சீரமைக்கப்பட்ட வரி விதிப்பு முறையைக் கொண்டு வருவதற்கும், சிறு உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், பெருமளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து வேளாண்மை வருமானத்தில் பெரும்பங்கை வரியாகப் பெறுவதற்கும், அரசு 1979ஆம் ஆண்டுச் சட்டத்தைத் (சட்டம் 32/1979) திருத்துவதன் மூலம் தரம் வரி விதிப்பிலிருந்து பயிர் அடிப்படையில் சாதாரண ஏக்கரை ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றியது. இதன்படி மலைத் தோட்டப் பயிர்களும்,

ஏனைய பயிர்களும் ஸ்டாண்டர்டு ஏக்கரைக் கணக்கிடுவதற்காக 13 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த நடைமுறை 1979–80 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயலுக்கு வந்துள்ளது. மேலும், வரி விலக்கு வரையறையும் ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. வரி இணக்கத் திட்டமும் வரி விலக்கு வரையறையை 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உயர்த்தியுள்ளது. வரி இணக்க வசதி, வரையறை ஏதுமின்றி மலைத் தோட்டப் பயிர்கள் அல்லாத ஏனைய பயிர்களைப் பயிரிடுவோர்க்குக் கிடைக்கிறது. இந்த வசதி, 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் நிலம் வைத்திருந்து முழுவதும் மலைத் தோட்டப் பயிர்களைப் பயிரிட்டுள்ளோருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

(5) வருவாய்த் துறை வாரியத்தின் (வேளாண்மை வருமான வரி) கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வேளாண்மை வருமான வரி ஆணையாளர், இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பில் உள்ளார். இவருக்கு ஆறு வட்டார உதவி ஆணையாளர்களும், 32 வேளாண்மை வருமான வரி அதிகாரிகளும் பணியில் உதவி புரிகின்றனர். மலைத் தோட்டம் அல்லாத பகுதிகளில் வரி வசூல் பணியை, வட்டாட்சியர்கள், கூடுதல் வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் என்ற முறையில் 1975ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதியிலிருந்து கவனித்து வருகின்றனர். இப்பணி 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதற் கொண்டு வேளாண்மை வருமான வரி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1864ஆம் ஆண்டு நிலவரி வசூல் சட்டத்தின் பல விதிமுறைகளின் கீழ் வரி வசூல் அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளிடம் நிலைப்பெற்றுள்ளன. அதே சமயத்தில், வேளாண்மை வருமான வரித் துறையும் களப்பணி அளவில் தகுந்தவாறு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

(6) மலைத் தோட்டப் பகுதிகளிலிருந்து பெருமளவு வருவாய்க் கிடைக்கிறது. நீண்ட காலமாக ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை வருமான வரியின்கீழ்க் கிடைக்கும் வருமானம் ரூ. 1·5 கோடியிலிருந்து 2·5 கோடிவரையில் இருந்தது. 1978–79 வரி விதிப்பு ஆண்டிலிருந்து ரூ. 10·48 கோடியாக உயர்ந்தது. வேளாண்மை வருமான வரித்துறை அமைக்கப்பட்டதிலிருந்து இதுவே மிக அதிகமான வசூலாகும். இதற்கான காரணங்கள் வருமாறு :—

(i) சம்பந்தப்பட்ட கணக்காண்டில் தேயிலையின் அங்காடி விலை உயர்ந்ததும், அதே ஆண்டில் பல இனங்கள் முடிவு செய்யப்பட்டதும்.

(ii) துறை செயல்படுவதைச் சீரமைப்பதில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி.

1980 ஜூலை 11]

(7) 1978–79-ல் வரி விதிக்கப்பட்டவர்கள் மொத்தம் 71,724 பேர் : அவர்களில் மலைத் தோட்டம் தொடர்பாக வரி விதிக்கப்பட்டவர்கள் 4,263 பேர் ; ஏனையோர் மலைத் தோட்டம் தொடர்பாக அல்லாமல் ஏனைய வகையில் வரி விதிக்கப்பட்டவர்கள். 1979–80ல் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 65,045 ஆகக் குறைந்துள்ளதாகத் தோன்றுகிறது. இதில், மலைத் தோட்டம் தொடர்பாக வரி விதிக்கப்பட்டவர்கள் 4,182 பேர் ஆவர். இந்த குறைவு, வரி விலக்கு வரையறையை உயர்த்தியதால் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. இணக்க வரி விதிக்கப் பெற விருப்பம் தெரிவித்துள்ள வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

	மலைத் தோட்டம்	மலைத் தோட்டம் அல்லாதவை.
(1)	(2)	(3)
1978–79	3,064	60,786
1979–80	3,296	54,404

8. சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள குறைகளைக் களையும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுள், ஒன்று 1977, செப்டம்பர் திங்களில் உதவி ஆணையாளர் (துப்பு அறிதல்) பதவியை ஏற்படுத்தியதாகும். இந்த நியமனத்தினால் நல்ல பலன் கிடைத்தது. மேலும் ஒரு வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர் (துப்பு அறிதல்) பதவியை ஏற்படுத்தவும் வருவாய்த் துறையின் 25–3–1980-ஆம் நாளிட்ட 741-ஆம் எண் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

9. பல்வேறு பயிர்களின் விளைச்சல், அவற்றிற்காகும் செலவு, அவற்றிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம், நிகர வருமானம் ஆகியவற்றைக் காட்டும் வழிமுறைக் குறிப்புகள் வகுக்கப்பட்டு வேளாண்மை வருமான வரியை நியாயமாகவும் முறையாகவும் விதிக்கும் பொருட்டு வரி விதிப்பு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

10. நகர்ப்புற நிலவரி.

தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ், சட்டத்தின் 1(2) பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள நகர்ப்புற நிலங்களைப் பொறுத்தமட்டில் நகர்ப்புற நிலவரி

[1980 ஜூலை 11

செலுத்தத்தக்கதாகும். இந்த வரி, ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு, விடுவரி, மனைவரி முதலியவற்றுக்குப் பதிலாக விதிக்கப்படுகிறது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1963, ஜூலை 1-ஆம் நாளிலிருந்தும், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளிலும், மதுரை மாநகரிலும் 1971, ஜூலை, 1-ஆம் நாளிலிருந்தும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

2. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியபோது, நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு 0.4 சதவீதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது. சென்னை மாநகர எல்லையோரப் பகுதிக்கு இச்சட்டம் நீட்டிக்கப்பட்டு கடைசியாக 1975-ல் திருத்தியமைக்கப்பட்டது. 1971, ஜூலை, 1-ஆம் நாள் அன்றிருந்த அங்காடி மதிப்பு, நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாகப் பின்பற்றப்பட்டது. 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரை என்ற ஒரேபடித்தான் வீதம் 0.7லிருந்து 2.5 சதவீதம் வரை என்ற அளவில் உயர்த்தப்பட்டது. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள், குடியிருப்புக்கல்லாமல் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபாட்டை ஏற்படுத்தி அவற்றுக்கு வெவ்வேறு வரி வீதங்கள் கொண்டுவரப்பட்டன.

3. தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்திற்கு 1975-ல் திருத்தம் கொண்டுவந்ததனால், நகர்ப்புற நிலவரி உயர்வை எதிர்த்து தனிப்பட்டோரும் நிறுவனங்களும் செய்துகொண்ட முறையீடுகளைக் கருதிப்பார்த்த அரசு, வருவாய்த் துறையின் 27—12—1976 நாளிட்ட 2625-ஆம் எண் ஆணையில் பல சலுகைகளை அளித்தது. இந்தச் சலுகைகளைச் சட்ட ரீதியில் கொண்டுவருவதற்காக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்தது. இச்சட்ட முன்வடிவு, கடைசி சட்டமன்றத்தின் ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. கடைசியாக இருந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கலைக்கப்பட்டதால் இச்சட்டம் செல்திறனற்றுப் போனது. சட்டமன்றப் பேரவை நடப்புக் கூட்டத் தொடரில் இச்சட்ட முன்வடிவை மீண்டும் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

4. சிறு தொழில்கள் செலுத்தத்தக்க நகர்ப்புற நிலவரியை 1385 பசலி ஆண்டிலிருந்து 25 சதவீதத்திற்கும் ஏனைய தொழில்களைப் பொறுத்தவரையில் 10 சதவீதத்திற்கும்

1980 ஜூலை 11]

அரசு குறைத்துள்ளது. (வருவாய்த் துறையின் 4—11—1978 நாளிட்ட 2516 ஆம் எண் அரசு ஆணையைக் காண்க.)

5. 1—4—1979 முதல் 31—3—1980 வரையிலான கால அளவில் ரூ. 245.18 இலட்சம் தொகை வசூலிக்கப்பட்டது.

*11. நிலச்சீர்திருத்தங்கள்.

நில உச்சவரம்பு :—

1. அவ்வப்போது திருத்தப்பட்டவாறுள்ள தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ், 5 அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கத்தக்க மொத்த உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் ஆகும். 5 நபர்களுக்கு மேற்பட்டு உள்ள குடும்பத்திற்கு, ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வீதம் அத்தகையதொரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் என்ற மொத்த உச்சவரம்பிற்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் மொத்த உச்சவரம்புக்கு உட்பட்டு, பெண் ஒருவர் குடும்ப உச்சவரம்புக்கு மேலாக 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் வரை ஸ்திரிதன நிலமாக உடைமையில் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார். (ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்பது நல்ல முறையில் பாசனம் பெறும் நிலமான 0·8 ஏக்கரிலிருந்து மோசமான நிலையில் பாசனம் பெறாத நிலமான 4 ஏக்கர்கள் வரை வேறுபடுகிறது) இச்சட்டம் சில விலக்குகளுக்கும், சலுகைகளுக்கும் வகை செய்கிறது.

வேளாண்மை நில உச்சவரம்பு சட்டத்தைச் செயல் படுத்துவதில் 1—6—1980 ஆம் நாள் நிலவரப்படி ஏற்பட்டுள்ள பணி முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

	ஏக்கர்கள்.
(i) உபரியாக அறிக்கையிடப்பட்ட பரப்பு ..	1,19,889
(ii) உடைமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட பரப்பு.	1,15,999
(iii) (அ) வினியோகிக்கப்பட்ட பரப்பு ..	87,123
(ஆ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு வினியோகிக்கப்பட்ட பரப்பு.	4,041

1965 ஆம் ஆண்டு உபரி நிலங்களை விநியோகம் செய்தல் விதிகளின்கீழ் ஒதுக்கம் செய்யப்பட்ட பரப்பு 8,387 ஏக்கர்கள்.

[1980 ஜூலை 11

(iv) பயனடைந்தோர்.	எண்ணிக்கை.	பரப்பு.
		(ஏக்கர்)
(அ) அரிசனங்கள்	20,281	24,382
(ஆ) பழங்குடியினர் ..	20	9
(இ) ஏனையோர்	32,948	50,304
மொத்தம்	53,249	74,695

2. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உபரி நிலங்களுக்குச் செலுத்தத்தக்க தொகை, சில இனங்களில் அத்தகைய நிலத்தின் அங்காடி விலையைக் காட்டிலும் அதிகமாக இருந்தது எனக் கண்டறியப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தத்தக்கத் தொகையை கணக்கிடும் அடிப்படை, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1979) மூலம் மாற்றப்பட்டுள்ளது. இதன்படி நல்ல தரமான நிலத்திற்குச் செலுத்தத்தக்க தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,500-க்கு மேற்படாது. வன, தரிசு நிலங்களுக்குச் செலுத்தத்தக்கதொகையை கணக்கிடுவதற்குரிய தெளிவான விதி முறைகளும் இல்லை. அதே சட்டத்தினால் தெளிவான நடைமுறையும் நிர்ணயிக்கப்பட்டது. திருத்தப்பட்ட நடைமுறை 27—10—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

3. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்கள், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்ற உயரளவு வரை தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை விநியோகம் செய்தல்) விதிகளின்கீழ் நபர் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படலாம்; அதாவது சாதாரண ஏக்கர் கணக்கில் பார்த்தால், உபரி நிலங்கள் 20 ஏக்கர் வரை தகுதியுள்ளவர்களுக்கு ஒப்படை செய்யப்படலாம். ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் என்ற தற்போதைய உயரளவு 1965 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதற்குரிய உயரளவு, 1971 ஆம் ஆண்டில் இருந்து, புன்செய் நிலம் 3 ஏக்கர்களாகவும் அல்லது நன்செய் நிலம் $1\frac{1}{2}$ ஏக்கர்களாகவும் குறைக்கப்பட்டது. அரசு எடுத்துக் கொண்ட பெரும்பாலான உபரி நிலங்கள் புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்களை விட அதிக மதிப்பு வாய்ந்தவையாகும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

நிலச் சீர்திருத்தத் திட்டத்தின் மூலம் அதிக மக்கள் பயனடையும் பொருட்டு, தகுதியுள்ள நபர் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் உபரி நிலங்களின் உயரளவு பரப்பளவு, தற்போதுள்ள ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கரிலிருந்து புன்செய் நிலமாயின் 3 ஏக்கர்கள் அல்லது நன்செய் நிலமாயின் $1\frac{1}{2}$ ஏக்கர்களாகவும் குறைப்பதற்காக அரசு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தையும், தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை விநியோகம் செய்தல்) விதிகளையும் திருத்தம் செய்துள்ளது.

4. தேசிய நெறி முறைக் குறிப்புகளுக்கேற்ப இயன்ற வரையில் சட்டத்தை கொண்டுவரும் வகையில் சட்டத்தைத் திருத்துவது, இதனைச் செயற்படுத்துவதற்கான நடைமுறையை எளிதாக்கி சீர்படுத்துவது, நீதிமன்றம் அரசுக்கு எதிராக அளிக்கும் தீர்ப்புகளினால் ஏற்படக்கூடிய சட்டப்படிக்கான இடர்ப்பாடுகளைச் சமாளிப்பது ஆகியவை பற்றி அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது. 1975 ஆம் ஆண்டு வரையிலான உச்சவரம்புச் சட்டங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் செல்திறனை மறுத்து நீதிமன்றத்தின்முன் வழக்கு தொடர இயலாவண்ணம் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இது குறித்து அவசியமான சட்டத்தை இயற்றுவதற்குரிய சட்ட முன் வடிவு, சட்டமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

5. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலம், திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையின் உபரி நிலங்களை நிர்வகிப்பதற்காக நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலை குத்தகைக்கு வைத்துள்ள நிலங்களும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குத்தகை நிலங்களைப் பொறுத்தமட்டில் குத்தகைக் கால அளவு 30—6—1979 ஆம் நாளிலிருந்து தொடங்கி வெவ்வேறு நாட்களில் முடிவடைகிறது. கரும்புப் பண்ணைக் கழகம் ஆதாயம் அளிக்காததைக் கருத்திற் கொண்டு அதனைத் தொடர்ந்து நடத்த வேண்டியது அவசியம் தானா இல்லையா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பாக முடிவெடுக்கப்படாத நிலையில், குத்தகை நிலங்களுக்குரிய குத்தகைக் கால அளவை குத்தகைக் கால அளவு முடிவடையும் நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பதென அரசு தீர்மானித்தது. தற்போதைய சட்டமன்றக் கூட்டத் தொடரில் தேவையான சட்டம் கொண்டுவரப் படும்.

குத்தகை.

6. குத்தகைச் சீர்திருத்தங்களின்கீழ், குத்தகைக்காரர்களை பதிவு செய்வதற்காக தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதிவேடுகள் சட்டத்தின்கீழ் நட

வடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. பதிவு செய்து கொண்ட குத்தகைக்காரர்களின் எண்ணிக்கை 30—4—1980 ஆம் நாள் நிலவரப்படி 4,35,379 ஆகும்; 6,24,457 ஏக்கர் உள்ளிட்ட தாகும். குத்தகைப் பதிவேடுகளை நாளது வரையில் பதிவு செய்வதற்கான முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒரு வட்டத்திலும் தனிப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஒப்புதல் வழங்கியது.

7. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நியாய ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளுக்கு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்குரிய குறைந்தளவு ஊதியங்கள், குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டன. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு, 19-வது சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, மாயவரம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய ஏழு கிழக்கு வட்டங்களில் செயலில் உள்ளது. இது, சாகுபடி, அறுவடை காலத்தின்போது வேளாண்மைத் தொழிலாளர்கள் செய்யும் பணிக்கான ஊதியங்களை வரையறுக்க வகை செய்கிறது. சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர்களுக்கு இது குறித்து தக்க அதிகாரம் அளிப்பதன் மூலம் நியாய ஊதியங்கள் வழங்குவதைக் கண்டிப்பாக செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

8. 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நியாய ஊதியங்கள் 1974இல் திருத்தி அமைக்கப்பட்டன; விவரம் வருமாறு:—

சாகுபடியின்போது எல்லா வகையான பணி.

ஆண்—நாள் ஒன்றுக்கு ரூ. 6 அல்லது 6 லிட்டர் நெல்லும், ரூ. 2.75 காசும்.

பெண்—நாள் ஒன்றுக்கு 4 ரூபாய் அல்லது 5 லிட்டர் நெல்லும், ரூ. 1.50 காசும்.

விளக்கம்.—எருதுகளையும், கலப்பைகளையும் உழவர்கள் சொந்தமாகக் கொண்டு வருகிறபோது, '' பணி '' என்பதில் உழுதல் என்பது அடங்காது அறுவடை செய்தவர்க்கு அறுவடை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

செய்யப்பட்ட ஒவ்வொரு ஐம்பத்தி நான்கு லிட்டர்கள் நெல்லில், ஆறு லிட்டர்கள் நெல் கொடுக்கும் நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கும்.

9. இச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நியாய ஊதியங்களைத் திருத்தியமைப்பது குறித்த பிரச்சினையை விசாரணை செய்ய, அரசு 1978 ஜூலைத் திங்களில் வருவாய்த்துறை வாரியம், உறுப்பினர், திரு. இராமசந்தர், ஐ.ஏ.எஸ்., அவர்களை, ''ஒரு நபர் குழுவாக'' அமைத்தது. ''ஒரு நபர் குழு'' பின் வருபவைகளைப் பரிந்துரைத்தது:—

உரிய வயது வந்தவர்கள்.

உழுதல், விதைத்தல், நாற்றுக்களைப் பிடுங்குதல், நிலங்களுக்கு வரப்பு வெட்டிப் பராமரித்தல், கால்வாய்களை வெட்டி பராமரித்தல், விதைப்பதற்கும், நாற்று நடுவதற்காகவும் நிலத்தைத் தயார் செய்தல், ஆட்கள் மூலமாக இடு பொருட்களை அல்லது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு;

நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 2·80 வழங்கப்படும் அல்லது
நாள் ஒன்றுக்கு ரூ. 7·20 வழங்கப்படும்.

நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாகக் குறிப்பிடாத ஏனைய வேளாண்மைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு:

நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லுடன் ரூ. 1·80 வழங்கப்படும் அல்லது

நாள் ஒன்றுக்கு ரூ. 5·60 வழங்கப்படும்.

உரிய வயதடையாதவர்கள்.

எல்லா வகை வேளாண்மைத் தொழில்களுக்கு நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லுடன் ரூ. 1·50 வழங்கப்படும் அல்லது

நாள் ஒன்றுக்கு ரூ. 4 வழங்கப்படும்.

''உழுதல்'' என்பதில், எருதுகள், கலப்பைகள் ஆகியவற்றை உழவுத் தொழிலாளர்கள் கொண்டுவருவது என்பது அடங்காது. உழுதலைத் தவிர எல்லா வகைப் பணிகளுக்கும் பணி புரியும் நேரம் நாளொன்றுக்கு ஏழு மணி நேரமாகும்; உழுதலுக்கு நாளொன்றுக்கு ஐந்து மணி நேரமாகும். இர

TRUTH ALONE TRIUMPHS

வில் பணிபுரியும் நபர்களுக்கு 50 சதவீத ஊதியம் கூடுதலாக அளிக்கப்பட வேண்டும். அறுவடை செய்பவர்க்கு அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கும் ஆறு லிட்டர் நெல் வழங்கப்பட வேண்டும் என்ற தற்போதுள்ள முறையே தொடர்ந்து செயலில் இருக்கலாம்.

10. அரசு, பரிவுரையை ஏற்றுக்கொண்டு, அவற்றைச் செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறு திருத்திய ஊதிய அமைப்பு முறை ஆண்களுக்கும், பெண்களுக்கும், ஒரே பணிக்கு அல்லது ஒத்த தன்மையுடைய பணிக்கு சமமான ஊதியம் அளிப்பதை உறுதி செய்கிறது.

11. கிழக்கு தஞ்சாவூரைச் சேர்ந்த வட்டங்களைத் தவிர, ஏனைய பகுதிகளில் குறைந்தளவு ஊதியங்கள் சட்டம் செயலிலுள்ளது. நிலவரி ஆணையாளர், திரு. கா. திரவியம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு ஊதிய வீதங்கள் திருத்தப்பட்டுள்ளன.

12. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றுவதினின்றும் பாதுகாப்பு) சட்டம் (குடியரசுத்தலைவர் சட்டம் 36/1976) அவ்வப்போது திருத்தப்பட்டுள்ளது, 1976, ஜூன் 30 முடிய உள்ள விளைச்சல் ஆண்டிற்கும் (1385 விளைச்சல் ஆண்டு) முந்திய எந்தவொரு விளைச்சல் ஆண்டிற்கும் நிலச் சொந்தக்காரருக்குக் குத்தகையைச் செலுத்தாமல் நிலுவையாக வைத்துள்ள பயிரிடும் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதினின்றும் பாதுகாப்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்படாமல் சேர்ந்து வந்து நிலுவையாகவுள்ள குத்தகைகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு நிலையான குத்தகை நிவாரணம் அளிக்கப்படும் வரையில் 1980 ஜூலை 15 வரை இப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குத்தகை நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டபின் இது ரத்து செய்யப்பட்டது. இதன் மூலம் குத்தகை நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

13. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு புயல்—வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டம், 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்களைப் பாதுகாப்பதற்கும், 1978 ஜூன் 30 முடிய உள்ள விளைச்சல் ஆண்டிற்கும் (1387 விளைச்சல்) குத்தகை செலுத்தப்படாத காரணத்தால் அல்லது முந்தைய விளைச்சல் ஆண்டுகள் தொடர்பான குத்தகை பாக்கியை

1980 ஜுலை 11]

செலுத்தாத காரணத்தினால், அக்குத்தகையை வசூலிப்பதற்குரிய அல்லது அவர்களை வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகளினின்றும் பாதுகாப்பு அளிப்பதற்கும் இயற்றப்பட்டது. அவ்வப்போது இச்சட்டம் திருத்தப்பட்டதன் மூலம் 1980 ஜுலை 15 வரை இப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குத்தகை நிவாரணச் சட்டம் இயற்றப்பட்ட பின் இது ரத்துசெய்யப்பட்டது. இதன் மூலம் குத்தகை நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

14. மேற்சொன்ன 9, 10 பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களில் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை நீட்டித்ததால் குத்தகை நிலுவைகள் சேர்ந்துவிட்டன. குத்தகை நிலுவைகளைச் செலுத்துவதிலிருந்து பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (குத்தகை நிலுவை) நிவாரணச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 15/1980), தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணம்) சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 16/1980) இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டங்களுக்கிணங்க, 30—6—1973க்கு முந்தைய (1382 விளைச்சல் ஆண்டு, அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளுக்கும்) கால அளவு, தொடர்பான குத்தகை நிலுவை எவையேனும் இருந்தால் அவை 30—6—1980 ஆம் நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். குறைக்கப்பட்ட குத்தகை நிலுவை அதாவது 1—7—1973 முதல் 30—6—1976 வரையிலான கால அளவில் (அதாவது 1383 விளைச்சல் ஆண்டிலிருந்து 1385 விளைச்சல் ஆண்டு வரை) ஒவ்வொரு விளைச்சல் ஆண்டிற்கும், குத்தகையில் மூன்றில் ஒரு பகுதி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் மூன்று தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1—7—1973 முதல் 30—6—1978 வரையிலான கால அளவில் (அதாவது 1383 விளைச்சல் ஆண்டிலிருந்து 1387 விளைச்சல் ஆண்டு வரை) ஒவ்வொரு விளைச்சல் ஆண்டிற்கும் குறைக்கப்பட்ட குத்தகை நிலுவையான ஐந்தில் ஒரு பகுதி, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள், மூன்று தவணைகளில் செலுத்தப்பட வேண்டும்.

15. முந்தைய நிலுவைகளையும், குறைக்கப்பட்ட குத்தகையின் முதல் தவணையையும் செலுத்துவதற்காகக் குறிப்பிடப்பட்ட 30—6—1980 வரையிலுள்ள கால அளவு போதுமானதாயில்லை என்பதால் பயிரிடும் குத்தகைக்காரர்கள், குறுகிய காலப் பயிரை அறுவடை செய்து, குத்தகை நிலுவையைச் செலுத்த இயலும் வகையில், இக்கால அளவை 31—12—1980 வரை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

[1980 ஜூலை 11

16. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களில் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம் ஆகியவற்றின் தற்போதுள்ள விதித்துறைகளின் கீழ், பயிரிடும் குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக்காரருக்குச் செலுத்தத்தக்க நியாய குத்தகை நன்செய் நிலங்களைத் தவிர ஏனைய நிலங்களைப் பொறுத்தமட்டில், அந்நிலங்களின் சாதாரணமாகக் கிடைக்கும் மொத்த உற்பத்தியில் 33/13 சதவீதம் என்பதிலிருந்து, நன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களில் சாதாரணமாகக் கிடைக்கும்மொத்த உற்பத்தியில் 40 சதவீதம் என்று உள்ளது. தேசிய கொள்கையின்படி பயிரிடும் குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தவேண்டிய நியாய குத்தகை மொத்த உற்பத்தியில் 25 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்கும் வண்ணம் வரையறுக்கப்படவேண்டும். மொத்த உற்பத்தியில் நியாயக் குத்தகை 25 சதவீதமாக ஆக்கி, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) திருத்தச் சட்டமும், (தமிழ்நாடு சட்டம் 17/1980), தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 18/1980) இயற்றப்பட்டன. கரும்பைப் பொறுத்த மட்டில் இதுவரையில் நியாயக் குத்தகைச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்த விலக்கு இச்சட்டங்களினால் நீக்கப்பட்டதன் மூலம் கரும்புக்குரிய குத்தகை சாதாரண உற்பத்தியில் 25 சதவீதமாக வரையறுக்கப்பட்டது.

குடியிருப்பு.

17. தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1971, ஜூன் 19-ஆம் நாள் அன்று குடியிருப்போராக அல்லதுஉரிமைதாரராக யாதொரு குடியிருப்பை (வீடு) அனுபோகத்தில் வைத்துள்ள உழவுத் தொழிலாளர் உடைமை உரிமையை வழங்குகிறது. இச்சட்டத்தின் கீழ், 1,78,371 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட 98,334 பட்டாக்களும், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 243 பட்டாக்களும், பின்தங்கிய வகுப்பினருக்கு வழங்கப்பட்ட 48,862 பட்டாக்களும், ஏனையோருக்கு வழங்கப்பட்ட 30,932 பட்டாக்களும் அடங்கும். 19—6—1977 அன்று இம்மாநிலத்திலுள்ள மலைத் தோட்டப் பகுதிகளுக்கு இச் சட்டம் நீட்டிக்கப்பட்டது. எனவே, இச்சட்டத்தின் பயன்கள் அப்பகுதிகளிலுள்ள மலைத் தோட்டப் பணி அல்லாத பணிபுரியும் உழவர்கள், மலைத் தோட்டப் பணி அல்லாத பணிபுரியும் உழவுத் தொழிலாளர்கள் ஆகியோருக்கும்,

1980 ஜூலை 11]

குத்தகைதாரர்களாக அல்லது உரிமதாரர்களாக 19-6-1976ஆம் நாளன்று நிலத்தை அனுபோகத்தில் வைத்திருந்தவர்களுக்கும் பொருந்தத்தக்கதாகும். இச்சட்டம், தற்போது, மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் தஞ்சாவூர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள், நகரியங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவை இதில் அடங்காது. இச்சட்டம், மலைத்தோட்டத்திற்கும், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தாது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

18. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு சட்டத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உரிமை வழங்கல்) சட்டம், 1—7—1975 ஆம் நாளன்று குடியிருப்போர்கள் என்றவகையில் அல்லது உரிமதாரர்களாக என்ற வகையில் அவர்கள் அனுபோகத்திலுள்ள குடியிருப்புகள் குறித்த உடைமை உரிமையை அவர்களுக்கு வழங்குகிறது. இச் சட்டம், சென்னை, மதுரை மாநகர்களுடன் யாதொரு நகராட்சி யில் அல்லது நகரியத்தில் உள்ள பகுதிகள் ஆகியவை நீங்கலாக, இம்மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 601 கிராமப்புறக் கைவினைஞர்கள் பட்டா வைப் பெறத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதில் 253 பேர்களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

12. <u>இடைத்தரகர்களை நீக்குதல்.</u>

ஜமீன், இனாம் கீழ்க்குத்தகை, இனாம் எஸ்டேட் ஆகிய வற்றில், உழவர்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள இடைத் தரகர்களை நீக்கியது நாடு சுதந்திரமடைந்த பிறகு அரசு மேற்கொண்ட வேளாண்மை சீர்திருத்தங்களில் முக்கியமான சீர்திருத்தமாகும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு, இக் காரியத் திற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் அண்மை ஆண்டுகளில் இது தொடர்பாக கணிசமான அளவு முன்னேற்றம் காணப் பட்டுள்ளது.

[1980 ஜூலை 11

(அ) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

	எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை	பரப்பு ச. கி. மீட்டர்.
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	5,134	29,931'21
2 31—12—1979 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு.	5,134	29,931·21
3 எஞ்சியுள்ளது. ..	..	..

(ஆ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

1 எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	2,091	4,149·26
2 31—12—1979 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு.	2,046	3,429·83
3 எஞ்சியுள்ளவை	45	719·43

(இ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

1 எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	13,562	4,048·04
2. 31—12—1979 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு.	13,558	4,044·42
3 எஞ்சியுள்ளவை ..	4	3·62

(ஈ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜுலை 11]

	எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	பரப்பு ச. கி. மீட்டர்.
1 எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்தப்பரப்பு.	13	83·20
2 இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு.	13	83·20
3 எஞ்சியுள்ளவை ..	..	..

2. மேலே கூறப்பட்ட தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய எஞ்சிய 45 இனாம் எஸ்டேட்டுகளுள் 40 இனாம் எஸ்டேட்டுகள் குறித்து உயர்நீதி மன்றமும் சிவில் நீதி மன்றங்களும் தடையாணைகளைப் பிறப்பித்துள்ளன. நீதி மன்றங்கள் இத்தடையாணைகளை நீக்கிய பின்னர்தான் இந்த எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

கல்ராயன் ஜாகிர் இனாம்கள்

3. மொத்தம் 671·73 ச.கி.மீ. பரப்புள்ள 140 கிராமங்கள் அடங்கிய எஸ்டேட்டுகள், எஞ்சிய ஐந்து கல்ராயன் ஜாகிர் இனாம்கள் [அதாவது தென் ஆர்காடு மாவட்டத்திலுள்ள, (1) ஆரிய கவுண்டன் ஜாகிர், (2) குரும்ப கவுண்டன் ஜாகிர், (3) சடாயு கவுண்டன் ஜாகிர், சேலம் மாவட்டத்திலுள்ள (1) பெரிய கல்ராயன் மேல்நாடு, (2) பெரிய கல்ராயன் கீழ் நாடு] தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின்கீழ் இனாம் எஸ்டேட்டுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை, 1976 ஆகஸ்ட்டில் ஜாகிர்தாரர்கள் தாக்கல் செய்த வழக்குகள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

4. இந்த ஜாகிர்கள் அனைத்திலும், ஜாகிர்தாரர்கள் கிராமக் கணக்குகளை எதையும் பராமரித்து வரவில்லை. இந்நிலங்களை வைத்திருத்தல் அனுபோக உரிமைக்கு பெற்றிருத்தல் ஆகியவற்றிற்குரிய வரி ரசீது, பட்டா போன்ற ஆதாரம் எதுவும் இல்லை. பழங்குடியினரும், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு பகுதியிலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று பயிரிடுகிறார்கள். எனவே, சிறப்புப் பணியாளர்கள்

[1980 ஜூலை 11

நியமிக்கப்பட்டு, நிலத்தை வைத்திருக்கும் உழவரின் பெயர், நிலத்தின் பரப்பு முதலியவற்றைக் காட்டும் உண்மையான குறிப்புகளையொட்டி கிராம நில பதிவேடுகள் தயாரிக்கப்பட்டன. இப்பகுதிக்குப் பொருந்தும் தீர்வை வீதங்களை உறுதி செய்யும் பொருட்டு நிலங்களைச் சென்று பார்வையிடும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஜாகிர் கிராமங்களில் சிறப்பு நில அளவைக் குழு ஒன்று நில அளவைப் பணிகளை மேற்கொண்டது. இப்பணி 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாள் அன்று முடிக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஆத்தூர் இனாம் எஸ்டேட்டுகளில் உள்ள ஜாகிர் கிராமங்களைப் பொறுத்தவரையில், 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ஆம் நாள் அன்று சரியான கணக்குகள் வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள 2 . பரப்புள்ள 21 ஜாகிர் கிராமங்களைப் பொறுத்தவரையில் சரியான கணக்குகள் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாள் அன்று வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

எத்துணை ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பதும் அவற்றால் எத்தனை பேர் பயனடைந்தனர் என்பதும்.

5. பல்வேறு எஸ்டேட்டு ஒழிப்புச் சட்டங்களைச் சேர்ந்த விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது.

சட்டத்தின் பெயர்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட பட்டாக்களின் கீழ்வரும் பரப்பளவு (ஹெக்டேரில்).
(1)	(2)	(3)
தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/1948).	23,33,798	18,17,105-00

1980 ஜூலை 11]

தமிழ்நாடு 1963—ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் - ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	3,55,382	1,92,845,45-05
தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (நீக்குதல் - ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	6,003	5,605,91-50
தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 30/1963).	5,11,031	3,23,038,52-50
கூடலூர் 1969-ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் - ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969).	6,375	3,307-12-00

எஸ்டேட்டு ஒழிப்புச் சட்டங்களின் செயல்வரம்பிற்கு அப்பால் பட்டா வழங்குதல்.

தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரும், பட்டா வழங்குவதற்குரிய நடைமுறைகள் நிபந்தனைகளைத் தளர்த்தி நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பின்னரும், இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் உள்ள நிலங்களைப் பல ஆண்டுகளாக தங்களது அனுபோகத்தில் வைத்து அனுபவித்து வரும் பலருக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஏனெனில் இச்சட்டத்தின் கீழ் அல்லது அரசின் ஆணைகளின் கீழ் பட்டா வழங்குவதற்குரிய தகுதிகளைப் பெறாத காரணத்தால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. எனவே அறிவிக்கப்பட்ட நாளன்றும் அதற்கு முன்னரும், நிலத்தைத் தொடர்ந்து தங்களது அனுபோகத்தில் வைத்து வந்தவர்களுக்கு பட்டா வழங்குமாறு அரசு 1971-ல் ஆணையிட்டது. எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் செயல் வரம்பிற்கு அப்பாலும்

உரிய தகுதி பெற்றவர்கள் பட்டாவிற்கு விண்ணப்பிக்க இயலும் வகையில் அரசு, விண்ணப்பிப்பதற்கான கால அளவை அவ்வப் போது நீட்டித்தது. கடைசியாக 1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் வரை இக்கால அளவு நீட்டிக்கப்பட்டது.

7. இந்நாளது வரை, 22,527 பேர்கள் பயனடைந்து உள்ளார்கள். இதுவரை ஹெக்டேர் 34,190,73-00க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டத்தில் உள்ள ஜன்மம் எஸ்டேட்டுகளை நீக்குதல்.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டத்தில் அதிகப் பரப்புள்ள நிலங்களை வைத்துள்ள ஜென்மிகள் (Jenmies) தங்களின் கீழ் பயிரிடு உரிமைகளோடு குத்தகைதாரர்களை அனுமதித்துள்ளனர்.

குத்தகை உரிமை, 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகை உரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டு, குத்தகை தாரர்களுக்கு, நிலையான பயிரிடு குத்தகை உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. குத்தகைதாரர்களுக்கு அனுபோக உரிமைகளை அளிக்கும் பொருட்டு, கூடலூர் 1969 ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச் சட்டம் 1970 நவம்பர் 27 ஆம் நாளன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 324·24 ச. கி.மீ. பரப்புள்ள நிலம் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முழுப் பரப்பளவையும் பொறுத்த வரையில் ரயத்துவாரி பட்டா வழங்குவதற்குரிய சட்டப்படிக்கான விசாரணைகள் முடிக்கப் பட்டுள்ளன. ஜன்மம் நிலம் வைத்துள்ள சிலர் தங்களது நிலத்திற்கு இச் சட்டம் பொருந்துவதைக் குறித்து எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த ‘ரிட்’ மனுக்கள் 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. எனினும். அவர்கள் தலைமை நீதி மன்றத்தில் மேல் முறையீடுகளைத் தாக்கல் செய்து தடையாணையைப் பெற்றனர். தலைமைநீதி மன்றத்தில் இம்மனுக்களை விசாரணை செய்வதை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடலூர் வட்டத்தில் தடையாணை பிறப்பிக்கப்படாத பகுதிகளில் நிலவரி ஏற்பாட்டு பணிகள் நடந்தேறி வருகின்றன. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி, 146·17 ச. கி.மீ. பரப்பளவிற்கு நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. 10,619·00 ஹெக்டேர் பரப்பளவிற்கு ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1980 ஜூலை 11]

கூடலூர் 1969 ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தைச் சேர்ந்த 17 ஆம் பிரிவின்கீழ் மலைத் தோட்டக் குத்தகை அளித்தல்.

9. பின்வரும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து பரிந்துரைப்பதற்கு, எஸ்டேட் நிலவரி ஏற்பாட்டு முன்னாள் ஆணையாளரைத் தலைவராகவும், வன-மீன் துறையின் அரசுச் செயலாளரையும், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டு அரசு ஒரு குழுவை அமைத்தது.

(அ) காலக்கெடு முடிந்த குத்தகைகள் நடைமுறையில் இருந்துவரும் குத்தகைகள், ஆகியவற்றையொட்டி, இச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும், மலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை.

(ஆ) எடுத்துக் கொள்ளப்படவேண்டிய மலைத் தோட்டங்களுக்கு இழப்பீடு அளிக்கும் முறை;

(இ) எந்த வரம்பு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகைகள் புதுப்பிக்கப்படவேண்டும் என்பது.

இக்குழு தனது அறிக்கையையும் பரிந்துரைகளையும் அனுப்பியுள்ளது. இது குறித்து வருவாய்த்துறை வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்துவாரி வரிவிதிப்புச் சட்டம்.

10. 1859 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட சில நிலங்கள் நிலவரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டன. இத்தகைய நிலச் சொந்தக்காரர்கள் ஆண்டுத் தீர்வையை போல் 20 மடங்கு தொகை மொத்தமாகச் செலுத்திவிட்டு நிலவரியின்றி அனுபவித்து வந்தனர். ஏனைய சில நிலங்களுக்கு நிலவரி சலுகை வீதத்தில் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. இத்தகைய நிலங்கள் ''தீர்வையில்லா நிலங்கள்'' என்றழைக்கப்படுகின்றன. இத்தகைய நிலங்களுக்கும், ரயத்துவாரி நிலங்களுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில் ரயத்துவாரி நிலங்களின் உரிமையாளர்கள் அந்நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு வரியைச் செலுத்த வேண்டும்; ஆனால் தீர்வையில்லா நிலங்களின் உரிமையாளர்கள் வரி எதுவும் செலுத்த வேண்டாம்; சலுகை வீத வரியை மட்டுமே செலுத்த வேண்டும். இந்நிலங்களை, செஸ்வரி உட்பட ஆண்டு வரி செலுத்தும் சாதாரண ரயத்துவாரி முறையின் கீழ்

கொண்டு வர இயலும் வகையில், மாநிலத்தில் வரி விதிக்கப் பெறாத இந்நிலங்களை வைத்திருக்கும் முறையை நீக்கிவிட 1972 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. மேற்கூறிய நோக்கத்தை எய்துவதற்கு, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்துவாரி வரிவிதிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம், I ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, இம்மாநிலத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் 11,075.31 ஏக்கர் பரப்பளவையுடைய தீர்வை விதிக்கப் பெறாத நிலங்களுக்கும், இச்சட்டத்தில் II ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு "மோகினி இனாம் நிலங்கள்" எனப்படும், 5,845.72 ஏக்கர் பரப்பளவையுடைய நிலங்களுக்கும் பொருந்தும். மோகினி இனாம் நிலங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், மாயூரம் சீர்காழி, நன்னிலம் ஆகிய வட்டங்களில் உள்ளன. இவை சமய நிறுவனங்களுக்கு உரியனவாக இருந்தன. இந்நிலங்களைப் பொறுத்தவரையில் நிலவரியானது, முன்னாள் அரசர்களால் ரொக்கமானியமாக அல்லது படியாகக் கொடுக்கப்பட்டது. இதற்கு ஈடாக அப்போதிருந்து ஆங்கிலேய அரசு அவர்களுக்கு இந்நிலங்களை ஒப்படை செய்தது.

11. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வரியிலா நிலங்கள் மீது ரயத்துவாரி வரிவிதிப்புச் சட்டம், 1973 ஆம் ஆண்டு 31 ஆம் சட்டமாக வெளியிடப்பட்டு, 1979 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் வரிகள் இயற்றப்பட்டுள்ளன, விவர அட்டவணையைத் திருத்துவது குறித்த கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வரி வருவாய்ப் பணிகள்.

இம்மாநிலத்தின் சில பகுதிகள் முதலாம் நில அளவைப் பணியானது, காலம் பல கடந்து நாளடைவில் நின்று போய் விட்டதாலும் தற்போதுள்ள நில அளவைப் பொருட்களைக் கொண்டு இப்பணியை தொடர்ந்து செய்ய இயலாததாலும் இத்தகைய பகுதிகளில் மறு நில அளவை மேற்கொள்ளப் பட்டது. இதனைத் தொடர்ந்து பதிவேடுகளை நாளது தேதி வரை கொண்டு வந்து பராமரித்து வரத்தக்க முறையில் பேணிவரவும் வரி வருவாய் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. கோபிச்செட்டிபாளையம், ஈரோடு ஆகிய வட்டங்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர் வட்டத்திலும் இப்பணி முடிவடைந்துள்ளது, தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் இப்பணி நடைபெற்று வருகிறது. 246 கிராமங்களில் 1,416,46 சதுர

1980 ஜூலை 11]

கிலோ மீட்டர் பரப்பில் இப்பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள 32 கிராமங்களில் 277.80 சதுர கிலோமீட்டர் பகுதிகளில் இப்பணி 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதியன்று முடிவடைந்து விட்டது. 1979 ஆம் ஆண்டு சூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் மதுரை மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில் 15 கிராமங்களில் 372-96 சதுர கிலோ மீட்டர் பகுதியில் தொடர்ந்து செய்யப்படும் வரி வருவாய் தொடர் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி நடைபெற்று வருகிறது. இதைப் போன்று 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் நீலகிரி மாவட்டத்தில் 2,007.48 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள பகுதியில் இப்பணி தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

நாளது தேதி வரை பதிவேடுகளை புதுப்பிக்கும் திட்டம்.

13. வணிகவரிகள்—அறநிலையத்துறையின் 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 16 ஆம் நாளிட்ட 525 ஆம் எண்ணுள்ள அரசாணையில், சென்னை, நீலகிரி, பெரியார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களும், சமீபத்தில் நில அளவை செய்யப்பட்ட பகுதிகளும், கல்ராயன் மலைப்பகுதிகளும், நிலங்களை உட்பிரிவு படுத்தும் திட்டத்தின் கீழ் நில அளவை செய்யப்பட்ட நிலங்களும் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் ஏறக்குறைய 30,000 சதுர மைல் பகுதியில் நாளது வரையில் பதிவேடுகளை புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதி அளித்துள்ளது. பன்னிரெண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 28 வட்டங்களில் 1979 ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

1980 ஆம் ஆண்டு சூன் திங்கள் 1 ஆம் நாள் வரை செய்யப்பட்ட பணிகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது: —

முடிக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை	727
முடிக்கப்பட்ட மொத்த பரப்பளவு .. ச. கி. மீ	4,318.15.
பார்வையிடப்பட்ட நில அளவை கற்களின் எண்ணிக்கை ..	4,82,545
புதுப்பிக்கப்பட்ட நில அளவை கற்களின் எண்ணிக்கை ..	4,36,873

[1980 ஜூலை 11

அளவிடப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை		5,87,191
அளவிடப்பட்ட நில விபரங்களின் எண்ணிக்கை	..	41,708
பார்வைக்கு வந்த நிலத் தகராறுகளின் எண்ணிக்கை	..	472
வருவாய்த் துறைக்கு புதிய கணக்குகள் தரப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை ..	..	69

இத்திட்டம் உழவர்களுக்கும், அரசுக்கும் பயன்தரத்தக்கதாகும். தனது நிலத்தின் மீது தனக்குள்ள உடைமை, உரிமை, நாற்புற எல்லைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் உழவர்களுக்கு இது சிறந்த பயனுள்ளதாக அமையும். இத்திட்டத்தின் கீழ், நாளது வரையிலான பதிவுகளுடன் அடிப்படை நில ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. உழவர்கள் ஒவ்வொருவருக்கும் பட்டா புத்தகங்களும் வழங்கப்பட்டன. இத்திட்டம் தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

தாராபுரம் மறு நில அளவை.

14. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள, பிற வட்டங்களுடன் தாராபுரம் வட்டத்தில் மறு நில அளவைப் பணி முதலாவதாக 1958 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இம்மாநிலம் முழுவதும் மறு நில அளவை செய்யப்பட வேண்டுமென்ற கொள்கை முடிவு எடுக்கப்படாததால், தாராபுரம வட்டத்தில் மட்டும் 160 சதுர மைல் பரப்பளவில் பணி முடிவடையாமல் தடைப்பட்டது. எனினும், தாராபுரம் வட்டத்தின் பெரும்பகுதி கீழ் பவானித் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால், இவ்வட்டத்தின் மறு நில அளவைப் பணியைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசரத்தையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் தாராபுரம் வட்டத்தைச் சேர்ந்த 22 கிராமங்களில் மறு நில அளவைப் பணி மேற் கொள்ளப்பட்டு நடை பெற்று வருகிறது. களப்பணி விரைவில் முடிவடையும்.

நகர்ப்புற நில உச்சவரம்பு.

15. கடந்த பத்தாண்டு காலத்திற்கும் மேலாகவே நகர்ப்புற மக்கள் தொகை பல்வேறு காரணங்களால், அதிகரித்துள்ளது. தொழிற்சாலைகளும்; பிற நிறுவனங்களும் ஏற்பட்டு, அவை

1980 ஜூலை 11]

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியதால் கிராமப்புற மக்கள் நகரங்களில் குடியேறியது இதன் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். சிறிய, நடுத்தர நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்ததை விட, பெருநகரம், மிகுந்த பரப்புடைய நகரங்களில் மக்கள் தொகை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் பொருளாதார சமூகச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. குடிசைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாததாலும், சுகாதாரச் சீர்கேடுகள் வளர்ந்துவிட்டன. எனவே, சிலரிடம் நிலங்கள் குவிந்துகிடப்பதை தடுப்பதற்கும், நில விற்பனையில் ஊரக வாணிபத்தைத் தடுப்பதற்கும், அரிதாக கிடைக்க பெறும் நகர்ப்பகுதிகளின் பயனையும், அதனை முறையாக மேம்படுத்துவதையும் முறைப்படுத்துவது வெகுவாக உணரப்பட்டது.

(2) நகர்ப்பகுதிகளிலுள்ள நிலங்களின் மதிப்பு அதிக அளவு உயர்ந்துவிட்டதால், அரிய நகர்ப்புற நிலங்களை ஊக வாணிபம் செய்வதும் அந்நிலங்களைக் கணக்கில் காட்டாமல் சட்டத்திற்குப் புறம்பாக வைத்து இருப்பதற்கும் ஏதுவாகிறது. நகர்ப்புறச் சொத்துக்களை நியாயமான அளவிற்கும் அதிகமாக வைத்திருக்கும் தனி நபர் உடைமைக்கும், உரிமைக்கும் உச்ச வரம்பு விதிப்பது இதற்குக் காணவேண்டிய தீர்வுகளில் ஒன்றாகும். நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு விதித்து, வீடுகளின் அளவினை வரையறுத்து நகர்ப்புறமாக்கத்தக்க நிலங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்குவது இதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலங்கள் (உச்சவரம்பும், முறைப்படுத்தலும்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.

(3) இச்சட்டத்தில் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன, அவையாவன :—

(i) ஒரு நபர் (தனியொருவர்), ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது ஒரு சங்கம் அல்லது தனி நபர்கள் வைத்துள்ள காலி நிலங்களின் மேல் உச்சவரம்பு விதித்தல் ;

(ii) இனி கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளின் தரைப் பரப்பின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(iii) நகர்புறச் சொத்துக்கள் உரிமை மாற்றத்தை முறைப் படுத்தல்.

[1980 ஜூலை 11

(4) இச்சட்டத்தினை செயற்படுத்துகையில், பொதுமக்களால் உணரப்படும் கஷ்டங்கள் குறித்து ஏராளமான முறையீடுகள் வந்துள்ளன. அவற்றைக் கருதிப் பார்த்து, குடியரசுத் தலைவரின் சட்டம் 34/1976-ஐ ரத்து செய்து, அரசு, 1978-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும், முறைப்படுத்தலும்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றியது. நகர்ப்புற நிலங்களை பொதுவுடைமை ஆக்கும் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு செயல்படும் அதே நேரத்தில், பழைய சட்டத்தின் விதித்துறைகளினால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் அகற்ற வேண்டும்.

(5) சட்டத்தின் விதித்துறைகளைத் தளர்த்தியதன் காரணமாக உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் பெறுவதில் தொல்லை நீங்கி இதனால் கட்டிடம் கட்டும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

(6) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நிலச் சட்டத்தின் (உச்சவரம்பும், முறைப்படுத்தலும்) 1976-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. ஆனால் இச்சட்டத்தின் 14, 15, 20 (3), 27, 48-ம் பிரிவுகள் 1978-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாளன்று செயலுக்கு வந்தன. இச்சட்டத்தின் 20 (3)-ம் பிரிவு, 14/1979-ம் தமிழ்நாடு சட்டத்தால் திருத்தப்பட்டு 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

(7) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில புதிய சட்டத்தில் (உச்சவரம்பும், முறைப்படுத்தலும்) சென்னை நகர அமைப்புப் பகுதியின் பரப்பு 1,400 கிலோ மீட்டரிலிருந்து 575 கிலோ மீட்டராகவும், ஏனைய நகரமைப்புப் பகுதிகளைப் பொறுத்தவரையில் எல்லையோரப் பகுதிகள் நீங்கலாக, முதல் பரப்பளவில் சுமார் மூன்றில் ஒரு பங்காகவும் குறைக்கப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

(8) பின்வரும் நகரமைப்புப் பகுதிகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதிகளிலும், இச்சட்டம் செயலில், உள்ளது:—

	நகர்ப்புறப் பகுதியின் பெயர்.	மாநகராட்சி.	நகராட்சி.	ஊராட்சி வருவாய் கிராமங்கள்.	பேரூராட்சி.	தென் இரயில்வே நிர்வாகம்.	நகரியம்.	பாளையம்.	மொத்தம்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1	சென்னை	1	4	65	18	..	4	1	93
2	மதுரை	1	..	9	..	..	1	..	11
3	கோயம்புத்தூர்	..	..	2	15	..	..	1	18
4	திருச்சிராப்பள்ளி	..	..	3	5	..	1	..	9
5	சேலம்	..	..	2	18	..	..	..	20
6	திருநெல்வேலி	..	..	3	8	..	1	..	12

9. ஒவ்வொரு நகர்ப்புறப் பகுதியிலும் ஒரு நபருடைய ஒரு குடும்பத்தினுடைய, ஒரு தொழில் நிறுவனத்தினுடைய உச்சவரம்பு நிலம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு 24ஆம் சட்டம்.

நகர்ப்புறப் பகுதி.	வகை.	தனி நபர்.	குடும்பம்	தொழில் நிறுவனம்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(சதுர	மீட்டர்.)	
சென்னை	I	500	2,000	2,000
மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் ..	II	1,500	3,000	3,000
திருநெல்வேலி ..	III	2,000	4,000	4,000

10. ஒரு நபரைப் பொறுத்தவரையில், "குடும்பம்" என்பது அந்நபர் நேர்விற்கேற்ப அந்நபரின் மனைவியையும் அல்லது கணவனும், அவர்களுடைய திருமணமாகாத உரிய வயதடையாத பிள்ளைகளையும் எனப் பொருள்படும். கணவன், மனைவி, உரிய வயதடையாத பிள்ளைகள் இருவர் அடங்கிய ஒவ்வொரு குடும்பமும், சென்னை நகர்ப்புறப் பகுதியில் ஒவ்வொருவருக்கும் 500 சதுர மீட்டர் என்ற வகையில் அதாவது 2,000 சதுர மீட்டருக்குக் காலி நிலத்தை வைத்திருக்கலாம். சென்னை நகர்ப்புறப் பகுதியில் இரண்டு உறுப்பினர்கள் அடங்கிய குடும்பம் ஒன்றின் உச்சவரம்பு நிலப்பரப்பு 1,000 சதுர மீட்டரும் மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குடும்பம் ஒன்றின் உச்சவரம்பு நிலப்பரப்பு 1,500 சதுர மீட்டரும் ஆகும். ஏனைய நகர்ப்புறப் பகுதிகளில் இரண்டு அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்கள் அடங்கிய குடும்பம் ஒன்றின் உச்சவரம்பு நிலப்பரப்பு மேலுள்ள விவர அறிக்கையின் (4) பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது. உரிய வயதடையாதவர்கள் அவரவர்க்குரிய உச்சவரம்பு வரையில் காலி நிலம் வைத்துக் கொள்வதற்குத் தகுதியுடையவர்களாவர். பிரிவினையாகாத இந்து குடும்பத்தைப் போலவே, உரிய வயது வந்த மகன்கள் திருமணமாகாத உரிய வயது வந்த பெண்களும் அறிவிக்கப்பட்ட நாளன்று சொத்தின் பெயரளவு பங்கினை, வைத்துக் கொள்வதற்குத் தகுதியுடையவர்களாவர். பிரிவினையாகாத இந்து குடும்பத்திற்குக் கிடைக்கின்ற சலுகைகள் கிறிஸ்துவ, முகமதிய சமூகத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

11. விதிமுறைப்படி, கட்டிடப் பரப்பு ஒரே படித்தான அளவில் 500 சதுர மீட்டர் இருக்க அனுமதிக்கப்படுகிறது. 1976-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3-ம் நாளுக்கு முன்னதாக குடியிருப்புப் பகுதியுடன் கட்டப்பட்ட அல்லது கட்டப்பட்டு வருகின்றதும், குடியிருப்புப் பகுதியுடன் இனி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதும், தகுதி வாய்ந்த அதிகாரியினால் வரை படத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுமான யாதொரு கட்டிடத்திற்குக் கூடுதலாக அக்கட்டிடத்தைச் சார்ந்து 500 சதுர மீட்டர் நிலப்பரப்பு கூடுதலாக இருப்பதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

12. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு முறைப்படுத்தலும், விதிகளைச் சேர்ந்த 3 ஆம் விதியின்படி, 100 சதுர மீட்டர், 250 சதுர மீட்டர், 300 சதுர மீட்டர் அளவுள்ள பரப்பு, முறையே ஒரு குடும்பத்திற்கு, இரண்டு குடும்பங்களுக்கு, ஐந்து குடும்பங்களுக்குப் பயன்படுவதாக இருப்பின் அவற்றை நடைபாதையாக வைத்துக் கொள்ளவும் அனுமதியளிக்கபபட்டுள்ளது.

1980 ஜூலை 11]

13. எந்த நிலங்களுக்கு 1976-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3-ம் நாளுக்கு முன்னர் மனைகளாகப் பிரிக்க வரை படங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டனவோ அந்த நிலங்கள் வைத்துள்ள நபர்கள், அதிகமாகவுள்ள தங்களுடைய காலி நிலத்தைப் பிறருக்கு விற்பனை செய்யும் பொருட்டு, வைத்துக் கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

14. வேளாண் விளை நிலங்களுக்கு இச்சட்டத்தின் வரம் பினின்று முழு விலக்களிக்கப்பட்டுள்ளது. நிலங்கள் பெருந் திட் டத்தில் வேளாண்மைக்கு அல்லாத நிலங்களாகக் காட்டப்பட்டு, ஆனால், வேளாண்மை காரியங்களுக்காகவே தொடர்ந்து பயன் படுத்தப்பட்டு வந்தால், இச்சட்டம் அவற்றிற்குப் பொருந்தாது. ஆனால், வேளாண்மை யல்லாத பிற காரியத்திற்கு அவற்றைப் பயன்படுத்தும்போது இச்சட்டம் அவற்றிற்குப் பொருந்தும்.

15. கிரயப்பத்திரம் செய்து கொண்ட இந்நிலங்கள் காலி நிலங்களா அல்லது வேளாண்மைக் காரியங்களுக்காக முக்கிய மாகப் பயன்படுத்தப்படுகின்ற நிலங்களா என்பதைச் சரிபார்க்க, தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கு இயலும் பொருட்டு, பதிவு செய்வதற்காக வருகிற பத்திரங்களின் அனைத்து நேர்விலும், பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள், 1908-ம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு முன்னர் நிலத்தின் உடைமையை மாற்றுபவரும் மாற்றப் பெறு பவர்களும் XIII படிவத்தில் இருபடிகளில் உறுதி மொழி எழுதிக் கொடுக்கும்படி வற்புறுத்தப்பட வேண்டும்.

16. உச்சவரம்புக்கும், மிகையாக காலி நிலம் வைத்துள்ள நபர் எவரும், 7-ம் பிரிவில் சொல்லியுள்ளவாறு விவர அறிக்கை ஒன்றைக் கொடுத்தும், அவரிடமுள்ள மிகை காலி நிலம் தொடர்பாக இச்சட்டத்தின் 11-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்படும் வரையில், அந்நிலத் தையோ அல்லது அதன் பகுதியையோ விற்பனை, அடமானம், அன்பளிப்பு, குத்தகை அல்லது வேறு வகையில் உடைமை மாற்றம் செய்யக்கூடாது.

17. இச்சட்டம் செயல்படத் தொடங்கும்போது, உச்ச வரம்புக்கும் மிகையாக காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொரு நபரும் அப்பகுதியின் மீது அதிகார வரம்பினைக் கொண்டுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். இச்சட்டத்தின் 7-ம் பிரிவின் படி விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ம் தேதியுடன் முடிவடைந்து பொது மக்கள் கேட்டுக் கொண்டதன்பேரிலும், வர்த்தக சபை வேண்டு

[1980 ஜூலை 11

கோளின் பேரிலும், இது (1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாள் வரையில்) ஒரு மாத காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் நிலவரப்படி, 1976-ம் ஆண்டு சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழும், 1978-ம் ஆண்டு சட்டத்தின் 7 (1) பிரிவின் கீழும் 14,119 விவர அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 1978-ம் ஆண்டு சட்டத்தின் விதிமுறைக்கிணங்க, 10,669 விவர அறிக்கைகள் உச்சவரம்புக்குள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3,450 விவர அறிக்கைகள் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் சரி பார்க்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தாக்கல் செய்த விவர அறிக்கைகளின் படி கையகப்படுத்துவதற்கு உள்ள உபரி காலி நிலத்தின் பரப்பளவு 3,530 ஹெக்டேர், 60 ஏர், 55 சதுர மீட்டர் ஆகும். பொருத்தமான அதிகாரிகள் விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருகின்றனர். 100 ஹெக்டேர், 64 ஏர், 28 சதுர மீட்டர் பரப்புள்ள உபரி காலி நிலம் உள்ளதாக அறிவிக்கும் பொருட்டு 112 விவர அறிக்கைகள் மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலும் இது குறித்து அவர்கள் 11 (1) பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். 25 ஹெக்டேர், 9 ஏர், 30 சதுர மீட்டர் பரப்புள்ள காலி நிலம் சம்பந்தப்படுகிற 24 இனங்களில் சட்டத்தின் 11 (3) பிரிவின்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

18. நகர்புறப் பகுதி ஒவ்வொன்றிலும் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களுக்குக் கொடுக்கத்தக்க தொகை வருமாறு :—

நகர்ப்புறப் பகுதி.	வகை.	கொடுக்கத்தக்க தொகை (உயரளவு).
(1)	(2)	(3)
சென்னை	I	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 50-க்கு மேற்படாத தொகை
மதுரை, கோயம்புத்தூர் திருச்சி, சேலம்.	II	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 25-க்கு மேற்படாத தொகை.
திருநெல்வேலி	III	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படாத தொகை.

[1980 ஜூலை 11

19. நகர்ப்புறப்பகுதியில் நிலம் அமைந்துள்ள இடத்தையும், நிலத்தின் பொதுவான பயனையும், முறையான நகர்ப்புற வளர்ச்சிக்கு நகர்புறப்பகுதியின் நிலத்தின் பயன்பாட்டையும் ஏனைய பொருத்தமான கூறுகளையும் கருதிப் பார்த்து, இது காரியத்திற்காக இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு நகர்ப்புற பகுதியும் பல்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட உயரளவு விலை வீதங்களுக்குட்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு சதுர மீட்டர் காலி நிலத்தின் விலை நிர்ணயம் செய்யப்படும்.

20. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி நகர்புறப் பகுதிகளை மண்டலங்களாகப் பிரிப்பதற்கும், தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப் படுத்தல்) சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஒவ்வொரு மண்டலத்திலும் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்குக் கொடுக்கத் தக்க தொகையை நிர்ணயம் செய்வதற்காகவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகர்ப்புறப்பகுதிகள் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

21. தொகை பெறுவதற்குள்ள உரிமை தொடர்பாக 12 பிரிவின்கீழும் தற்போதுள்ள கட்டிடத்தை இடிப்பது அல்லது மாற்றியமைப்பது தொடர்பாக 29 பிரிவின்கீழும் தகுதி வாய்ந்த அதிகாரி பிறப்பிக்கின்ற ஆணை ஒன்றினால் பாதிக்கப்படுகின்ற யாதொரு நபர், நகர்ப்புற நில மேல் முறையீட்டு நடுவர் மன்றத்திடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்பேரில், மேற்சொன்ன பிரிவுகளின்கீழ், உயர்நீதி மன்றத்திற்கு மறு விசாரணை மனு ஒன்றைச் செய்து கொள்ளலாம். ஏனைய இனங்களைப் பொறுத்தவரையில், மேல்முறையீடு அதிகாரியிடம் அதாவது நகர்ப்புற நில உச்சவரம்புக்குப் பொறுப்பு வகிக்கிற வருவாய்த்துறை வாரிய உறுப்பினரிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

22. தொகையில் இருபத்தைந்து சதவீதம் அல்லது இருபத்தைந்தாயிரம் ரூபாய் இவற்றில் எது குறைவான தொகையோ அத்தொகையை ரொக்கமாக உடனடியாகச் செலுத்தவேண்டும்; எஞ்சிய தொகையை 15 ஆண்டு கால அளவில், சம ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம். இவ்வாறு செலுத்தப்படும் தொகையுடன் அரசு எந்நாளன்று காலி நிலத்தைக் கையகப் படுத்தியதாக கருதப்படுகிறதோ அந்நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு ஆறு சதவீதத்தில் வட்டியும் செலுத்தப்படவேண்டும்.

1980 ஜூலை 11]

23. இச்சட்டத்தின் விதித்துறைகள் மைய — மாநில அரசுகள், விரசு நிறுவனங்கள், அட்டவணையில் கண்டுள்ள வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், சமய-அறக்கட்டளை நிறுவனங்கள் போன்றவை வைத்திருக்கும் நிலங்களுக்குப் பொருந்தா.

24. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு 24 ஆம் எண் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (3) உட்பிரிவைச் சேர்ந்த விதித்துறைகளை நிறைவேற்றுவதில் நடைமுறை இடர்ப்பாடுகள் உள்ளன. இவ்விடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு மேற்சொன்ன 20 ஆம் பிரிவின் (3) உட்பிரிவிற்குப் பதிலாக, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்பபுற நிலத் (உச்சவரம்பும் முறைப்படுத்தலும்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1979) புதிய உட்பிரிவு அமைத்துக் கொள்ளப்பட்டது. பொது அறக்கட்டளை அல்லது சமயப் பொறுப்புக்கழகம் (வஃக்ப் நிறுவனம் உட்பட) எதுவும், மிகையாகவுள்ள காலி இடத்தை, விற்பனை, அடைமானம், அன்பளிப்பு, குத்தகை அல்லது வேறு வகையில் உடைமை மாற்றம் செய்யக்கூடாது என்று இத்திருத்தச் சட்டம் வகை செய்கிறது. அத்தகைய மிகை நிலத்தை அல்லது அதன் ஒரு பகுதியை அவ்வாறு உடைமை மாற்றம் செய்தால் அது செல்திறன் அற்றுப்போகும். அத்தகைய பொது அறக் கட்டளை அல்லது சமயப் பொறுப்புக் கழகம் (வஃக்ப் நிறுவனம் உட்பட) வைத்திருக்கும் நிலம் அறக்கட்டளை அல்லது சமயக் காரியங்களுக்குத் தேவைப்படுவதும், பயன் படுத்தப்படுவதும் அற்றுப் போகுமானால், மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றுக்குப் பொருந்தும் என்பதோடு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் 111 ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க மிகையாகவுள்ள காலி நிலம் அரசால் கையகப்படுத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

25. பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டும், எவரேனும் ஒரு நபருக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத இடர்களின் அடிப்படையிலும் விலக்களிப்பதற்கு அரசுக்கு அதிகாரமுண்டு. மாநில அரசு அல்லது மத்திய அரசுடன் அல்லது மாநில அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டின்கீழ் வரும் எந்தவொரு நிறுவனம் அல்லது கழகம் அல்லது எந்தவொரு கல்வி அல்லது மருத்துவ நிறுவனத்துடன் மிகையாகவுள்ள காலி நிலத்தை அல்லது அதன் ஒரு பகுதியை விற்பனை செய்ய, இச்சட்டம் செயலுக்கு வருவதற்கு அதாவது 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3 ஆம் நாளுக்கு முன்னர், ஒரு நபர் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்து, அது உண்மையான நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக அரசு மனநிறைவடைந்தால், அத்தகைய காலி நிலத்திற்கு அரசு விலக்களிக்கலாம்.

1980 ஜூலை 11]

26. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்காக வீடுகள் கட்டித் தருவதற்கான திட்டத்திற்கு ஒப்புதலைப் பெறுவதற்கும், மேற்சொன்ன காரியத்திற்காக மிகையாகவுள்ள காலி நிலத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கான விதித்துறைகளையும் நிபந்தனைகளையும் வரையறுப்பதற்குமான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

27. தொழில் நிறுவனங்களின் காரியத்திற்காக அல்லது தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்குக் குடியிருப்பு இடவசதி அளிப்பதற்காக ஒருவருக்கு இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட உபரி நிலங்களை ஒப்படை செய்வதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பொது நலனுக்காக நிலங்களை விற்பதற்கும் அரசுக்கு உரிமையுண்டு.

28. நில உச்சவரம்பிற்குள் உட்பட்டுள்ள காலி நிலத்தையும் நகர்ப்புறச் சொத்தையும் உடைமை மாற்றம் செய்வதற்கான சிக்கலான நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு, பழைய சட்டத்தில் 25, 26, 27 ஆம் பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன. புதிய சட்டத்தின் 27 வது பிரிவில் விற்பனை, அன்பளிப்பு, மாற்றிகொடுத்தல், குத்தகை, சுவாதீனம், அடைமானம், திருப்பி ஒப்படைத்தல், ஒப்பந்தம் (செட்டில் மென்டு இறுதியாவணம்) அல்லது வேறு எந்த வகையில் காலி நிலம் உடைமை மாற்றம் செய்யப்படுவதைப் பொறுத்த மட்டில் உடைமை, உரிமை மாற்றுபவரும் மாற்றப் பெறுபவரும் தம் வசம் உள்ள காலி நிலத்தின் மொத்தப்பரப்பு குறித்து பதிவு செய்யும் அதிகாரியின் முன்னர் XIII ஆம் படிவத்தில், இருபடிகளில் விவர அறிக்கையைத் தாக்கல் செய்தால் ஆவணம் பதிவு செய்யப்படவேண்டுமென்று வகை செய்யப்பட்டுள்ளது.

14. பொது.

1. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், கிராம அதிகாரிகள், கிராமப் பணியாளர்கள் அடங்கிய வருவாய் நிர்வாகத்தின் கிராமப் பணியாளரமைப்பு, கிராம அளவில் நிலவரி வசூலிப்பதற்கு ஒரு முக்கியப் பணியாளர் அமைப்பாகும். இப்பணியாளர் அமைப்பை மாற்றியமைப்பது; முனைந்து செயல்படுத்துவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

2. கிராம அதிகாரிகள், முழு நேர அரசுப் பணியாளர்கள் அல்லர். மூன்றாம் சம்பளக் குழுவின் பரிந்துரையில் அடிப்படையில், மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டு

வருகிறது. 1—4—1978 ஆம் நாள் நிலவரப்படி பல்வேறு வகையான கிராம அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மதிப்பூதியங்களின் விவரம் வருமாறு:—

	திங்கள் ஒன்றுக்கு ரூ.
கிராமத் தலைவர்	125
கர்ணம்	127
கிராமக் காவலர்	115
கிராமப் பணியாளர்	115

இம்மதிப்பூதியத் தொகை, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் மூன்று முறை அதாவது 1—4—1979, 1—10—1979, 1—2—1980 ஆகிய நாட்களில் ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழுள்ளவர்களுக்கு ஒரே சீராக திங்களொன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்தில் மதிப்பூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழுள்ளவர்களுக்கும் 1—5—1980 முதற்கொண்டு மேலும் ரூ. 5 அதிகமாக அளிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. முதன் முறையாக அரசு, இம்மாநிலத்திலுள்ள கிராம அதிகாரிகளுக்கு 1980—81 ஆம் ஆண்டில், 36.5 இலட்சம் ரூபாய் மொத்த செலவில் உலோகத்தாலான முத்திரைகள் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கவிருக்கிறது.

4. 1979—80 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள 13 துணை வட்டங்களை வட்டங்களாகத் தரம் உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:—

தொடர் எண்ணும், மாவட்டமும்		தரம் உயர்த்தப்பட்ட துணை வட்டங்கள்.
(1)		(2)
1. திருநெல்வேலி	..	சாத்தான்குளம்.
2. இராமநாதபுரம்	..	திருச்சுழி.
3. இராமநாதபுரம்	..	கமுதி.
4. இராமநாதபுரம்		தேவகோட்டை.
5. மதுரை ..	..	நத்தம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

தொடர் எண்ணும் மாவட்டமும்		தரம் உயர்த்தப் பட்ட துணை வட்டங்கள்
(1)		(2)
6. புதுக்கோட்டை	..	ஆவுடையார்கோவில்.
7. தஞ்சாவூர்		திருவிடைமருதூர்.
8. தஞ்சாவூர்		வேதாரண்யம்.
9. தஞ்சாவூர்		திருவையாறு
10. தென் ஆர்க்காடு	..	திட்டக்குடி.
11. கோயம்புத்தூர்		மேட்டுப்பாளையம்.
12. கோயம்புத்தூர்		பெருந்துறை.
13. தருமபுரி		பொன்னகரம்.

இப்புதிய வட்டங்கள் 4—7—1979-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. எஞ்சியுள்ள 16 துணை வட்டங்களையும் வட்டங்களாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. வருவாய் ஆய்வாளரின் பொறுப்புகளை மேலும் சிறப்பிக்கும் வகையில் பிர்க்காக்களில் அதிகார வரம்பை மறு சீரமைக்க அரசு தீர்மானித்துள்ளது. 1979 ஜூலையில் 250 புதிய பிர்க்காக்கள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்புதிய பிர்க்காக்கள் செயல்படத் தொடங்கிவிட்டன. 1980-81-ல் கூடுதலாக 73 பிர்க்காக்களுக்கு ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

5. இம்மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில், பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலக குடியிருப்புகளை படிப்படியாகக் கட்டித் தருவதற்கான பெரிய திட்டமொன்றையும் அரசு தொடங்கியது. அதன் விவரம் வருமாறு :—

1978—79—200 அலுவலகம்-குடியிருப்புகள்.

1979—80—150 அலுவலகம்-குடியிருப்புகள்.

1980–81—150 அலுவலகம்-குடியிருப்புகள்.

இவற்றில் 168 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவற்றில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. புதிய பிர்க்காக்களில் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால், 1980–81-ம் ஆண்டுகளில் பிர்க்கா குடியிருப்புகளை அதிக அளவில் கட்டுவதற்காக இத்திட்டத்தை விரிவுபடுத்தவும் அரசு கருதி வருகிறது.

6. 1979–80-ஆம் ஆண்டில், பின்வரும் வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்தது :—

1.	கூடலூர் ..	நீலகிரி மாவட்டம்.
2.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர் மாவட்டம்.
3.	சிவகெங்கை	இராமநாதபுரம் மாவட்டம்.
4.	திருநெல்வேலி	திருநெல்வேலி மாவட்டம்.

7. அதே ஆண்டில், பின்வரும் ஐந்து வட்ட அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு அனுமதி அளித்தது :—

1.	பேராவூரணி	தஞ்சாவூர் மாவட்டம்.
2.	காரைக்குடி	இராமநாதபுரம் மாவட்டம்.
3.	விருதுநகர்	
4.	பாலக்கோடு	தருமபுரி மாவட்டம்.
5.	எழும்பூர்-நுங்கம்பாக்கம்	சென்னை மாவட்டம்.

8. 1980–81 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 10 இலட்சத்திற்கு அனுமதியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட வருவாய்க் கோட்ட வட்ட, அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் ரூ. 10 இலட்சம் அனுமதிக்கப்படும். மேலும் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வருவாய்க் கோட்ட அலுவலகங்களின் தற்போதுள்ள கட்டிடங்களை மேம்படுத்துவதற்கும் ரூ. 10 இலட்சம் அனுமதிக்கப்படும். 1980–81-ம் ஆண்டில் வருவாய்க் கோட்டம் மற்றும் வட்ட அலுவலகங்களுக்குக் குடிநீர் வழங்கல், கழிப்பிட வசதி முதலியவை உட்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூ. 10 இலட்சம் அனுமதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

1980 ஜூலை 11]

9. தக்காவிக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல்.—தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் தக்காவிக் கடன் திட்டங்களின் கீழ் அவர்கள் திரும்பச் செலுத்த வேண்டிய வேளாண்மைக் கடன்கள் மற்றும் வட்டிச் சுமைகளிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டி அவ்வப்போது முறையீடுகள் செய்து கொண்டனர். 1977-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக உயர் அதிகாரக் குழு ஒன்றை அரசு நியமித்தது. அந்த உயர் அதிகாரக் குழு 1979- மே மாதத்தில் தனது அறிக்கையை அளித்தது. அரசு, உயர் அதிகாரக் குழுவின் பொருத்தமான பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, தக்காவி கடன் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு வகைக் கடன்களைப் பொறுத்தவரையில் நேர்விற்கேற்ப அசல் அல்லது வட்டியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய 1979 மே மாதத்தில் தேவையான உத்திரவுகளைப் பிறப்பித்தது. இந்த ஆணைகளைச் செயல்படுத்தியதன் விளைவாக ரூ. 5,42,09,826 கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் 8,51,680 விவசாயிகள் பயனடைந்தனர்.

விவசாயிகளுடைய பிரச்சினையை மேலும் ஆராய்ந்து, அரசு அளித்துள்ள தக்காவி கடன்களின் பாக்கியாக உள்ள ரூபாய் 21 கோடியில், ரூபாய் 16 கோடி நிலுவையை ரத்து செய்துவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

10 வருவாய்த்துறைப் பணியாளர்களுக்கு வீட்டுவசதியளித்தல்—வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக மாவட்டங்களிலுள்ள வருவாய்த் துறையின் பல்வேறு பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகப் படிப்படியான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. 1979–80 ஆம் ஆண்டில், பின்வரும் இடங்களில் வட்டாட்சியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக அரசு அனுமதியளித்துள்ளது:—

1. திருச்சி, இராமநாதபுரம் மாவட்டம்
2. கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்
3. தேவகோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்
4. திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம்
5. திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்
6. வேதாரண்யம், தஞ்சாவூர் மாவட்டம்
7. மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்
8. பெருந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம்
9. பொன்னகரம், தருமபுரி மாவட்டம்

10. சாத்தான்குளம், திருநெல்வேலி மாவட்டம்
11. நத்தம், மதுரை மாவட்டம்
12. ஆவுடையார்கோயில், புதுக்கோட்டை மாவட்டம்
13. திட்டக்குடி, தென்னாற்காடு மாவட்டம்.

இந்தக் குடியிருப்புகள், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) மூலமாகக் கட்டப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

1980–81 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் பின்வரும் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகள் :

1. புதுக்கோட்டை
2. தருமபுரி

வருவாய்க்கோட்ட அலுவலர் குடியிருப்புகள் :

1. உசிலம்பட்டி
2. புதுக்கோட்டை
3. நாகர்கோயில்

வட்டாட்சியர் குடியிருப்புகள் :

1. உளுந்தூர்பேட்டை
2. திருவாரூர்
3. பேராவூரணி
4. கும்மிடிப்பூண்டி
5. உத்திரமேரூர்
6. பண்ருட்டி
7. புதுக்கோட்டை
8. காரைக்குடி
9. இராஜபாளையம்
10. விருதுநகர்
11. பரலக்கோடு
12. கோத்தகிரி
13. ஒட்டப்பிடாரம்
14. சத்தியமங்கலம்.

1980–81 ஆம் ஆண்டில் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் முதல் தடவையாக 40 தலைமையிட துணை வட்டாட்சியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

1980 ஜூலை 11]

மேலும் 48 கிராமங்களில் (பிர்க்காத் தலைமையிடங்கள் நீங்கலாக) மொத்தம் ரூ. 12 இலட்சம் செலவில் கிராமச் சாவடிகள் கட்டுவதற்கான புதிய திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்புதல் அளிக்க உள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி யொதுக்கம் ரூ. 6 இலட்சம் ஆகும்.

11. மாவட்டங்களில் வருவாய்த்துறை அலுவலகங்களின் பணிகளை முன்னிலும் சிறப்புற நடத்த கூடுதல் பணியாளர் களுக்கு ஒப்புதல் அளித்தல்.

1979–80 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களுக்கும் வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக துணை வட்டாட்சியர் பதவிகள் 122-க்கு அரசு ஒப்புதல் அளித் துள்ளது. அத்துடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல் வேறு நோக்கங்களுக்காகப் பின்வரும் பணியாளர்களுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது:

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், கோயம் புத்தூர், கூடுதல் பணியாளர்கள்:

(1) மூன்று இளநிலை உதவியாளர்கள்.

(2) நான்கு உதவியாளர்கள்.

2. வீடுகட்டுதல்—கடன் வழங்குதல்:

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு உதவியாளர் (ஏழு மாவட்டங்களுக்கு).

3. வட்ட அலுவலகங்களில் மது பெர்மிட்டுகள் வழங்கு தல்:

16 உதவியாளர்கள்.

160 இளநிலை உதவியாளர்கள்.

4. முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் பணித் தொடர் பாக:

40 உதவியாளர்கள்.

47 இளநிலை உதவியாளர்கள்.

5. சென்னை மாநகர் வட்ட அலுவலகங்களில் (ஐந்து வட்டங்கள்) சிமிட்டி அனுமதிச் சீட்டுகள் (பெர்மிட்டுகள் வழங்கு தல்) ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உதவியாளர்.

1980–81 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் வேறு வருவாய் அலுவலகங்களுக்கு வேலை பளுவின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கூடுதல் பணியாளர்கள் நியமிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

[1980 ஜூலை 11

1. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஒரு காசாளர் (16 பதவிகள்).

2. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் கூடுதல் தட்டச்சர்கள்.

3. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சுத்த நகல் பிரிவில் கூடுதல் பணியாளர்கள்.

4. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சுத்த நகல் பிரிவில் கூடுதல் பணியாளர்கள்.

5. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடுதல் இளநிலை உதவியாளர்களும் தட்டச்சர்களும்.

6. வருவாய் நிர்வாகத்தினை சீர்திருத்தும் பொருட்டு கூடுதல் கண்காணிப்பு பதவிகள் (20 துணை வட்டாட்சியர்).

7. ஒவ்வொரு வட்ட அலுவலகத்திலும் (துணை வட்ட அலுவலகம் உட்பட) ஒரு கூடுதல் தட்டச்சர் பதவி (161 தட்டச்சர் பதவிகள்).

8. ஒவ்வொரு கோட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு தட்டச்சர் அல்லது சுருக்கெழுத்து தட்டச்சர் பதவி.

9. வட்ட அலுவலகங்களுக்கும் கோட்ட அலுவலகங்களுக்கும் பதிவேடு எழுத்தர் பதவிகள்.

12. மாவட்ட வருவாய்த்துறை நிர்வாகங்கள் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களது அலுவலகங்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் வட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவை செயல்படும் விதம் பற்றி ஆய்வு செய்து, பொது மக்களின் நலனைக் கருதி, பிரச்சனைகளை விரைந்து தீர்க்கும் வகையில் இந்த அலுவலகங்களின் திறமையை மேம்படுத்துவதற்குரிய செயல்முறைகளைத் தெரிவிப்பதற்காக, அரசு 1979 ஏப்ரலில் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ்., அவர்களை தனி நபர் குழுவாக நியமித்தது. மாவட்டங்களை ஒருமுறை சுற்றிப் பார்த்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனும், மக்கள் தலைவர்களுடனும் விவாதித்த பின்னர், திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாளன்று அறிக்கை ஒன்று அளித்தார். அவரது அறிக்கை மாநில வருவாய்த்துறை நிர்வாகத்தின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிய 184 பரிந்துரைகளைக் கொண்டதாகும். இப்பரிந்துரைகளில் 27 பரிந்துரைகளைப் பொருத்தவரையில் அரசு ஆணைகள் பிறப்பித்தது. எஞ்சியுள்ள பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் அவை ஒன்க்கு மேற்பட்ட அரசுத் துறைகளுடன் சம்பந்தப்பட்டிருப் ப

1980 ஜூலை 11]

நூல், அவைகளுக்கு விரிவாக கருத்து அளிக்குமாறு வருவாய்த் துறை வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வாரியத்தின் அறிக்கை வரப் பெற்றதும் எஞ்சியுள்ள பரிந்துரைகள் குறித்து, அரசு முடிவு எடுத்து தனி நபர் குழுவின் பரிந்துரைகளை முடிந்தவரையில் விரைந்து செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்.

இணைப்பு II.

[361 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.

மானியக் கோரிக்கை எண். 4.

பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்.

நிர்வாகம்.

பொது விற்பனை வரியும் ஏனைய வணிக வரிகளும் மாநில அரசின் முக்கியமான வரி வருவாய் வாயிலாக அமைந்துள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இவ்வருவாய் ஆதாரத்தின் மூலம் 388 கோடி ரூபாய் கிடைத்தது. இது, 1978-79 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் தொகையைக் காட்டிலும் 69 கோடி ரூபாய் கூடுதலாகும்.

2. வணிக வரிகள் துறை வரி சம்பந்தப்பட்ட பின்வரும் எட்டு சட்டங்களை நிர்வகித்து வருகிறது—

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

2. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

3. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

4. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

5. தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரிச் சட்டம்.

6. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

7. தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

8. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம்.

3. வணிகவரித்துறை கடந்த 5 ஆண்டுகளில் வசூலித்த தொகை, செலவு செய்த தொகை குறித்த விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு. (1)	வருவாய். (2)	செலவு. (3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1975–76	2,28,23·93	4,12·57
1976–77	2,55,58·04	4,66·87
1977–78	2,67,21·25	5,18·92
1978–79	3,19,40·05	5,58·57
1979–80	3,88,27·94	5,06·05
		(1980 சனவரி வரை)

வரி வருவாய்த் தொகையில் கணிசமான உயர்வுக்கு அரசு வரி வீதங்களை உயர்த்தியதைக் காட்டிலும் தற்போதைய பணவீக்கப் போக்கே முக்கியமானதொரு காரணமாகும்.

4. அரசு, விற்பனை வரிச் சட்டத்தையும் விதிகளையும் அவ்வப்போது பரிசீலனை செய்து வருகிறது. வரி வருவாய் திரட்டுவதை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் வர்த்தகர்களுடைய நலன், மாநிலத்தின் மொத்த பொருளாதார நிலை ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. விற்பனை வரிச் சட்டம், ஒழுங்குமுறை விதிகளில் வரி விதிக்கப்பட்டவர்களின் இடையூறுகளைக் குறைத்தல், வரி வசூல் பணியை மேம்படுத்தல், ஊழல் நடைமுறையைத் தடுத்தல் என்ற மூன்று நோக்கங்களைக் கருத்தில் கொண்டு வரி

1980 ஜூலை 11]

விதிப்பு, வசூல், மேல் முறையீடு தொடர்பான நடைமுறையை விரிவாகப் பரிசீலனை செய்யும் பொருட்டு, 1977ஆம் ஆண்டு திரு. எஸ். ஆர். கைவார், ஐ.சி.எஸ். (ஓய்வு) தலைமையில் தமிழ்நாடு விற்பனை வரிக்குழு ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் நாள் அன்று தனது அறிக்கையை அளித்தது. அவ்வறிக்கையில், தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம்-விதிகள் குறித்த திருத்தங்கள், நிர்வாக உத்தரவுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட 116 பரிந்துரைகள் அடங்கியுள்ளன. அவற்றில் 84 பரிந்துரைகளின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன; நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவையிலுள்ள 32 பரிந்துரைகள் செயல் படுத்துவதற்காக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்டு வருகிற பரிந்துரைகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(i) வரி இணக்கத்திற்காக 10 நிலைகளில் வரி விதிக்கப்படுவதை குறைந்த வரி வீதங்களுடன் 5 நிலைகளாகக் குறைக்க இக்குழு பரிந்துரைத்தது. அதனை அரசு ஏற்று விற்பனை வரிச் சட்டம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு 33-ஆம் சட்டத்தால் திருத்தியது.

(ii) சோதனைச் சாவடிகளில் லாரிகளை நிறுத்திவைத்து ஆவணங்களைச் சோதனையிடுதல் முதலிய நடைமுறைகளை இது தொடர்பான நபர்களின் இன்னலைத் தவிர்க்கவும் ஊழல்களைக் களையவும், ஒழுங்குபடுத்துவதற்கான குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1979 ஆம் ஆண்டு 47 வது சட்டத்தின் மூலம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 42, 43, 44 மற்றும் 45 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டுள்ளன.

(iii) விற்பனை விவரக் கணக்கைப் பொறுத்து வரித் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற குழுவின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டத்தில் 4-சி, 4-டி ஆம் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(iv) ஆக்கப் பொருட்களுக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் வரிச் சலுகைகளை மூலப் பொருட்களுக்கும் அளிக்குமாறு குழு அளித்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இது தொடர்பான திருத்தங்களை விரைவில் செய்யக் கருதியுள்ளது.

(v) <u>தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகள்.</u>

(1) தற்காலிகமாக வரி விதிக்கப்படுபவர் தனக்கு வரி விதிக்கப்பட்ட வரித் தொகையைத் திருத்தியமைக்குமாறு கோருவதற்கு இயலும் வகையிலும்,

[1980 ஜூலை 11

(2) வரி விதிக்கப்படுபவர் வைத்து வரும் கணக்குகளுக் கேற்ப வரி விதிக்கும் வகையில் வரி விதிப்புச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு வரி விதிப்பு நடைமுறைகளைத் தளர்த்தவும்,

(3) 18 ஆம் விதியின்கீழ் உள்ள வரி விதிப்பு நடைமுறை யைத் தவிர்க்கவும் ; திருத்தப்பட்டுள்ளன.

(vi) பதிவு செய்து கொள்ளும் வணிகர்களுக்கு நடை முறையில் ஏற்படும் இன்னல்களைக் களையும் பொருட்டு பதிவு செய்யும் நடைமுறையைத் தளர்த்தவும் பரிந்துரைக்கப்பட்டிருப் பதை யொட்டி தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் விரி வான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

(vii) குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வணிகர் களுக்குக் கீழ்க்கண்டவற்றில் ஏற்படும் இன்னல்களைக் களையும் பொருட்டு வருவாய் வாரியம் (விற்பனை வரி) நிர்வாக உத்தரவுகள் பிறப்பித்துள்ளது :—

(1) வணிகர்களைப் பதிவு செய்தல் (விதிகள் திருத்தப் பட்டது அன்றி சட்டத்தைச் செயல்படுத்தும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.)

(2) பட்டயக் கணக்கர்களின் சான்றிதழ்களை ஏற்றுக் கொள்ளுதல் ;

(3) வரி விதிப்பு முறைகள் ;

(4) மேல்முறையீட்டு உதவி ஆணையாளரின் ஆணை களின் பேரில் விரைவான நடவடிக்கை எடுத்தல் ;

(5) வரி இணக்கமும் அபராதம் விதித்தலும் ;

(6) ஆய்வு செய்தல், சோதனையிடுதல், கைப்பற்றுதல் ;

(7) சோதனைச் சாவடிகளில் ஆய்வு செய்தல் ; மற்றும்

(8) கிடங்குகளில் சேமித்து வைத்தல்.

5. வணிகவரித் துறையில் அதிகரித்து வரும் பொறுப்புகளுக்கு ஈடு கொடுத்துச் செவ்வனே நிறைவேற்றவும் வணிகர்களுக்குப் பரிவோடு உதவவும் வேண்டி, வணிக வரித் துறையின் நிர்வாக அமைப்பைச் சீரமைக்கப் பின்வரும் நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) பணிச் சுமை மிகுதியாக உள்ளவையும், எளிதில் செயல் பட இயலாததாக உள்ளவையுமான வாணிக வரிப் பிரிவுகளில் அதிகார எல்லையினைக் குறைத்து, அதன் நிர்வாகத்தினை

1980 ஜூலை 11]

மிகுந்த திறம்பட்டதாகவும், எளிதில் செயல்பட இயலத்தக்கதாகவும் உருவாக்கும் வகையில், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய வணிக வரிப் பிரிவுகள் மூன்றும் பிரிக்கப்பட்டு, வேலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட மேலும் 3 புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னைப் பிரிவிலுள்ள பணிச் சுமையைக் குறைக்கும் வகையில், கூடுதலாக துணை ஆணையாளர் பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

(2) கூட்டாக இணைந்த முறையில் செயல்படுவதற்கு இயலும் வண்ணம், வணிக வரித் துறையினைச் சேர்ந்த துப்பறியும் பிரிவு, ஆய்வு செய்யும் பிரிவு, கேளிக்கை வரி ஏய்ப்பைக் கண்டறியும் பறக்கும் படைப் பிரிவு, ஏனைய படைப் பிரிவுகள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து "சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவு" எனப்படும் புதிய அமைப்பு ஒன்று வணிக வரித் துறையில் ஏற்படுத்தப்பட்டது. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்ட துணை ஆணையாளர் (செயல்படுத்துதல்) பதவி ஒன்றும், மதுரையைத் தலைமை இடமாகக் கொண்ட துணை ஆணையாளர் (செயல்படுத்துதல்) பதவி ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. வணிக வரித் துறை ஆணையாளரின் நேரடிப் பொறுப்பில் "சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவு" செயல்பட்டு வருகிறது. முன்னர், இத்துறையின் பல பிரிவுகள் வணிகர்களைச் சோதனையிட்டதற்கு பதிலாக, "சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவு" ஏற்படுத்தப்பட்டதால் ஒரே அமைப்பு சோதனையிடுமாறு செய்யப்பட்டுள்ளது.

6. வணிக வரித்துறை அலுவலகங்களுக்கு வருகைதரும் வணிகர்களுக்குப் போதிய வசதியளிப்பதற்கும், இத்துறையின் பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் போதிய இடவசதி அளிப்பதற்கும், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் துறை அதிகாரிகளுக்காக கட்டிடங்களைக் கட்டுவதும், இயன்ற வரையில் எல்லா அலுவலகங்களையும் ஒரே பகுதியில் அமைப்பதும் அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஏற்கெனவே, இத்துறைக்கான அலுவலகக் கட்டிடங்கள், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம், கடலூர், தருமபுரி, சேலம், நீலகிரி, வேலூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, விருதுநகர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. இத்துறையின் பெரிய அலுவலகக் கட்டிடங்களை சென்னையிலும், மதுரையிலும் கட்டுவதற்கு இசைவளிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணி விரைவில் மேற்கொள்ளப்படும். II-ம் பகுதித் திட்டமாக, 1980—81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், கரூர், தேனி, மாயூரம், பட்டுக்கோட்டை, விழுப்புரம், சிதம்பரம் ஆகிய இடங்களில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. தற்போதுள்ள 75 சோதனைச் சாவடிகளில், ஏழு முக்கிய, சோதனைச் சாவடிகளாகும். ஏழு முக்கிய சோதனைச் சாவடிகளும் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. இதர சோதனைச் சாவடிகளுக்கு, படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் அரசு கட்டிடங்களில் நிலையான இடவசதி அளிக்க வகை செய்வது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆறு இடங்களில் சோதனைச் சாவடிகளுக்குரிய கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்புகளுக்கு அரசு ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது. IIஆம் பகுதி திட்டமாக, 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணத்தட்டை என்ற இடத்தில் சோதனைச் சாவடி கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. வணிக வரித் துறை அதிகாரிகளோடு தொலைபேசி மூலம் வணிகர்கள் தொடர்புகொள்ள இயலும் வகையில், தொலைபேசி வசதிகள் போதிய அளவிற்குச் செய்து தரப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில், கும்பகோணம், கடலூர், காஞ்சீபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், உதக மண்டலம், விருதுநகர், தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள வணிக வரித்துறை அலுவலகங்களில் தொலைபேசி வசதிகள் அதிகப்படுத்தப்படும். இதற்காக, 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தின், ஆம் பகுதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. வருவாய் வாரியத்தில் (வணிகவரி) உள்ள புள்ளி விவரச் சேகரிப்புப் பிரிவு, இன்றியமையாப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் முக்கியப் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறது. இப்பணியில், அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் மிகவும் பயனுள்ள பணியாற்றி வருகிறது. வணிக வரிகள் துறையைப் பொறுத்த மட்டில் புள்ளிவிவரத் தொகுப்பு நிலையத்தின், செயல் வரம்பை மேலும் விரிவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வரிவிதிப்புப் பணியினை எளிதாக்குவதற்கு, பல்வேறு வரி விதிப்பு, ஆய்வு அலுவலகங்களுக்கு 279 கணக்கெடு மின்பொறிகளை அரசு அண்மையில் வழங்கியுள்ளது.

10. இம்மாநிலத்தில், விற்பனை வரி நிர்வாகத்தினைப் பொறுத்தமட்டில், வணிகர்களுக்கும், அரசுக்கும் இடையில் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கருத்துப்பரிமாற்றங்கள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்லாமலேயே விளங்கும் இதற்கான சரியான அமைப்பு தமிழ்நாடு விற்பனை வரி ஆலோசனைக் குழு ஆகும். இதில், வணிகம், தொழில் சம்பந்தப்பட்ட பிரிவினர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது அரசு இக்குழுவினை மீண்டும் அமைத்துள்ளது. அதன் முதல் கூட்டம் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாளன்று நடந்தது. உரிய நடவடிக்கை எடுப்பதற்காக, வணிகர்கள் இக்

1980 ஜூலை 11]

குழுவின் மூலம் தங்களது கருத்துக்களை அரசுக்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டங்களில் சுமுகமான வரி நிர்வாகத்தினை நடத்துவதற்கு வசதி செய்து கொடுப்பதற்காக, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையின் கீழ் மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

11. 1979–80 ஆம் ஆண்டில், 7, 60-வது பிரிவின் (1) உட்பிரிவிற்குத் திருத்தங்களும், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) முதலாவது விவர அட்டவணைக்குத் திருத்தங்களும் 1979 ஆம் ஆண்டு 33-வது சட்டத்தினால் செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில், கீழ்க்கண்ட பதிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

இனம் 1B—

"டெலிபிரிண்டர்" (தந்தி முறை மாநிலத்தில் முதல் 15 சத தட்டச்சுப் பொறி) அதன் கட்ட விற்பனையில் வீதம், பாகங்கள், துணைப்பாகங்கள்.)

இனம் 79A—

கையினால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகள். (மாநிலத்தில் முதல் கட்ட 2 சத விற்பனையில் வீதம்.)

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959), 1979 ஆம் ஆண்டு 47 ஆம் எண் சட்டத்தினால் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன :—

புதிய பிரிவுகளைச் சேர்த்துக்கொள்ளுதல் :—

4-C, 4-D, 12 (A), 16 (B), ஆகிய பிரிவுகளும் 42-வது பிரிவைச் சேர்ந்த 8 (A) உட்பிரிவும் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 47 வது சட்டத்தின் மூலமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

உட்பிரிவுகளை அமைத்துக்கொள்ளுதல் :—மூலச் சட்டத்தின் 12-வது பிரிவில் 3-வது உட்பிரிவுக்குப் பதிலாக, (3), (4), (5) ஆகிய உட்பிரிவுகள் அமைத்துக்கொள்ளப்பட்டன. 13-வது பிரிவின் (5) உட்பிரிவு விட்டுவிடப்பட்டுள்ளது. 16-வது பிரிவு திருத்தப்பட்டுள்ளது. (3) உட்பிரிவு 40-வது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. மூலச் சட்டத்தின் 42, 43, 44, 45 ஆகிய பிரிவுகள், 1979 ஆம் ஆண்டு 47-வது சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் (a) 86-வது இனத்தில், (2) பத்தியில் உள்ள பதிவுக்குப் பதிலாக, கீழ்க்கண்ட பதிவு அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது :—

"முழுவதும் அல்லது ஒரு பகுதி கம்பளிநூலினால் செய்யப்பட்ட பொருள்கள் நீங்கலாக பின்னப்பட்ட உள்ளாடைப் பொருட்கள்".

(b) 103-வது இனத்தில் (2) பத்தியில் (a) பகுதி விட்டு விடப்பட்டுள்ளது. (b), (c) பகுதிகள் முறையே (a), (b) பகுதிகளாக மீண்டும் எழுத்திடப்பட்டுள்ளது ;

(c) 120-வது இனத்தில், (2) பத்தியில் உள்ள பதிவுக்குப் பதிலாக, "முழுவதும் அல்லது ஒரு பகுதி கம்பளி நூலினால் பின்னப்பட்ட உள்ளாடைப் பொருட்கள்" என்ற பதிவு அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாவது விவர அட்டவணையில் 18-வது இனத்திற்குப் பின்னர் கீழ்க்கண்ட இனமும், பதிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன :

இனம் 18A—

பருத்தி நூலுக்கு அதாவது பருத்தி/விஸ்கோஸ் அல்லது பருத்தி/பாலினாசிக்கு எடையில் 162/3 சதவீதத்திற்கு மேற்படாத செல்லுலோஸ் அல்லாத இழையுடன் சேர்ந்த பருத்தி இழை (1979ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாளிலிருந்து).	மாநிலத்தில் முதல்கட்ட விற்பனையில்.	3 சதவீதம்.

12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-வது பிரிவின்கீழ் 1979—80 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட வரி விலக்குகளும், வரி குறைப்புகளும் வருமாறு :—

வரி விலக்குகள் :—

(1) சேலம், ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் ஆசிரம அறக்கட்டளை மருந்தகத்திற்கு எந்த வணிகராலும் விற்பனை செய்யும் மருந்துகள், அறிவியல் சாதனங்கள், ஏனையப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனை.

1980 ஜூலை 11]

(2) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து எந்த வணிகராலும் செய்யப்படும் கோழி விற்பனை.

(3) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் இராஜபாளையம், மலையாடிப் பட்டி கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மன்றத்தினர் தயாரித்த பொருட்களின் விற்பனைத் தொடர்பான மொத்த விற்பனைத் தொகை.

(4) 13—6—1979 ஆம் நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்கு தேவஸ்தானங்களால் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகிற பிரசாதம், ஏனைய உபரிப் பொருள்களின் விற்பனை.

(5) சென்னை-1, திருவாளர்கள் ஏ. ஆர். அண்ட் பிரதர்ஸ் நிறுவனத்தால் சென்னை பாலமந்திருக்கு (அனாதைக் குழந்தை மருத்துவமனை) செய்த மர நாற்காலிகள், சோடனை அலங் கரிப்பு, வெட்டுமாப்பலகைகள் ஆகியவற்றின் விற்பனை.

(6) பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்கள் 29—8—1979 ஆம் நாளிலிருந்து விற்பனை செய்துவரும் கறிவேப்பிலை விற் பனை தொடர்பான மொத்த விற்பனைத் தொகை.

(7) சென்னை-9, கான்டீன் ஸ்டோர்ஸ் துறை, தென் மண்டலம் (இந்திய ராணுவம்) தலைமைப் பொறியாளர் பொறுப் பில் உள்ள கான்டீன் ஸ்டோர்ஸ் பாதுகாப்பு பணி மதிப்பிடு கள், பாதுகாப்புக் கணக்குகள் துறையிலிருந்து சம்பளம் பெறும் சிவில் பணியாளர்களுக்கு செய்யும் பொருட்களின் விற்பனை.

(8) தமிழ்நாட்டில் 'கேர்' நிறுவனம் 1—1—1975 ஆம் நாளிலிருந்து மேற்கொண்ட நிவாரணப் பணிகளின் மூலம் கிடைத்த காலி டின்களின் விற்பனை.

(9) கும்பகோணம், புனித மேரி தொழிற் பள்ளியில் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் பயிற்சிக் காலத்தில்போது தயாரித்தது மேசை, நாற்காலி முதலியவற்றை அப்பள்ளி செய்த விற்பனை தொடர்பான மொத்த வியாபாரத் தொகை.

(10) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கல்லக்குடி, தமிழ் நாடு இந்திய சிமிட்டி ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு மையம் தயாரித்த சிமிட்டியை அதிகார வரம்பைக் கொண்டுள்ள வரி மதிப்பீட்டு அதிகாரிக்கு அந்நிறுவனம் மாதாந்திர விவரக் கணக்குகளை அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு செய்யும் விற்பனை.

[1980 ஜூலை 11

(11) தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு நிறுவனம் 1—4—1976 ஆம் நாளிலிருந்து உழவர்களுக்கு விற்பனை செய்த உலோகத்தாலான தானிய சேமிப்புத் தொட்டிகளின் விற்பனை.

(12) கேரள அரசின் செங்கோட்டையில், உள்ள வெட்டு மரக் கிடங்கின் மூலமாகச் செய்த வெட்டு மர விற்பனை குறித்த கூடுதல் விற்பனை வரிக்கு விலக்களித்தல்.

(13) வந்தவாசி, காவிரி நகர் ஆகிய இடங்களில் உள்ள பனை ஓலைப் பொருள்கள் பயிற்சி நிலையங்கள் செய்த பனை ஓலைப் பொருள்களின் விற்பனை குறித்த விற்பனை வரிக்கு விலக்களித்தல்.

(14) ஒருங்கிணைந்த கிராமக் கூட்டுறவு வேளாண்மை கடன் உதவிச் சங்கங்களுக்குச் செய்யும் விற்பனைக்கு விலக்களிப்பு.

(15) சென்னை புற்றுநோய் நிறுவனத்திற்குச் செய்யப்பட்ட குளிர் பதனச் சாதனங்களின் விற்பனைக்கு வரி விலக்களிப்பு.

வரிக்குறைப்பு :

(1) மின் அழுத்த மாற்றி இயந்திரத்திற்குப் போடும் எண்ணெயின் விற்பனை குறித்துவரி வீதம் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனைச் வரி சட்டத்தின் 8 ஆவது பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்திற்கு 1—8—1979 ஆம் நாளிலிருந்து குறைக்கப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்வரி வீதம் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை, இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனம் தயாரித்த பாலிஸ்டர் ஸ்டேப்பில் இழை குறித்து விற்பனை வரி வீதத்தில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் பல்முனை வரியான 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் $2\frac{1}{2}$ சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

(3) மிதிவண்டிகள் (Bycycles) குறித்து மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவீதம் 12—9—1979 ஆம் நாளிலிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(4) ஸ்டேபில் நூலிழையிலிருந்து தயாரித்த பின்னப்பட்ட உள்ளாடைப் பொருட்களின் விற்பனை பல மாநிலங்களுக்கிடையே நடைபெற்றால் அப்போது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதம் 4 சதவீதத்திலிருந்து $2\frac{1}{2}$ சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

1980 ஜூலை 11]

புதிய சலுகைகள் :

1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க 3—7—1980லிருந்து வரி வீதங்களில் கீழ்க் கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன :—

(1) பூட்டு, சீப்பு, எழுது பொருட்கள், பேனா வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், துத்தநாக முலாமிட்ட இரும்பு வாளிகள், பெருங்காயம், சூடம், மெழுகு வர்த்தி, நோட்டுப் புத்தகங்கள் ஆகிய பொருட்கள் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனைவரி விதிப் பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

(2) எளியவர்கள் பயன்படுத்தும் குடிசைத் தொழில்கள் உற்பத்தி செய்யும் எலுமிச்சை புல் எண்ணெய், லாரெல் எண்ணெய், அரிக்கன் விளக்கு, காற்றமுத்தம் செய்யப்படாத மண்ணெண்ணெய் அடுப்பு ஆகியவை களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

(3) சைக்கிள் மற்றும் சைக்கிள் உறுப்புகள் மீதின் மாநில விற்பனை வரி வீதம் 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது.

(4) வெளி மாநிலங்களுக்கு விற்பனையாகும் சைக்கிள் உறுப்புகள் விற்பனை மீது மத்திய விற்பனை வரி வீதம் 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

2. வணிகர் நலன் பற்றி ஆராய்ந்து தக்க பரிந்துரைகளைத் தருவதற்காக, 'வணிகர் நலக் குழு' ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

13. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச் சட்டம்.

1975–76 முதல் 1979–80 வரையிலான காலஅளவில் மேற் சொன்ன சட்டத்தின் கீழ் வரவுகள் வருமாறு :—

கால அளவு.	பெரு மொத்த வரவுகள். (ரூபாய் இலட்சத்தில்)
1975–76	1,56,60.61
1976–77	1,67,88.36

[1980 ஜுலை 11

கால அளவு	பெரு மொத்த வரவுகள், (ரூபாய் இலட்சத்தில்).
1977–78	1,78,45.59
1978–79	2,17,34.82
1979–80	2,58,27.90

1979–80 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வரவுகள், முந்தைய ஆண்டின் வரவுகளோடு ஒப்பிடுகையில் 19 சதவீதம் உயர்வைக் காட்டுகிறது.

14. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.—

1975–76 முதல் 1979–80 வரையிலான கால அளவில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப் பட்ட வருவாய் வருமாறு.—

கால அளவு.		பெரு மொத்த வரவுகள். (ரூபாய் இலட்சத்தில்)
1975–76		33,31.32
1976–77		41,90.62
1977–78	..	43,02.78
1978–79	..	49,84.25
1979–80	..	68,54.07

முந்திய ஆண்டு வருவாயைக் காட்டிலும் 1979–80 இல் 37 சதவீதம் அதிகரித்துள்ளது.

15. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

எண்ணெய் நிறுவனங்களால் விற்கப்படும் மோட்டார் வரி எண்ணெய்க்கு முதல் விற்பனயையின் மீது தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்பு

1980 ஜூலை 11]

சட்டத்தின் கீழ் ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது.

1975–76 முதல் 1979–80 வரை இந்த வகையில் கிடைத்த வருவாய்/விவரங்கள் வருமாறு :—

காலம்.	பெரு மொத்த வரவு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1975–76	19,72·22
1976–77	21,87·21
1977–78	22,17·12
1978–79	26,32·38
1979–80	32,08·76

முந்தைய ஆண்டில் கிடைத்த வருமானத்தைக் காட்டிலும் 1979–80 ஆம் ஆண்டில் 22 சதவீதம் அதிக வருமானம் கிடைத்தது.

16. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டமும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டமும்.

1975–76 முதல் 1979–80 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மேற்படி சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு :—

காலம்.	பெரு மொத்த வரவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)
1975–76 ..	17,48·39

கால அளவு	பெரு மொத்த வரவுகள். (ரூபாய் இலட்சத்தில்).
1977–78	20,81·70
1978–79	23,79·69
1979–80	26,71·13

முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1979–80 ஆம் ஆண்டு வசூல் 12 சதவீதம் உயர்ந்துள்ளது.

இவ்விரு சட்டங்களும், கேளிக்கை வரி விதிப்பை முறைப் படுத்துகின்றன. மக்கள் பணம் கொடுத்து அனுமதிச் சீட்டு பெற்று பார்க்கும் திரைப்படக் காட்சி, குதிரைப் பந்தயம் ஆகியவற்றிற்கு கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் சம்பந்தப் பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. தவிர, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியில் 90 சதவீதம் சம்பந்தப் பட்ட உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

1979–80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 31 ஆம் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் 5-A, 5-B, 16-B பிரிவுகளும், மற்றும் I, II ஆம் விவர அட்டவணைகளும் திருத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 51 ஆம் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் 3, 5 (B) மற்றும் 6ஆம் பிரிவுகளும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள் ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவும் திருத்திய மைக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் 10-AA என்ற புதிய பிரிவும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தில் 4-B என்ற புதிய பிரிவும் 1979 ஆம் ஆண்டு 51 ஆம் சட்டத்தின் மூலம் சேர்க்கப் பட்டுள்ளன.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இரண்டாம் நிலை நகராட்சிகள் வரை உள்ள திரைப்பட அரங்குகளில் ஒரு காட்சிக்கு ஆகும் மொத்த வசூல் குறிப்பிட்ட சதவீதத்தைக் கேளிக்கை வரியாக விதிக்கும் திட்டம் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

26ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இத் திட்டம் இரண்டாண்டு காலம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்துள்ளது. இத் திட்டத்தின்படி வருவாய் அதிகரிப்பு, வரி இணக்கம் செயலில் இல்லாத பகுதிகளில் திரைப்பட அரங்குகள் வசூல் அடிப்படையில் செலுத்தும் வரி வகையில் கிட்டும் வருமானம் ஆகிய புள்ளி விவரங்களை (1978–79ஆம் ஆண்டுக்குரியவை) ஒப்பிட்டுப் பார்த்து வருவாய் வாரியம் (விற்பனை வரி) மதிப்பீடு செய்துள்ளது. திரைப்பட அரங்குகளில் வசூல் அடிப்படையில் செலுத்துகின்ற வரி வகையில் கிடைக்கும் வருவாய் 12 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால், வரி இணக்கத் திட்டத்தின்கீழ் 11 சதவீதம் மட்டுமே அதிக வருவாய் கிடைத்துள்ளது.

17. தமிழ்நாடு 1935ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

சென்னையிலுள்ள கிண்டியிலும், உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. இந்தப் பந்தயத்தில் வின்ஸ், பிளேஸ், டபுள், டிரிபுள், தனாலா, போர்க்காஸ்ட், ஜாக்பாட் ஆகியவற்றுக்குப் பந்தயக் கணிப்புப் பொறியுடன் கட்டப்படும் பந்தயங்களுக்கும் சென்னையில் புக்மேக்கர்களுடன் கட்டப்படும் பந்தயங்களுக்கும் ஒரே அளவாக 20 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அவ்வரியின் மீது 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகிறது. உதகமண்டலத்தில் நடத்தப் பெறுகின்ற குதிரைப்பந்தயங்களைப் பொறுத்த மட்டில் 10 சதவீதம் வரியும் அவ்வரியின் மீது 5 சதவீதம்மேல் வரியும் விதிக்கப்படுகின்றன.

உதகமண்டலம், ஹைதராபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்கு, கிண்டியில் பந்தயப் பணம் கட்ட அனுமதிக்கப்படுகிறது. அவற்றுக்கு 10 சதவீதம் வரியும் அவ்வரியின் மீது 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகின்றன.

1975–76 முதல் 1979–80 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மேற்படி சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு :—

காலம்.	பெரு மொத்த வரவு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1975–76	1,11·39
1976–77	2,64·00
1977–78	2,70·02
1978–79	2,08·07
1979–80	2,66·08

1979–80ஆம் ஆண்டில் 28 சதவீதம் அதிக வசூல் கிடைத்தது.

18. 1979–80ஆம் ஆண்டுக் காலத்தில் வணிக வரித்துறையின் நிர்வாகம் வழக்கம்போல அரசு எதிர்பார்த்த அளவுக்கு நல்ல முறையில் அமைந்துள்ளது. வரி செலுத்துவோருக்கும் துறை அதிகாரிகளுக்குமிடையே நல்லுறவு காணப்படுகிறது. இதனால் வணிக வரிகள் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏதுவாகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[....19....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

வணிகவரிகள்—அறநிலையத் துறை.

மானியக்கோரிக்கை எண் 5.

முத்திரைத்தாள் நிர்வாகம்.

1. பொது.—முத்திரைத்தாள் வருவாய்க் கணக்கைப் பொதுவாக வருவாய்த்துறை வாரியம் நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முத்திரைத்தாள் வருவாய்க் கணக்கை கருவூல

1980 ஜூலை 11]

அதிகாரிகள் நிர்வகித்து வருகின்றனர். அவரவர் மாவட்டங்களில் முத்திரைத்தாள்களை விநியோகம் செய்யவும் விற்கவும் அவர்கள் பொறுப்புடையவராவர். பொதுமக்களுக்கு தேவைப்படும் முத்திரைத்தாள்களை வழங்க அந்தந்த மாவட்டங்களிலுள்ள கிளைக் கருவூலங்களில் போதுமான அளவிற்கு முத்திரைத் தாள்கள் இருப்பில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது கருவூல அதிகாரிகளின் கடமையாகும்.

2. முத்திரைத்தாள்களுக்கு தேவைக்குறிப்பாணை கொடுத்தலும், முத்திரைத்தாள்களை வழங்குதலும்.—20 ரூபாய்க்கு மேலாக மதிப்புடைய முத்திரைத்தாள்களுக்கான தேவைக் குறிப்பாணை ஆண்டுக்கொருமுறையும் 20 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் மதிப்புள்ள முத்திரைத்தாள்களுக்கான தேவைக் குறிப்பாணை நான்கு மாதங்களுக்கொருமுறையும் கொடுக்கப்படுகின்றன. எல்லா மாவட்டங்களுக்கும் உரிய தேவைக் குறிப்பாணைகளை சென்னை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் தொகுத்து அவற்றை நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் மையப்பண்டக சாலைக்கு அனுப்பி வைக்கிறார். இவ்வாறு தேவைக்குறிப்பாணைகளை ஒன்றாகத் தொகுக்கும்போது, எல்லா மாவட்டங்களிலும் வட்டத்தலைமையிடங்களிலும் போதுமான அளவிற்கு முத்திரைத்தாள்கள் இருப்பில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்படுகிறது. முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் கொடுத்தத் தேவைக்குறிப்பாணைகளின் பேரில் நாசிக் முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி, தம்மிடம் இருப்பு இருப்பதைப் பொறுத்து முத்திரைத்தாள்களை நேரடியாக கருவூல அதிகாரிகளுக்கு வழங்குகிறார். இப்போதெல்லாம் கருவூல அதிகாரிகள் நாசிக் அச்சகத்திடமிருந்து ஒழுங்காக முத்திரைத் தாள்களைப் பெற்று வருகின்றனர். முத்திரைத்தாள்கள் வழங்கப்படுவதை கருவூல அதிகாரிகளும் முத்திரைத்தாள் மைய அலுவலகத்தினரும் கண்காணித்து வருகின்றனர். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள்கள் பற்றாக்குறையாக இருந்தால் அவை அதிகமாக இருக்கிற மாவட்டத்திலிருந்து தேவைப்படுகிற மாவட்டத்திற்கு முத்திரைத்தாள்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

3. விற்பனை—(i) அரசு அலுவலகங்கள் மூலமாக.—கருவூல அதிகாரிகளும் கிளைக் கருவூல அதிகாரிகளும் அலுவலக நேரத்தின்போது பொதுமக்கள் கேட்கும் முத்திரை வில்லைகளையும் முத்திரைத் தாள்களையும் விற்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. உரிமம் பெற்ற மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட உதவிப்பதிவு அலுவலகங்கள் சிலவும் முன்னோடித் திட்டத்தின் கீழ் முத்திரைத்தாள் விற்கவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுவதால் இதனை மேலும் ஐம்பது உதவிப் பதிவு அலுவலகங்களில் அமுலுக்குக் கொண்டு வரும் பொருட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 11

(ii) உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலமாக.—கருவூல அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தவிர, உரிமம் பெற்ற முத்திரைத்தாள்கள் விற்பனையாளர்களும் பொதுமக்களுக்கு முத்திரை வில்லைகளையும், முத்திரைத் தாள்களையும் விற்கின்றனர்.

(iii) முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெறுதல்.—கிரயப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள், அறுதியாவணங்கள், பரிமாற்றப் பத்திரங்கள் ஆகியவைகளை எழுதிக் கொடுக்க முத்திரைத்தாள் சட்டத்தின் 41-ம் பிரிவின் கீழ் முத்திரை தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்றுக் கொள்ள உதவிப்பதிவாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. முத்திரைத்தாள் தீர்வை 1,000 ரூபாய்க்கு மேற்படுகிற பத்திரங்களைப் பொறுத்த மட்டில் முத்திரைத்தாள் தீர்வையை ரொக்கமாக கருவூலத்தில் செலுத்திவிட்டு அதற்குரிய செலுத்துச் சீட்டை அப்பத்திரங்களுடன் பதிவுக்காகக் கொடுக்க அனுமதிக்கப்படுகிறது.

4. எழுத்து மூலம் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படுவதற்கு உரியனவாகும். இம் மாநிலத்தில் பல்வேறு ஆவணங்களுக்கு விதிக்கத் தக்க முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள் மேற்சொன்ன சட்டத்தில் விவர அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, உள்ளாட்சி மன்றங்களின் சட்டத்திற்கிணங்க, சில குறிப்பிட்ட ஆவணங்கள் தொடர்பாக சில சொத்துக்களுக்கு முத்திரைத்தாள் வரியோடு 5 சதவீதத்திற்கு மேற்படாத மேல்வரிக்கட்டணமும் விதிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப் பெற்ற வரி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது.

5. முத்திரைத்தாள்களின் ஒவ்வொரு வகையிலும் பெறப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய).
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்களின் வருவாய்.	30,57,73,553·05	27,62,1,400·90

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய).
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்களின் வருவாய்.	5,76,22,971·55	5,36,43,347·10
3. உண்டியலுக்கான முத்திரைத்தாள்களின் வருவாய்.	13,71,861·00	11,71,673·00
4. பசை தோய்த்த முத்திரைத்தாள்களின் மூலம் வருவாய். ..	1,99,21,219·95	1,71,50,980·95
5. ஏனைய வருவாய்	3,35,15,842·74	2,78,50,939.99
மொத்தம் ..	41,82,05,448·29	37,60,18,341·94

<u>திருப்பிச் செலுத்தப்படும் தொகைகள்.</u>

நீதித் துறை சாரா முத்திரைத்தாள்கள். ..	12,01,67,780·62	10,13,37,062·92
நீதித் துறை சார்ந்த முத்திரைத்தாள்கள் ...	14,69,794·83	17,81,855·07
மொத்தம் திருப்பிச் செலுத்தப்படும் தொகை.	12,16,37,575·45	10,31,18,917·99

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய)
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
செலவுகள்—		
1. முத்திரைத்தாள்கள் விற்பனையில் தள்ளுபடி.	40,05,905·22	34,69,232·72
2. பணியாளர்கள் செலவு	5,67,121·37	4,67,572·19
3. நாசிக்கில் உள்ள முத்திரைத்தாள் மையப் பண்டக சாலையிலிருந்து வழங்கப்பட்ட முத்திரைத்தாள்கள் மதிப்பு.	29,90,772·94	13,09,119·80
மொத்தச் செலவு ..	75,63,799·53	52,45,924·71
மொத்த வருவாய் ..	41,82,05,448·29	37,60,18,341·94
மொத்தச் செலவும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளும்	12,92,01,374·98	10,83,64,842·70
நிகர வருவாய் ..	28,90,04,073·31	26,76,53,499·24

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. முத்திரைத்தாள் வருவாய் நிர்வாகம் மனநிறைவு அளிப்பதாக உள்ளது.

7. தகுதியுடைய பொது அற நிறுவனங்களுக்கு முத்திரைத் தாள் தீர்வையில் ஒரு பகுதி அல்லது முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.